வெளியீடு 14-7-2005 Issued 14-7-2005

19 ... 600 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, பிப்ரவரி 7, 2005—தொகுதி 68—எண் 2

Monday the 7th February, 2005—Volume 68—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai-600 009

D
Y2ll,31 P05
P05.68.2
226629.

[Price Rs. 3.00

323/2005

7–2–2005

உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்–விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 181-226

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 6 மற்றும் 7) 226-295

2. **தகவல் கோரல்—**

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறித்து மத்திய அரசு வெளியிட்ட ஆணை 296-300, 301-303, 304-312

3. **அறிக்கைகள் அளித்தல்—**

(அ) அரசு உறுதிமொழிக் குழு 301

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 301,303

4. **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்**—தொடர்ச்சி 304,312-379

* திரு. ஆற்காடு நா. வீராசாமி 312-315,319, 332-356, 377

* மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 322, 323,328, 330,337-338, 351,356-376, 377

5. **அரசினர் தீர்மானம்—**

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் 380

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 381-385

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 25, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 பிப்ரவரி 7, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* **திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி*
*இன்பம் பயக்கும் வினை"*

இன்பம் தரக்கூடிய செயல் என்பது, துன்பம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் துணிவுடன் நிறைவேற்றி முடிக்கக் கூடியதேயாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**41—**

**நியாயவிலைக் கடை**

**•36033—திரு. ஜி. கோதண்டராமன்:**

*மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கஞ்சனூர் மதுரா கொரஅூர் கிராமத்தில் உள்ள உணவுப் பொருட்கள் வழங்கும் பகுதிநேரக் கடையை முழுநேரக் கடையாக மாற்றி அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

[2005 பிப்ரவரி 7

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. கோதண்டராமன், இருக்கையில் இல்லை.

*வினா எண் 42, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**42—**

## இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

***32837—திரு. மா. சின்னசாமி:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் வருவாய் மூலமாக பழநியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை தங்கள் அனுமதியோடு இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன். (அ) மற்றும் (ஆ) பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து பழநியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போது அத்தகைய பயிற்சிப் பள்ளியைத் தொடங்க தேவையுள்ளதா என்பது குறித்தும், அவ்வாறு தொடங்கப்பட்டால் அதனைத் தொடர்ந்து இயக்க இயலுமா என்பது குறித்தும் பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. சின்னசாமி, இருக்கையில் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகம்
226629.
சென்னை-600 009



2005 பிப்ரவரி 7]

*வினா எண் 43, திரு. ந. கணபதி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**43—**

## நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி

***41284—திரு. ந. கணபதி:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, திருவக்கரை சந்திரமௌலீஸ்வரர் கோயில் வளாகத்தில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடத்த அரசு வசதி செய்து தருமா?*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருவக்கரை, அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலுக்கு பக்தர்கள் கூட்டம் அதிகமாக வராததாலும், குக்கிராமமாக உள்ளதாலும், மேற்படி திருக்கோயில் வளாகத்தில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடத்த இயலாத நிலை உள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானத் திட்டமும், குடமுழுக்கு விழாவும், ஆதிதிராவிடர் காலனி கோயில்களுக்கு புனரமைப்பும் செய்த அம்மா அவர்களை தமிழக மக்கள் பாராட்டுவதை நாம் அனைவரும் அறிவோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில் பக்தர்கள் கூட்டம் குறைவாக வருகிறது என்று கூறினார். ஆனால், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து பௌர்ணமி தினத்தன்று சுமார் ஒரு இலட்சம் அளவிற்குப் பக்தர்கள் கூடுவதாலும், கோயிலில் ஜோதி தரிசனம் இரவு 12 மணிக்கு நடைபெறுவதாலும், பக்தர்கள் அதற்குமேல் அவர்களுடைய ஊர்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையினால் கோயிலில் தங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏனவே, மாண்புமிகு அமைச்சர்

[2005 பிப்ரவரி 7

அவர்கள் மறுபரிசீலனை செய்து நாட்டியாஞ்சலி நடைபெற வழிவகை செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருவக்கரை, அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில், சட்டப் பிரிவு 45(1)-ன்கீழ் இரண்டாம் நிலை செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மாதாந்திர பௌர்ணமி, மாதாந்திர அமாவாசை, ஆடிக் கிருத்திகை, காணும் பொங்கல், வருடப் பிறப்பு, தெப்ப உற்சவம் ஆகியவை இத்திருக்கோயிலின் முக்கியத் திருவிழாக்கள் ஆகும். சாதாரண நாட்களில் இத்திருக்கோயிலுக்கு சுமார் 250 பக்தர்கள் வருகை புரிகின்றனர். விழாக் காலங்களில் சுமார் 25 ஆயிரம் பக்தர்கள் வருகை புரிகின்றனர். இவ்வூர் மிகச் சிறிய குக்கிராமமாகும். எனவே, இக்கோயில் வளாகத்தில் நாட்டியாஞ்சலி நடத்திட சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை. விசேஷ நாட்களில் உபயதாரர்கள் மூலம் நாட்டியாஞ்சலி நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வருவார்களேயானால் இதற்கு திருக்கோயில் நிர்வாகம் அனைத்து ஒத்துழைப்பும் நல்கும் எனத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

*முற்பகல் 10-05*

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியிலுள்ள வக்ரகாளியம்மன் கோயில், சூரவம்சத்தைச் சேர்ந்த சமயாதேவி அவர்களால் 2400 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கோயில். அதற்குப் பின்னால், 1700 ஆண்டுகளுக்குப் பின்னால் அறுபதுகால் மண்டபம் பல்லவராஜா காலத்தில் கட்டப்பட்டது. அந்த மண்டபம் இப்போது செப்பனிட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது. எனவே, அதனையும் செப்பனிட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பௌர்ணமி, அமாவாசை, கிருத்திகை போன்ற நாட்களில் அங்கு மக்கள் கூட்டம் அதிகமாக வருகிறது என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பௌர்ணமி தினத்தன்று ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் அங்கே வருகிறார்கள். இரவு 12 மணிக்கு ஜோதியைக் கண்ட பின்னால் அந்தக் கோயிலில் கிரிவலம் வருகிறார்கள். கிரிவலம் வருகிற பாதை இருளாக உள்ளது. அந்தப் பாதையில் மின் விளக்கு, சாலை வசதி போன்ற வசதிகளை அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 பிப்ரவரி 7]

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலை அமைப்பது பற்றிச் சொன்னார்கள். ஆலயத்திற்குச் சொந்தமான இடம் இருந்தால் ஆலயத்தின் மூலமாகப் பொது நிதியிலிருந்து செய்யலாம். சாலை அமைப்பதற்கான அந்த இடம் உள்ளாட்சித் துறை அல்லது ஊராட்சி மன்றத்திற்குச் சம்பந்தப்பட்ட சாலையாக இருந்தால், சம்பந்தப்பட்ட தலைவர் மற்றும் அலுவலகத்திலே சொல்லி உடனடியாக அந்தச் சாலைகள் போடுவதற்கும், மின் விளக்குகள் போடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் மண்டபம் செப்பனிடப்பட வேண்டுமென்று சொன்னார். ஆலயத்தில் பொது நிதி இருக்குமேயானால் உடனடியாக உறுப்பினரவர்கள் சொல்லிய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாரியம்மனுக்கு உகந்த இசை என்று சொன்னால் உடுக்கை, பம்பையைக் குறிப்பிடுவார்கள். அந்த உடுக்கை, பம்பைக் கலை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகக் குறைந்து வருகின்றது. அந்தக் கலைஞர்களுக்கு அதிலே நாட்டமில்லாமல் இருக்கின்றது. அந்த உடுக்கை, பம்பைக் கலையை ஊக்குவிப்பதற்கும், இன்னும் அதிகமான நபர்கள் அதிலே கலந்துகொண்டு மாரியம்மனுக்கு உற்சாகத்தைத் தரக்கூடிய அந்த இசையைத் தோற்றுவிப்பதிலே அங்கம் வகிப்பதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல ஆலயங்களில் பல நிகழ்ச்சிகளை நடத்துகின்றார்கள். சில ஆலயங்களில் தெருக்கூத்துகள் நடத்துகின்றார்கள். சில ஆலயங்களில் நாடகங்கள் நடத்துகிறார்கள். சில ஆலயங்களில் பாட்டுக் கச்சேரிகள் நடத்துகிறார்கள். சில ஆலயங்களில் உடுக்கையும் அடிக்கிறார்கள்; தம்பட்டமும் அடிக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் உள்ள ஆலயங்களில் ஒவ்வொரு விதமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்றவர்கள், அவர்கள் வசதிக்கேற்ப நடத்திக்கொள்வதற்கு முன்வருவார்களேயானால் அரசு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு பி.கே. சேகர்பாபு.

[2005 பிப்ரவரி 7

**திரு பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவக்கரையில் சந்திரமௌலீஸ்வரர் கோயிலில் விழாக் காலங்களில் இலட்சக்கணக்கான பொதுமக்கள் கூடுவது இன்றைக்கு ஆன்மீகத்தின்பால் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் கொண்டுள்ள பற்றினை நிரூபிக்கின்ற வகையில் இருந்தாலும், இந்த ஊரிலே நாட்டியாஞ்சலி நடத்துவதற்குப் போதுமான இடவசதி இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அந்த ஊரிலே பிரசித்திபெற்ற கருங்கற்களாலான மண்டபம் ஒன்று இருக்கின்றது. அந்த மண்டபத்தைச் சீரமைத்து அதில் பௌர்ணமி போன்ற விழாக் காலங்களில் நாட்டியாஞ்சலி போன்ற நிகழ்ச்சிகளை நடத்த அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பே சொன்னோம். ஆலயத்தில் போதிய நிதி இல்லாத காரணத்தினாலே, முன்னாலே அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும், இப்போது பேசிய நம் மாண்புமிகு உறுப்பினரவர்களும் அந்த நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியை நடத்துவதற்கு நிதியைத் திரட்டுவார்களேயானால் அங்கு திருவிழாக் காலங்களில் அந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு அந்தத் துறையின் மூலமாக அனுமதி கொடுக்கப்படும் என்பதைத் தங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீங்கள் என்ன, கோயிலைப்பற்றியா கேட்கப் போகிறீர்கள்? திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடத்துவதுபற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் கோயில்களிலே நடைபெற்றிருக்கின்றனவா? எத்தனை இடங்களில் நடைபெற்றன? (குறுக்கீடு) அதையொட்டிய கேள்விதான். அந்த நிகழ்ச்சியினை நமது மாண்புமிகு அமைச்சரவர்கள்கூடத் தொடங்கி வைத்திருப்பார்கள். அப்படித் தொடங்கிவைத்தபோது நீங்கள் நாட்டியம் ஆடித் தொடங்கி வைத்தீர்களா என்பதுபற்றிகூட எனக்குத் தெரிய வேண்டிய அவசியம் இருக்கிறது. இருந்தாலும், ஒரே ஒரு விஷயம். கோயில்களில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அது வரவேற்கக்கூடியது என்றாலும் இப்போது இருக்கின்ற இந்தக் காலச் சூழ்நிலையில் அதையொட்டி அதிலே பயன்பட்டுக் கொண்டிருக்கின்ற விவசாயிகள், சுனாமி பாதிப்பு, வெள்ளம், வறட்சி பாதிப்புகளின் காரணத்தினாலே பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகள் நில வெளியேற்றம் செய்யப்படுகின்றார்கள். அதைத் தடுக்க வேண்டும். அதைத் தடுப்பதற்குரிய முயற்சியை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா எனவும் அறிய விரும்புகிறேன்.



2005 பிப்ரவரி 7]

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும். இருந்தாலும் நாட்டியாஞ்சலியை அமைச்சர் துவக்கினார்களா என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சியை இன்னும் நாங்கள் துவக்கவில்லை. அப்படி நீங்கள் துவக்குவதாக இருந்தால் உங்களுக்கு அரசின் அனுமதி தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பரத நாட்டியம் நம்முடைய தமிழகத்தினுடைய சிறப்பானதொரு கலை. ஆனால், இன்றைக்குச் சென்னையிலேகூட பல சபாக்களில் பரத நாட்டியம் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பரத நாட்டியக் கலை நம்முடைய தமிழ் மண்ணின் கலாச்சாரத்தை முன்னிறுத்துகின்ற ஒரு கலையாக இருக்கின்ற காரணத்தால், தமிழகத்திலே இருக்கின்ற கோயில்களில் பரத நாட்டிய நிகழ்ச்சிகளை அறநிலையத் துறையின் மூலம் நடத்த ஏற்பாடு செய்து, அந்தக் கலையை வளர்க்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இதற்காகத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 44, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

44—

## ஓமியோபதி மருத்துவம்

***2396–திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி மருத்துவத்தில் மிகவும் சிறப்பாக குணமாகும் நோய்கள் யாவை?

(ஆ) அம்மருத்துவத்தில் அறுவை சிகிச்சை செய்யும் வாய்ப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மூட்டுவாத நோய், மூலம் மற்றும் பௌத்திரம், அனைத்து சரும நோய்கள், ஆஸ்துமா, அனைத்து வகை கட்டிகள் போன்ற நோய்கள் ஓமியோபதி மருத்துவத்தில் சிறப்பாக குணமாகும் நோய்கள் ஆகும்.

(ஆ) ஓமியோபதி மருத்துவ பாடத் திட்டத்தில் அறுவை சிகிச்சை பற்றிய பாடம் உள்ளது. ஆனால், அறுவை சிகிச்சை செய்ய வாய்ப்புகள் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓமியோபதி வைத்தியத்தின் மூலமாக பல்வேறு சரும நோய்கள் குணமாக்கப்படும் என்று அமைச்சரவர்கள் பதிலுரையிலே சொன்னார்கள். அதேபோல உயிர்க்கொல்லி நோய்களாகிய எய்ட்ஸ், புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு போன்ற நோய்கள் ஓமியோபதி வைத்தியத்தின் மூலமாக குணமாக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? ஆமெனில், அதைப்பற்றி ஆய்வு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவத்தில் கீழ்க்கண்ட நோய்களை சிறப்பாகவும், பூரணமாகவும் குணப்படுத்த இயலும் என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மூட்டுவாத நோய், மூலம் மற்றும் பௌத்திரம், அனைத்து சரும நோய்கள், ஆஸ்துமா, சிறுநீரகம் மற்றும் பித்தப்பை கற்கள் ஆகியவை சம்பந்தமான நோய்கள், அனைத்து வகை கட்டிகள், ஒற்றைத் தலைவலி மற்றும் இதர நாட்பட்ட தலைவலிகள், சைனஸ் வியாதிகள், வலிப்பு மற்றும் தொடர்பான நோய்கள், மகளிர் நோய்கள், குழந்தைகளின் குறுகிய கால நோய்கள், மன நோய்கள் மற்றும் இடையிலே ஏற்படும் மனக்கோளாறுகள், நைராய்டு கோளாறுகள், நரம்புக் கோளாறுகள் ஆகிய நோய்களெல்லாம் ஓமியோபதி மூலமாக குணப்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை ஆராய்ந்து அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமமுடைய அமைச்சரவர்கள் நல்ல பதிலை அளித்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி. இருப்பினும், இந்த ஓமியோபதி மருத்துவமனை மாவட்ட மருத்துவமனைகளில் மட்டும்தான் செயல்படுகின்றது. வட்ட அளவிலும், அரசு மருத்துவமனைகளிலும் ஓமியோபதி பிரிவைத் தொடங்க அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே மாவட்ட வாரியாகவும், மருத்துவக் கல்லூரிகளிலே கிட்டத்தட்ட 5 மருத்துவக் கல்லூரிகளிலும், அதேபோல தாலுகாக்களிலே கிட்டத்தட்ட 9 தாலுகாக்களிலேயும் இந்த மருத்துவமனைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே 2002-2003 ஆம் ஆண்டு 89-ம், 2003-2004 ஆம் ஆண்டு 25-ம், 2004-2005 ஆம் ஆண்டு 35-ம் இந்திய மருத்துவத்திற்கு—சித்தா, யுனானி அதுபோன்று மற்ற மருத்துவத்திற்கும் முன்னுரிமை கொடுத்து அத்தனை தாலுகா மருத்துவமனைகளிலும் இப்பொழுது இயங்கி வருகின்றன. ஓமியோபதி மருத்துவமனைகளைப் பொறுத்தவரையிலே தற்சமயம் 9 தாலுகா மருத்துவமனைகளிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. வருகின்ற ஆண்டுகளிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, கண்டிப்பாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் (குறுக்கீடு) என்ன கணேசன், நன்றியா? (குறுக்கீடு) நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

[2005 பிப்ரவரி 7

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடப்பாடி வட்டார மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவைத் தொடங்க அரசு நடப்பு நிதியாண்டில் ஆவன செய்யுமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே ஏற்கெனவே ஆத்தூரிலே ஓமியோபதி மருத்துவமனை – (குறுக்கீடு) பதில் சொல்லவே விடமாட்டேன் என்கிறீர்களே. ஓமியோபதி மருத்துவமனை – இயங்கிக்கொண்டிருக்கிறது. அதேபோல ஓமியோபதி மருத்துவமனை இந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலும், நீங்கள் கேட்டதுபோல எடப்பாடியிலும் தொடங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை வேண்டி கண்டிப்பாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரில் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் சுமார் 80 ஆண்டுகளாக இயங்கி வந்த அரசு Petland Hospital-ஐ இப்பொழுது மருத்துவக் கல்லூரி வரக்கூடிய இடமான அடுக்கம்பாறைக்கு சுமார் 8 கி.மீ. தொலைவிற்கு எடுத்துச் சென்றுவிட்ட காரணத்தால், வேலூரில் இருக்கக்கூடிய பெண்கள் பிரசவத்திற்கும், அதேபோல விபத்துக்குள்ளானவர்கள் மற்றவர்களெல்லாம் அவதிப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒரு பெரிய Hospital கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய்க்கு மேலே கட்டடங்கள் கட்டப்பட்டு உள்ளன. நான்கூட சென்ற ஆண்டு 14-1/4 இலட்சம் ரூபாயை அம்மருத்துவமனைக்குக் கொடுத்து இப்பொழுது பிரசவ வார்டு கட்டப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவமனையை எடுத்துச் சென்றுவிட்ட காரணத்தால் இப்பொழுது வேலூர் மக்கள் வசதியை இழந்து, பாவம், அவர்கள் போராடத் தொடங்கியிருக்கிற காலகட்டத்தை இப்பொழுது எட்டியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மருத்துவக் கல்லூரி வரக்கூடிய, Medical Council of India-வுடைய rules and regulations-ஐ நீங்கள் எப்படி அதை நிவர்த்தி செய்வீர்களோ செய்யுங்கள். நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. அந்த மருத்துவக் கல்லூரியை 1991-லிருந்து போராடிப் பெற்றவன் நான். ஆகவே, எனக்கு அந்தக் கஷ்டம் தெரியும். ஆனால்



2005 பிப்ரவரி 7]

இப்போது Townலே இருக்கக்கூடிய மக்கள், அந்த வசதியைப் பெறக்கூடிய அளவுக்கு, மருத்துவர்களையும், அதேபோல் செவிலியர்களையும், போதிய மருந்துகளையும், கருவிகளையும் வைத்து, 80 ஆண்டுகாலம் தொடர்ந்து இயங்கி வந்த அந்த வேலூர் Government Petland Hospital-ஐ, எந்தவித பாதிப்புக்கும் உள்ளாக்காமல், எப்படி சென்னை மருத்துவக் கல்லூரி, இராயப்பேட்டை மருத்துவக் கல்லூரி, தண்டையார்பேட்டை மருத்துவமனை என்பவற்றிற்கெல்லாம் Peripheral Hospital என்று பெயர் வைத்திருக்கிறார்களோ, அதேபோல அதை புறநகர் மருத்துவமனையாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இயக்குவதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதுவரையிலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே, அதுவும் குறிப்பாக, மருத்துவத் துறைக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மருத்துவக் கல்லூரிகளினுடைய நலனைக் கருதி, கிட்டத்தட்ட 240.40 கோடி ரூபாயை ஒதுக்கி, எந்த அரசும் செய்யாத சாதனையை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், இதுவரையிலே இயங்கிக்கொண்டிருக்கிற மருத்துவக் கல்லூரிகளினுடைய எண்ணிக்கை, கிட்டத்தட்ட கழிந்த ஆண்டுக்கு முந்தைய ஆண்டு 11-ஆக இருந்தது, 12-ஆக ஆகியிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிட்டத்தட்ட ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் 52 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இதே பிரச்சினை, நாகர்கோவிலில் உள்ள கோட்டாறு மருத்துவமனையிலேயும் எழுந்தது. அன்றையதினம் நாங்கள் கூறும்போதுகூட, அங்கே இருக்கக்கூடிய ஆசாரிப்பள்ளம் மருத்துவமனைக்கு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்ற வேண்டுகோளுக்கேற்ப Medical Council of India-வின் வேண்டுகோளுக்கேற்ப- சட்டத்திலே என்ன சொல்கிறது என்றால், ஒரு வருடத்திற்கு 100 மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்றால், ஒரு மாணவனுக்கு 8 O.P. வரவேண்டும். ஆக, 100 மாணவர்கள் என்றால், நாள் ஒன்றுக்கு 800 out patients வரவேண்டும். இருந்தபோதிலும், ஒரு

மாணவனுடைய படிப்பினைக் கருதி — (குறுக்கீடு) இருங்கள், பதில் சொல்லிவிடுகிறேன் — உங்களுடைய கோரிக்கையினையும் கருதி, இருக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையையும் கருதி — அங்கே இருக்கக்கூடிய மக்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள் — ஆகவே, இப்போது இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய மருத்துவமனையிலே, ஒருசில மருத்துவர்கள், தற்சமயம் இருக்கிறார்கள். அதேபோல, செவிலியர்களும் இருக்கிறார்கள் என்று நீங்களே கூறியிருக்கிறீர்கள். இருந்தபோதிலும், அதற்கும் அரசு ஆராய்ந்து, ஆய்வு செய்து, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) அதுதான் Minister சொல்லிவிட்டாரே! (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு துணைக் கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. ஞானசேகரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் கேட்டுவிடுகிறேன். அடுத்து, அவர் கேட்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. ஞானசேகரன், நீங்கள் அடுத்து கேளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவத்திற்கு இருக்கிற முக்கியத்துவத்தைக் கருதி, தமிழக அரசு அதை ஒரு தனிப் பிரிவாக எடுத்து, அதை வளர்ப்பதற்கு, இப்போது ஒட்டுமொத்தமாக Indian Medicine என்ற ஒன்றிலே சேர்த்து வைத்திருப்பதை விலக்கி, இதற்கு ஒரு தனி Directorate-ஐ ஏற்படுத்துவதற்கோ அல்லது குறைந்தபட்சம் இப்போது Indian Medicine Directorate-க்குக் கீழே, ஒரு Joint Director பொறுப்பிலேயே, இந்த ஓமியோபதி பிரிவை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவத்தைப் பொறுத்தவரையிலே,



இப்போது இயங்கிக்கொண்டிருக்கின்ற Directorate-க்குக் கீழேதான் ஓமியோபதி, சித்தா, யுனானி போன்ற இயற்கை வைத்தியப் பிரிவுகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஓமியோபதியைப் பொறுத்தவரையிலே, ஓமியோபதி கவுன்சில் என்று தனியாகத் துவக்கி, அதற்கு தலைவர் இருந்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் கூறியதைப்போல, Additional Director-ஐப் போடுவதற்கான கோப்புகள் இப்போது பரிசீலனையில் உள்ளன. நீங்கள் கேட்பதைப்போல, தனியாக Directorate என்று ஆரம்பிக்க முடியாத சூழ்நிலையிலே, தனியாக ஒரு Additional Director போடுவதற்கு, அரசு ஆராய்ந்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது ஒரு மாணவனுக்குக் குறைந்தது 8 out patients வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய வேலூரைப் பொறுத்தவரையிலே, அமைச்சருக்கே தெரியும். கிட்டத்தட்ட 1600 out patients அங்கே வருகிறார்கள். அந்த அளவுக்கு நிறைய out patients இருக்கிற காரணத்தினாலே, 100 மாணவர்கள் என்று கணக்கு எடுத்தாலும்கூட, உங்களுக்கு நிறைய out patients கிடைக்கக்கூடிய சூழலில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக துறையினுடைய செயலாளர்களுக்கும், அந்த மருத்துவக் கல்லூரி இயக்குநருக்கும் ஆணையிட்டு, நாளை முதலே அந்த Government Petland Hospital முழு அளவிலே உடனடியாக இயங்குவதற்கு ஆணையிடுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் சித்த மருத்துவத்தில்தான் இப்போது ஆர்வம் கொண்டுள்ளனர். நகர்ப்புறங்களிலேயும், கிராமப்புறங்களிலேயும், அலோபதி மருந்தைச் சாப்பிடுவதைவிட—உடலிலே side effect வருகிறது;

[2005 பிப்ரவரி 7

பக்கவாதம் வருகிறது என்பதற்காக வேண்டி, இதுமாதிரி சித்த மருத்துவத்திலே மக்கள், கியூவிலே நின்று மருந்துகளை வாங்குவதற்கு முயற்சி எடுத்து வருகிறார்கள். ஆனால், பல இடங்களிலே வட்ட மருத்துவமனையிலே சித்தா பிரிவுகள் இருந்தும் மருத்துவர்கள் கிடையாது. அதற்குக் காரணம் கேட்டால், அவர்கள் சொல்கிறார்கள், தமிழ்நாட்டிலே மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, வருகிற நடப்பாண்டிலேயாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து, சித்த மருத்துவர்கள் பயிற்சியளிப்பதற்கு, அவர்கள் டாக்டருக்குப் படிப்பதற்கு அவர்களுக்குப் புதிய திட்டங்கள் ஏதும் அரசு வைத்திருக்கிறதா? அப்படி அவர்களுக்கு இந்த மாதிரி மருத்துவர்- டாக்டர் பட்டம் வழங்கி . . .

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனிக் கேள்வி போடுங்கள். ஏனென்றால் பெரிய கேள்வியாக இருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** ஓமியோபதிதான். ஓமியோபதிதான் சார். சித்தா, ஓமியோபதிதான், இரண்டும்தான். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சித்தாவைப் பொறுத்த அளவிலே நமது தமிழகத்திலே கிட்டத்தட்ட (குறுக்கீடு) பதில் கேட்டுக்கொள்ளுங்கள் - A Class, B Class, C Class and Enlisted Class என்று நாங்கள் பிரித்து வைத்திருக்கிறோம். A Class-ஐப் பொறுத்த அளவிலே 5 வருடம் டிகிரி முடித்தவர்கள் A Class ஆகவும், B Class ஆக கிட்டத்தட்ட 2,245-ம், C Class ஆக 24 பேரும், Enlisted Class ஆக 2,410 பேரும் இருக்கிறார்கள். கடந்த 1998-லே சித்தா என்பது, அதாவது அவர்கள் குடும்ப ரீதியாக வரக்கூடியவர்கள்தான் இந்தத் தொழிலை செய்துகொண்டு வர வேண்டும். (குறுக்கீடு) ஆமாம். பரம்பரையாக குமாரதாஸ் போன்றவர்கள் எல்லாம். ஆனால், 1998-லே ஒரு சின்ன குளறுபடி நடந்துவிட்டது. எப்படியென்றால் அந்த டாக்டரிடம் பயின்றவர்களும் register பண்ணிவிட்டார்கள். இந்திய Council, அதாவது மத்திய அரசாங்கம் அதை ஒத்துக்கொள்ளவில்லை. இந்த ஆண்டுதான் அந்த expiry date முடிகிறது. முடிந்தவுடன் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இருக்கக்கூடிய அத்தனை தாலுகா மருத்துவமனைகளிலும், non-taluk மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவர்களை நியமிப்பதற்கு



2005 பிப்ரவரி 7]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 45, திரு. டி.பி. பொன்னம்பலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

45—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**•48756—திரு. டி.பி. பொன்னம்பலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, பூதக்குடி, வயலூர், மதுரை கிழக்கு ஊராட்சி, கருப்பாய் ஊரணி, பனைக்குளம் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதி, பூதக்குடி, வயலூர், கருப்பாய் ஊரணி மற்றும் பனைக்குளம் கிராமங்களில் புதிய அரசு சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்பாய் ஊரணி பகுதியிலே சுமார் 10, 11 ஊராட்சிகளுக்கு உட்பட்ட 30, 35 கிராமங்கள் உள்ளன. சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் சுமார் 15, 20 கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. சுமார் 40 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, இந்த நிதியாண்டில் இல்லாவிட்டாலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மறுபரிசீலனை செய்து, கருப்பாய் ஊரணி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2005 பிப்ரவரி 7

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டு நிதிநிலைக்கேற்ப கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டுமென்று சொல்லி, ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னாலே 10 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டி வைத்து, அதற்குரிய நிலங்களையும் தயார் நிலையில் வைத்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு, சோழவந்தான் தொகுதி, சித்தாலங்குடி என்கிற கிராமத்தில் இதுபோல ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலே பணம் கட்டி, இடமும் தயார் நிலையில் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 1,115 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அதற்கு மேலாக கிட்டத்தட்ட 8,682 துணை சுகாதார நிலையங்கள்— sub-centres இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற உடனே ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, குக்கிராமங்களில் இருக்கக்கூடிய நோயாளிகளுக்கு உடனடியாக மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலே, கிட்டத்தட்ட 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 1,115 ஆரம்ப சுகாதார நிலையங்களும், அதுபோக 104 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களும் இப்போது தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும், வருகின்ற ஆண்டு நிதிநிலைக்கேற்ப உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான மருத்துவர்கள் இல்லாமல் இருக்கிற நிலை இருக்கிறது. குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே இருக்கிற உள்ளிக்கோட்டை, திருமக்கோட்டை,



2005 பிப்ரவரி 7]

பகுதிகளிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருத்துவர்கள் நிரந்தரமாக இல்லாத குறைபாடு இருக்கிறது. அதேபோல, கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியிலே இருக்கிற மருத்துவமனையிலேயும் அப்படிப்பட்ட குறைபாடு இருக்கிறது. பெண் மருத்துவர்களே இல்லை. ஆகவே, மருத்துவர்கள் நியமனம் செய்வதற்கான தனித்த முயற்சியை அரசு மேற்கொள்ள இருக்கிறதா? அதேபோல, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்கான கருத்துருக்கள் கேட்கிறபோது பல விதிமுறைகள் சொல்லப்படுகின்றன, மத்திய அரசு விதிமுறைகள். அதற்கு இடமளிக்காத சூழ்நிலையில் நம்முடைய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் அமைக்காமல், அரசு மருத்துவமனை என்ற அடிப்படையிலே சில தேவையான இடங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான வகையில் சில ஏற்பாடுகளைச் செய்வதற்கான கருத்துரு உருவாக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவர்களைப் பொறுத்தவரையிலே, கடந்த ஆண்டும் இந்த இரண்டு ஆண்டுகளும் சேர்த்து கிட்டத்தட்ட 3 மருத்துவக் கல்லூரிகளை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளைக் கொண்டுவர வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இங்கே உள்ள மருத்துவர்களை இப்பொழுது இடமாற்றம் செய்து அந்த மருத்துவக் கல்லூரிகளிலே அவர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். நீங்கள் சொல்வது போல், மருத்துவர் பணியிடங்கள் அங்கே பல இடங்களில் காலியாக இருப்பது உண்மைதான். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த இரு வாரங்களுக்கு முன்னாலே ஒட்டுமொத்தமாக தமிழகத்திலே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகளாக இருந்தாலும், மருத்துவமனைகளாக இருந்தாலும், அதேபோல அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும், அத்தனைக்கும் மருத்துவர்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அதேபோல..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள்.

[2005 பிப்ரவரி 7

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அதேபோல, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையிலே—உங்களுக்கு நன்றாகத் தெரியும்—அது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருந்தாலும், நீங்கள் கூறியதுபோல ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனையாக இருந்தால்தான் அரசு மருத்துவமனையாக ஆரம்பிக்க முடியும். எடுத்த உடனே அரசு மருத்துவமனையாக ஆரம்பிக்க முடியாது. ஆகவே, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அத்தனையும் படிப்படியாக அரசு மருத்துவமனைகளாக உயர்த்தப்படுகின்றன. அப்படி உயர்த்தப்படும்போது நீங்கள் கேட்ட கோரிக்கை கண்டிப்பாக நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கும், துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கும் வரைமுறை, norms என்ன என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** தலைவர் அவர்களே, அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு கிட்டத்தட்ட 30 ஆயிரம் மக்கள்தொகை இருக்க வேண்டும். Sub-centre-ஐப் பொறுத்தவரையிலே 5 ஆயிரம் மக்கள்தொகை இருந்தால் போதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. தற்போது இந்த அரசு, பேரூராட்சிகளை சிறப்பு ஊராட்சியாகவும், நகராட்சியாகவும் மேம்படுத்தியிருக்கிறது. அதேபோன்று என்னுடைய தொகுதியிலே திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் துவாக்குடி பேரூராட்சி, நகராட்சியாக இப்போது தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கே இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையம் தொடர்ந்து ஆரம்ப சுகாதார நிலையமாகவே இயங்குமா அல்லது நகராட்சி மருத்துவமனையாக மேம்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியாக மாறிவிட்டதால் அது கண்டிப்பாக நகராட்சி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும்.



2005 பிப்ரவரி 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருத்துவ வசதிகள் குறைவாகவும் கட்டடங்கள் மிகப் பழுதடைந்துள்ள நிலையிலும் உள்ளன. 20 ஆண்டு காலம் ஆகியும் பழமைவாய்ந்த அந்தக் கட்டடங்கள் எல்லாம் பராமரிக்கப்படாமல் இருக்கின்ற நிலையில், சில கட்டடங்களுக்கு இந்த ஆண்டு கூடுதலாக நிதியினை ஒதுக்கி, அந்தக் கட்டடங்களை எல்லாம் பராமரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பராமரிப்பதற்காக கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. கடந்த 2 நாட்களுக்கு முன்னால் மேலும் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய கோரிக்கை, எந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பழுதடைந்திருக்கிறது என்பதைச் சொன்னால், அதற்குக் கண்டிப்பாக அரசினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்த இந்தக் கேள்விக்கு அமைச்சர் பல்வேறு விளக்கங்களை இங்கே அளித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டட வசதி மற்றும் பாதுகாப்பின்மையைக் கருதி சுற்றுச்சுவர் கட்டுவது போன்ற நிலை பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கிறது. குறிப்பாக, எனது கோவில்பட்டி தொகுதியைப் பொறுத்தமட்டிலும் கீழஈரால் பகுதியிலே செயல்பட்டு வருகின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இல்லாத சூழ்நிலையிலே, அந்தக் கட்டடங்கள் பராமரிக்கப்படாத சூழ்நிலையிலே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பாதுகாப்பதற்காக சுற்றுச்சுவர் கட்ட வேண்டிய ஒரு நிலையும் இருக்கிறது. அரசு வருகிற நிதியாண்டிலே கவனம் கொண்டு பணியாளர்களை நியமித்தும், இதர பணிகளை நிறைவேற்றுவதற்கும் ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

[2005 பிப்ரவரி 7

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மருத்துவர்கள், செவிலியர்களுக்கான விளக்கங்களைத் தெளிவாகத் தெரிவித்துள்ளேன். கோவில்பட்டியைப் பொறுத்த அளவிலே உங்களுக்கு நன்றாகத் தெரியும். அரசினுடைய கவனத்திற்கு வந்துள்ள கோவில்பட்டி மருத்துவமனைக்கு கிட்டத்தட்ட 20.5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதை நீங்களும் பார்த்திருக்கிறீர்கள். இப்பொழுதுதான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மதிற்சுவர் கட்டவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறீர்கள். அதையும் அரசு கனிவுடன் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதுபோல மாநகரங்களிலும், நகரங்களிலும் ஒரு இலட்சம் மக்கள்தொகைக்கு நகர சுகாதார மையங்கள் அமைக்கப்படுமென்று ஏற்கெனவே இந்த அவையில் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதனுடைய பணிகள் எப்படி இருந்துகொண்டிருக்கின்றன, சென்னை மாநகரத்திலே ஒரு இலட்சம் மக்கள்தொகைக்கு ஏற்ப நகரங்களில் சுகாதார மையங்கள் இதுவரை அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்ற விவரத்தை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியைப் பொறுத்த அளவில் அரசினுடைய கவனத்திற்கு இப்பொழுது கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கண்டிப்பாக ஆய்வு செய்து அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துவது என்பது, அரசு மருத்துவமனை ஆக்குவது என்பது, அடிப்படையே என்னவென்று சொன்னால், வட்ட அலுவலகத்திலே அப்பொழுது எல்லாம் ஒவ்வொரு தாலுகா சென்டரிலே அரசாங்க மருத்துவமனைகள் எல்லாம் இருந்தன. கிராமப்புறத்திலே மருத்துவர்கள் இல்லாத கால கட்டங்களில் 20, 25 ஆண்டு காலத்திற்கு முன்னால் ஆரம்ப சுகாதாரம் என்கிற



2005 பிப்ரவரி 7]

நிலையிலே கிராமப் பகுதியிலே அந்த மருத்துவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத் துவக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு ஒவ்வொரு ஒன்றியத் தலைநகரத்திலேயும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இன்றைக்கு மக்கள்தொகை அதிகமாக இருக்கிறது. நாடு வளர்ந்திருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத் தலைநகரும் வட்டத் தலைநகர் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. எனவே, ஒவ்வொரு ஒன்றியத் தலைநகரத்திலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனை ஆக்குவதற்கு அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? ஏனென்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழக்கறிஞராக இருக்கின்ற காரணத்தினால் சாமர்த்தியமாக பதில் சொல்கிறீர்கள். ஆனால் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துவதைவிட ஒவ்வொரு ஒன்றியத் தலைநகரிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களை இந்த அரசாங்கம், அரசு மருத்துவமனையாக ஆக்குகிற திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாமர்த்தியமாக பதில் சொல்கிறார் என்று சொன்னார்கள். சாமர்த்தியமாக கேள்வி கேட்கும்போது கண்டிப்பாக சாமர்த்தியமாகத்தான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பார்க்கும்பொழுது தமிழகத்தினுடைய முதல்வர், இதுவரையிலும் எந்த அரசும் செய்யாத சாதனையை தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கிராமப் பகுதி மக்களுடைய நலனைக் கருதி, கிராம மக்கள் அடிக்கடி அங்கேயிருந்து வரமுடியாத சூழ்நிலையைக் கருதித்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிட்டத்தட்ட இதுவரையிலும் எந்த அரசும் செய்யாத சாதனையை, 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. நீங்கள் கூறியதுபோல் தாலுகா மருத்துவமனைகள் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே கிட்டத்தட்ட 158 தாலுகா மருத்துவமனைகளும், 80 non-taluk மருத்துவமனைகளும், அதேபோல் 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இருக்கின்றன. தாலுகா மருத்துவமனையைப் பொறுத்த வரையிலே அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்களுக்கு, அங்கே இருக்கக்கூடிய செவிலியர்களுக்கு பல்வேறு வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாலுகாவிலும் இருக்கக்கூடிய மருத்துவர்கள், அதேபோல் வட்டம், வட்டம் சாரா மருத்துவமனையும்

சிறந்த முறையிலே செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு மேலாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையிலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே முதன்முதலாக 600 கோடி ரூபாயை உலக வங்கியின் மூலம் பெற்று, இன்றையதினம் இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள் மற்றும் non-taluk மருத்துவமனைகள் அத்தனையையும் தரம் உயர்த்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் 600 கோடி ரூபாயைப் பெற்று இருக்கிறார்கள் என்பது வரலாற்றிலே சிறப்புமிக்க துறை சுகாதாரத் துறை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். ரெங்கநாதன்.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இருக்கக்கூடிய dispensary, கிராம மருந்தகம் என்று சொல்லக்கூடிய இடங்களிலெல்லாம் பல இடங்களிலே மருந்துகள் போதுமான அளவிற்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய அதிகமான மக்கள்தொகை பெருக்கத்தை கணக்கில் எடுத்து, அவற்றை எல்லாம் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கோ, இல்லை அந்தக் கிராம மருந்தகத்தை மிகச் சிறப்பாக நடத்துவதற்கோ அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றிலே இதுவரையிலும் இல்லாத அளவிற்கு 1-7-1994-லே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் முதல்வராக இருக்கும்பொழுது Tamil Nadu Medical Services Corporation, தமிழ்நாடு மருத்துவப் பணிக் கழகம் என்ற ஒரு கழகத்தை நிறுவி அதன் மூலம் இன்றையதினம் மருந்துகள் வாங்கப்படுகின்றன. ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 107 கோடி ரூபாய்க்கு மருந்துகள் வாங்கப்படுகின்றன. அத்தனை மருந்துகளும், மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தலைமை மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தாலுகா மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தாலும் சரி, அத்தனை மருத்துவமனைகளிலும் மருந்துகள் தாராளமாகக் கிடைக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களை எந்த மருத்துவமனையிலே அது போன்ற குறைபாடு இருக்கிறது என்று தயவுசெய்து சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.





*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெறிநாய்க் கடி மருந்து போடப்படாததால், மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஒரு நாளைக்கு 500, 600 பேருக்கு மேல் வந்து அவர்களுக்கு மருந்து கொடுப்பதிலே தாமதம் ஏற்படுகிறது என்கின்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, வெறிநாய்க் கடி மருந்துகளை ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயும் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா? அல்லது வெறி நாய்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாய்க்கடி மருந்தைப் பொறுத்த அளவிலே இதற்கு முன்னாலே தகுந்த விளக்கத்தைக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற மருந்துகளுக்குத் தட்டுப்பாடு வரக் கூடாது என்பதற்காக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னால் இதற்கான சிறப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டு அத்தனை மருத்துவமனைகளிலும் மருந்துகள் கிடைக்க வேண்டுமென்பதற்கான ஒரு உத்தரவினை இட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாவட்ட மருத்துவமனைகள், அதுபோல இருக்கக்கூடிய தாலுகா மருத்துவமனைகள், மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இப்போது மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**46—**

## தாட்கோ பயிற்சி மையக் கட்டடங்கள்

**•37526—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் தாட்கோ பயிற்சி மையக் கட்டடங்கள் செயல்படாமல் உள்ளதால் இவற்றை

[2005 பிப்ரவரி 7

ஊராட்சி பராமரித்துப் பயன்படுத்திக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில் மீஞ்சூர் ஒன்றியத்தில் உள்ள தாட்கோ பயிற்சி மையக் கட்டடங்கள் தாட்கோவினால் கட்டி முடிக்கப்பட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுவிட்டது. இக்கட்டடங்களை ஊராட்சி பராமரித்துப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பது தொடர்பாக மேற்படி வாரியம்தான் முடிவு எடுத்திட வேண்டும்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் தலைமையிலான அமைச்சர்கள் பல்வேறு தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு, பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டுவருகிறார்கள். உதாரணத்திற்கு, நேற்றைக்கு முன்தினம் பேசுகின்றபோதுகூட எங்களுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிடுகின்றபோது 7 ஆயிரம் மகளிருக்கான நிலம் வழங்கும் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதே போல், என் தலைமையிலான தமிழ்நாடு கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக மாவட்ட அளவிலான இளைஞர்களுக்கு தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி கடந்த ஆட்சியின்போது 50 ஆட்டோக்களை நான் வழங்கியிருக்கிறேன். அதேபோல், இந்த ஆட்சியிலும் 65 ஆட்டோக்களை வாங்கி 5 பெண்கள் உட்பட, அதை விநியோகிக்கின்றபோதுகூட தமிழக முதல்வர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு நலத் திட்டங்களை அறிவித்து அங்கே வந்தபோது அவர்கள் கையால்தான் அவை வழங்கப்பட்டன. ஆனால், அதே நேரத்தில் தாட்கோ மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வேலைவாய்ப்பு பயிற்சிக்கு ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் முறையாக, சரியாக குறைந்தபட்சம் 3, 4 ஆண்டுகள்கூட செயல்படுவதில்லை. கடந்த ஆட்சியின்போதுதான், கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான் பொன்னேரி தொகுதியில் இப்படி மேலே குறிப்பிட்ட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. பயிற்சிக்காகவும், வேலைவாய்ப்புக்காகவும் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் சில வருடங்கள்கூட முறையாக நடைபெறாமல் இழுத்து மூடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அங்கேயிருப்பது நான் குறிப்பிட்டதுபோல...



2005 பிப்ரவரி 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணன், கேள்விக்கு வாருங்கள். கேள்வி என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** சுருக்கிச் சொல்லிவிடுகிறேன். தலைவர் அவர்களே, கடப்பாக்கம் ஊராட்சியில் நெய்தவாயல், தமிழ்க்குறிஞ்சூர், திருக்குறிஞ்சூர் இப்படி 9 கட்டடங்கள் இன்றைக்கும் பராமரிக்கப்படாமல் கிடக்கின்றன. அதனுடைய மதிப்பு ரூ. 40 இலட்சம் என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட நிலை மாறுவதற்காக திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றபோது சரியாக, முறையாக இயங்குவதற்கு கண்காணிப்பதோடு, இந்தக் கட்டடங்களை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பயிற்சி மையங்களாகவும் அல்லது வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்காகவும் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியத்தில் நேபாளி நூற்பாலை மையம், கிராம நெசவு மையம், பேக்கரி அலகு, காலணி தயாரிப்பு அலகு என்று 11 இடங்களில் ரூபாய் 17.42 இலட்சம் மதிப்பீட்டில் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்காக தாட்கோ நிறுவனம் மூலம் 1984 ஆம் ஆண்டில் கட்டடங்கள் கட்டி முடித்து அந்த ஆண்டிலேயே கதர் கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கட்டடத்தை ஊராட்சியே பராமரித்துப் பயன்படுத்திக்கொள்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சி, கதர் கிராமத் தொழில் வாரியத்தை அணுகலாம். மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையில்தான் ஆதிதிராவிட மக்கள், இளைஞர்கள் விரும்புகிற, படித்த இளைஞர்கள் விரும்புகிற, பாமர மக்களுக்குத் தேவையான, அவர்கள் விரும்புகிற திட்டத்தை, சிறப்பான திட்டங்களை— இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக திகழக்கூடிய அளவில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள்.

முற்பகல் 10-40

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**47—**

### வணிக வளாகம்

**•41412—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநராட்சி 4-வது கோட்டம், தென் அழகாபுரம் அருகேயுள்ள தாட்கோ நிலத்தில் வணிக வளாகம் கட்ட அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிய வணிக வளாகம் கட்டும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் அழகாபுரம் பகுதி, ஆதிதிராவிடர்கள் சுமார் 2,000 குடும்பங்கள் நிறைந்த பகுதியாகும். இந்தப் பகுதி, சேலம் புதிய பஸ் நிலையம் அருகே உள்ளது. இந்தப் பகுதியைச் சுற்றியும், சாந்தோம் Super Market Food World, சாரதி Super Market வணிக வளாகங்கள், நட்சத்திர விடுதிகள், முக்கிய பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவை உள்ளன. இந்தப் பகுதியிலே வணிக வளாகம் கட்டுவதற்காக ஒதுக்கிய இடம், குறைந்த பட்சம் 1 சதுர அடி 2,000 ரூபாய்க்கு விற்கின்ற நிலைமையிலே இருக்கின்றது. தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் பொருளாதாரத்திலே உயர, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து உதவி வருகிறது. எனவே, இப்பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய தரம் உயர, தாயுள்ளத்தோடு அம்மா அவர்களினுடைய அரசு மறுபரிசீலனை செய்து ஒரு பெரிய வணிக வளாகத்தை வரும் ஆண்டே எடுத்து, உருவாக்கி, தாழ்த்தபட்ட சமுதாய மக்கள் தொழில் புரியவும், பொருளாதாரத்தில் உயரவும், வழிவகை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அமைச்சரவையில் பங்கேற்று இருக்கின்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைமையிடங்கள், நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பயன்பாட்டிற்காக வணிக வளாகங்கள் கட்டித் தரும் ஒரு திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது முந்தைய ஆட்சிக் காலத்தின்போதே கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தின்படி ஒரு மாவட்டத்திற்கு, சராசரியாக 15 வணிக வளாகங்கள் என 20 மாவட்டங்களுக்கு மொத்தம் 300 வணிக வளாகங்கள், ரூ. 15 கோடி மதிப்பீட்டில் கட்ட ஆணையிட்டு, 30 வளாகங்கள் உடனடியாகக் கட்டவும் உத்தரவு வழங்கினார்கள். ஒரு வணிக வளாகத்தில் 10 கடைகள் கட்டப்படவும், ஒரு கடை ரூ.50,000 மதிப்பில் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். வணிக வளாகம் கட்டத் தேவையான சுமார் 2,000 சதுர அடி நிலத்தை சம்பந்தப்பட்ட பேரூராட்சி, நகராட்சி தாட்கோவிற்கு இலவசமாக வழங்க வேண்டும். கடைகளுக்கான வாடகையில் 50 சதவீதம் பேரூராட்சி அல்லது நகராட்சிகளுக்கு வழங்கப்படும். இதன்படி சேலம் மாவட்டத்தில் 5 வணிக வளாகங்கள் கட்டப்பட்டன. சேலம் மாநகராட்சி 4-வது வட்டம், கோட்டம் தென் அழகாபுரம் அருகே உள்ள தாட்கோ நிலத்தில் மேலும் ஒரு வணிக வளாகம் கட்டித்தருமாறு மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையினை வைத்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, ஆதிதிராவிட மக்களுக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிற இந்த வேளையில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கனிவோடு பரிசீலிக்கும்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கும் என்று சொல்லியதற்கு மிக்க நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலேயே, இந்த தாட்கோ அலுவலகம் நகரினுடைய ஒதுக்குப்புறத்தில் உள்ளது. நகரின் மையப் பகுதியிலே அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல மையப் பகுதியில் 2,000 சதுர அடி வழங்கினால் அதே இடத்தில் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

[2005 பிப்ரவரி 7

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 மாவட்டங்களில் கிட்டத்தட்ட 300 வணிக வளாகங்கள் கட்ட ஆணையிட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு எத்தனை கட்டப்பட்டிருக்கின்றன என்பது எனக்குத் தெரியாது. ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, தனித் தொகுதி. அந்தத் தொகுதியிலே தாட்கோ மூலமாகவோ, ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகவோ ஒரு வணிக வளாகம்கூட கட்டப்படவில்லை என்பதை உங்கள் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதுடன், நிலம் கொடுத்தால் நாங்கள் செய்வோம் என்று இல்லாமல், நிலம் கொடுக்கப்பட வேண்டும், ஆதிதிராவிட மக்களுக்கு என்ற போர்க்குரலை உயர்த்திக் கேட்பார்களேயானால், தட்டினால் நிச்சயமாகத் திறக்கப்படும் என்கிற நிலைக்கு ஏற்ப நிலம் கொடுக்கப்படும். வணிக வளாகம் அமைக்கப்படுமோ என்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமது முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் 20 மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லி 22 மாவட்டங்களில், கிட்டத்தட்ட 713 கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன காஞ்சிபுரம் மாவட்டத்தில், தனித் தொகுதியிலும் கட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளிலும், அது தனித் தொகுதியாகக் கருதிதான் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். ஆகவே, அவர்கள் விரும்புகிற, மக்கள் விரும்புகிற, நல்ல இடத்தில், மையப் பகுதியிலே இடம் கொடுப்பதற்கு முன்வருவார்களேயானால், கண்டிப்பாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை ஆய்வு செய்யும்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியிலே வணிக வளாகம் கட்டுவது பற்றி அமைச்சர் அவர்கள் சரியான விளக்கங்களைத் தந்தார்கள். குறிப்பாக, ஆதிதிராவிட மாணவர்கள், படித்தவர்கள், வேலை இல்லாதவர்கள், நகராட்சியிலே



2005 பிப்ரவரி 7]

இருக்கின்ற வணிக வளாகங்களில் தொழில் நடத்துவதற்கு அவர்களால் மற்றவர்களோடு போட்டி போட்டு ஏலம் எடுக்க முடியாத, தொழில் நடத்த முடியாத ஒரு தேக்கம் இருக்கிறது. குறைந்தபட்சம் ஆதிதிராவிடர்களுக்கு என்று சொல்லி சில கடைகளை ஒதுக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா? அதன்மூலமாக ஆதிதிராவிடர்கள் அந்த நகரங்களிலே தொழில் நடத்துவதற்கு முன் அனுமதி கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். பெரும் பகுதி நகராட்சிகளிலே, இதுபோன்ற நகராட்சியினுடைய வணிக வளாகக் கட்டடத்திலே நிச்சயமாக ஆதிதிராவிடர்களுக்கு கடையே அனுமதிக்க முடியாத சூழ்நிலை தமிழகம் முழுவதும் இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு இதுபோன்ற ஒரு நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் இதுபோன்ற வணிக வளாகங்கள் ஆதிதிராவிட மக்களின் பயன்பாட்டுக்காகத்தான் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அப்படி ஆதிதிராவிட மக்களுக்குப் பயன்படக்கூடிய அந்தக் கட்டடங்களை ஆதிதிராவிட மக்கள்தான் பயன்படுத்த வேண்டும். வேறு எவரும் பயன்படுத்தக்கூடாது. அப்படி ஏதாவது ஒரு இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வாரானால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், இதுபோன்ற குறைபாடுகள்—தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு எந்தக் குறையும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பல்வேறு அறிவிப்புகள் வந்திருக்கின்றனவே தவிர, இந்த இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகிற திட்டம் பெருமளவில் நடைபெறவில்லை என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினாவிற்குத் தொடர்பற்றது. வினா எண் 48, திரு. அ. நடராஜன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[2005 பிப்ரவரி 7

48—

## நகரப் பேருந்து வசதி

**•36044—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை-மங்கநல்லூர்-கோமல் வழியாக ஆடுதுறைக்கு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை-மங்கநல்லூர்-கோமல் வழியாக ஆடுதுறைக்கு நகரப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனில் மூழ்கிய போக்குவரத்துத் துறையை துணிச்சலாக மின்னல் வேகத்தில் மீட்டு இலாபத்தில் இயங்கச் செய்த எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் கடந்த காலத்தில் ஓட்டை உடைசலாக இயங்கிவந்த பேருந்துகளை மாற்றி, 2,000-க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகளையும், தனியாரை மிஞ்சும் வகையில் சொகுசுப் பேருந்துகளையும் இயக்கிவரும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் தொகுதியில் மயிலாடுதுறை-மங்கநல்லூர்-கோமல்-பேராவூர் வழியாக ஆடுதுறை வரையில் செல்லும் பாதையில் சுமார் 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள், மாணவர்கள், அரசு அலுவலர்கள் நலன் கருதி கல்லூரிகள், மருத்துவமனைகள் செல்ல வசதியாக புதிய நகரப் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நடராஜன் அவர்களுடைய கேள்வியிலே ஒரு திருத்தத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது 2,000-க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் வாங்குவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள், அதற்கு நன்றி என்று சொன்னார். 2,000 புதிய பேருந்துகள் அல்ல, 3,325



2005 பிப்ரவரி 7]

என்று அவருக்கு அன்போடு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. அவருடைய தொகுதியில், மயிலாடுதுறை-மங்கநல்லூர்-கோமல் வழியாக ஆடுதுறைக்கு நகரப் பேருந்து கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியிலே, அந்தக் கோரிக்கை வழித்தடத்தில் மயிலாடுதுறை-மங்கநல்லூர் வரை 10 கிலோ மீட்டர் தூரம். இதிலே அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய 21 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தனியார் பேருந்துகள் 11 பேருந்துகள். ஆக மொத்தம் 32 பேருந்துகள் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 176 நடைகளும், தனியார் துறை சார்பாக 85 நடைகளும், ஆக மொத்தம் மயிலாடுதுறை-மங்கநல்லூர் வரை 261 நடைகள் இயக்கப்படுகின்றன. அதற்கு அடுத்தபடியாக மங்கநல்லூர்-கோமல். அதிலே கேட்டிருக்கிறார்; வருகின்ற வழித்தடம், மங்கநல்லூர்-கோமல் வரை 6 கிலோ மீட்டர். அதிலே போக்குவரத்துக் கழகத்தினுடைய 3 அரசுப் பேருந்துகள் மூலமாக 14 நடைகள் இயக்கப்படுகின்றன. அதற்கடுத்தபடியாக கோமல்-தேரெழுந்தூர் வரை 4 கிலோ மீட்டர், அதிலே போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 5 இயக்கப்படுகின்றன. அதன் மூலமாக 34 நடைகள் இயக்கப்படுகின்றன. அதற்கடுத்தபடியாக, தேரெழுந்தூரிலிருந்து ஆடுதுறை வரை 15 கிலோ மீட்டர். இதிலே 5 அரசுப் பேருந்துகள் மூலமாக 36 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆக, நீங்கள் கேட்டிருக்கின்ற அந்த மயிலாடுதுறை, ஆடுதுறை வரையில் உள்ள நகரப் பேருந்துகளில் பகுதி பகுதியாக அனைத்து ஊர்களின் தேவைக்கேற்ப அல்லது தேவைக்கு மிகுதியாகக்கூட அங்கே வழித்தடங்கள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும்கூட இந்த வழித்தடத்தில் பயணிகளுடைய அடர்வு போதிய அளவிற்கு இல்லை என்பதையும் குறைந்த விகிதாச்சார அடிப்படையில்தான் பயணிகள் அடர்வும் இருக்கிறது என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, தேவையான அளவிற்கு இந்தப் பகுதிகளில் இந்தக் கோரிக்கை வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை-மங்கநல்லூர்-கோமல் வழியாக ஆடுதுறை செல்லும் வழித்தடத்தில் தொடர்ந்து மயிலாடுதுறை நகரத்திற்கு வருகின்ற அளவிற்குப் பேருந்துகள் இல்லை. மயிலாடுதுறையில்தான் கல்லூரிகள், மருத்துவமனைகள், பள்ளிகள் இயங்குகின்றன. எனவே, புதிய வழித்தடம்

[2005 பிப்ரவரி 7

இயக்க முடியாவிட்டாலும், மயிலாடுதுறையிலிருந்து ஆடுதுறை வழியாக கும்பகோணம் வழித்தடத்தில் அதிகமான பேருந்துகள் செல்கின்றன. அதிலே ஏதேனும் ஒரு வழித்தடத்தை மாற்றி மேற்படி வழித்தடத்திலே இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கைபடி மயிலாடுதுறையிலிருந்து ஆடுதுறை நகருக்கு நகரப் பேருந்து இயக்குவதிலே மற்றொரு நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. இதற்குரிய தூரம் மயிலாடுதுறையிலிருந்து ஆடுதுறைக்கு ஏறக்குறைய 35 கிலோ மீட்டர். பொதுவாக நகரப் பேருந்துகள் இயக்க வேண்டும் என்று சொன்னால், 30 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதிகளுக்குத்தான் நகரப் பேருந்துகள் இயக்க முடியுமே தவிர, 35 கிலோ மீட்டர் தொலைவில் வருவதால், நகரப் பேருந்துகள் இயக்குவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால் அந்தப் பகுதியிலே Mofussil, அதாவது நகரப் பேருந்துகளுக்குப் பதிலாக புறநகர்ப் பேருந்தாக இயக்க வேண்டுமென்ற கோரிக்கை வைப்பாரேயானால், அது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இன்னும் நிறைய கிராமங்களுக்கு இதுவரை பேருந்து வசதியே இல்லாமல் இருக்கிறது. இப்போதுகூட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது, 30 கிலோ மீட்டருக்கு மேலே நகரப் பேருந்து இயக்குவதற்கு விதி இல்லை என்று சொன்னார். அப்படி 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் கூடுதலாக இயக்குகின்ற வேளையிலே, அந்தக் கிராமங்கள் பயனடையக்கூடிய ஊர்கள் இருக்கும் என்று சொன்னால், சிறப்பு நேர்வின் அடிப்படையிலே அதற்கு விதிவிலக்கு அளித்து, அந்த ஊர்களுக்குப் பேருந்து வசதி செய்ய அரசு முன்வருமா? அதே நேரத்தில் மாவட்ட அளவிலே முடிவு எடுக்கப்பட்ட அந்த நகரப் பேருந்துகளை நீட்டிப்பதற்கான உத்தரவு இப்போது அரசு வரை வர வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிகாரம் பரவலாக்கப்பட்டு வருகின்ற இந்த வேளையில் அரசிடம் இருக்கிற அந்த அனுமதியை அந்தந்த மாவட்ட அளவிலே முடிவு எடுத்து வழங்க, விரைவாக ஆணையிட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2005 பிப்ரவரி 7]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவிலே முக்கிய ஊர்களுக்கும், முக்கிய நகரங்களுக்கும், அனைத்து கிராமங்களுக்கும் ஏறத்தாழ இன்றைக்கு சாலை வசதியுள்ள பெரும்பாலான கிராமங்கள் அனைத்திற்கும் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவோ அல்லது தனியார் பேருந்துகள் மூலமாகவோ அல்லது சிற்றுந்துகளின் மூலமாகவோ போதுமான அளவிற்கு பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே அவருடைய தொகுதியிலே ஏதேனும் சில கிராமங்களுக்குப் பேருந்து வசதிகள் இல்லை என்று அவர் கருதினால், அதைப்பற்றி கோரிக்கை கொடுத்தால், அது பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக்கு வந்ததற்குப் பின்புதான் ஏற்கெனவே நிறுத்தப்பட்டிருந்த, கடந்த ஆட்சிக்காலத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழித்தடங்களிலேகூட மீண்டும் இன்றைக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்போடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. புதிய பேருந்துகள் இவ்வளவு இயக்க வேண்டும் என்று சொன்னால் அல்லது நீட்டிப்பு செய்ய வேண்டுமென்று சொன்னால், அரசினுடைய அனுமதி பெற வேண்டுமென்று, அதைப் பரவலாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதிலே சில தவறுகள் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம், சில இடங்களில் சிலர் அந்த அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, அதன் மூலமாக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டுதான் அரசு இப்பொழுது அந்த அதிகாரத்தை—அரசிடம் அனுமதி பெற்று புதிய பேருந்துகள் வழித்தடத்தை இயக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இருந்தாலும்கூட, அதிலே தேவைகள் ஏற்படும் என்று சொன்னால், அரசு உடனுக்குடனாக அந்த அனுமதியை வழங்கி வருகிறது. காலதாமதமே இல்லாமல் உடனுக்குடன் வழங்கி வருகிறது. எனவே, அதிலே எந்தவித சிரமமும் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

*முற்பகல் 10-55*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபொழுது புதிய பேருந்துகள் வாங்குவதற்கான அறிவிப்பை வெளியிட்டார்கள். அதிலே அரசு விரைவுப் பேருந்துகளையும் நீக்கி, புதிய பேருந்துகளாக இயக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? அதோடு மினி

பேருந்துகள் இப்பொழுது பல இடங்களிலே நிறுத்தப்பட்டு விட்டன. அதனால் பல கிராமங்களிலே போக்குவரத்திற்கு வசதி இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல பயணிகள் அடர்வு குறைவின் காரணமாக அரசுப் பேருந்துகளோ, தனியார் பேருந்துகளோ நிறுத்துவதென்பது மக்களுடைய பயன்பாட்டிற்கு இடையூறாக அமையும் என்ற காரணத்தினாலே அவற்றைப் பரிசீலித்து நிறுத்தப்பட்டிருக்கிற பேருந்துகளை இயக்குவதற்கான முயற்சிகளில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலே, அடிப்படையிலே தவறு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பயணிகளின் அடர்வு குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினால் தற்பொழுது இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற எந்தப் பேருந்தையும் அரசுப் போக்குவரத்துக் கழகம் நிறுத்தவில்லை. புதியதாக பேருந்து வசதிகள் நீங்கள் கேட்டால் அந்தப் பகுதியிலே ஆய்வு செய்கின்றபொழுது போதிய அளவுக்குப் பயணிகள் அடர்வு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்கிறதே தவிர, ஏற்கெனவே வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகள் நஷ்டத்தில் இயங்கினாலும், பொதுமக்களுடைய வசதிக்காக அந்த நஷ்டத்தையும், இழப்பையும் தாங்கிக் கொண்டு நிச்சயமாக தொடர்ந்து அந்தப் பகுதியிலே இயங்குகின்ற வகையில் கிராமப்பகுதி மக்களுக்கு இன்றைக்கும் அந்தப் பேருந்து வசதி செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் சில சிற்றுந்துகள், தனியார் இயக்குகின்ற பேருந்துகள் ஆங்காங்கே சில இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட பேருந்துகள், சில இடங்களில் சிற்றுந்துகள் இயக்கப்படுவது அரசினுடைய கையிலே இல்லை. அவற்றை தனியார்கள் இயக்குகிறார்கள். அப்படி யாராவது அவர்கள் பெற்றிருக்கின்ற வழித்தடங்களில் அந்தப் பேருந்துகளை இயக்கவில்லை என்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அவற்றைத் தனியாரிடம் சொல்லி, தாங்கள் பெற்றிருக்கின்ற வழித்தடங்களில், உரிமம் பெற்றிருக்கின்ற வழித் தடங்களில் அந்தப் பேருந்துகளை, சிற்றுந்துகளை இயக்க வேண்டும் என்று அரசு அவர்களுக்கு அறிவுறுத்தும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், மினி பஸ் என்பது சிற்றுந்து. மினி பேருந்து என்று சொல்லாதீர்கள். திரு. ஆஸ்டின்.





**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 முதல் 1996 வரை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய தலைமையிலான ஆட்சியிலே பொதுமக்கள் தேவையை முன்னிட்டு பல புதிய வழித்தடங்களிலே பேருந்துகள் இயக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. ஆனால், அதற்குப் பிறகு, 1996-க்குப் பிறகு, வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே புதிதாக இயக்கப்பட்ட அந்தப் பேருந்துகள் எல்லாம் நிறுத்தப்பட்டு விட்டன. எனவே, சிறப்பாகச் செயல்பட்டுவந்த அந்தப் பேருந்துகளை பொதுமக்கள் தேவையை, அவசியத்தை முன்னிட்டு மீண்டும் இயக்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஏற்கெனவே விடையளித்திருக்கிறேன். ஏற்கெனவே நிறுத்தப்பட்டிருந்த சில வழித்தடங்களை— கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டிருந்த அந்தப் பேருந்துகளை--எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பு படிப்படியாக அந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே அப்படி ஏதேனும் விட்டுப்போய் இருந்தால், அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற வழித்தடங்களில் தனியார் பஸ்கள் இயக்கப்பட்டு வந்தன. அந்த பஸ்கள் எல்லாம் தற்சமயம் நகர்ப்புறங்களில், நகர்ப்புற வழித்தடங்களில் இயங்குவதற்கு இந்த அரசால் இப்போது அனுமதி அளிக்கப்பட்ட காரணத்தால் கிராமப்புற வழித் தடங்களில் தனியார் பேருந்துகள் தற்சமயம் கிட்டத்தட்ட 80 விழுக்காட்டிற்கும் அதிகமாக, எனது தொகுதியில்கூட நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள், வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே, அத்தகைய நிறுத்தப்பட்ட வழித்தடங்களில், தனியார் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது அரசுப் பேருந்துகளையாவது இயக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2005 பிப்ரவரி 7

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியிலே, அடிப்படையிலே ஒரு சில தவறான கருத்துகளை தெரிவித்திருக்கிறார். சில தனியார் பேருந்துகள் தாங்கள் ஓட்டிக்கொண்டிருந்த வழித்தடங்களில் அரசு மாறுதல் செய்திருக்கிறது என்று சொன்னார், மாறுதலுக்கு அனுமதி வழங்கி இருக்கிறது என்று சொன்னார். அது அடிப்படையில் தவறு. உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் அப்படி variation—மாறுதல் ஏற்படுத்தக்கூடாது என்று நமது அரசும் வாதித்தது. ஆனால், உயர் நீதிமன்றத்தில் நமது வழக்கு தோல்வியுற்று, தனியார் பேருந்து உரிமையாளர்கள் தொடுத்த வழக்கு வெற்றி பெற்றிருக்கிறது. ஆகவே, அந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், அதன் அடிப்படையிலே அவர்கள் அந்த மாறுதல் செய்திருக்கிறார்கள். சில வழித்தடங்களில், ஒரு சில இடங்களில் மாறுதல் செய்திருக்கிறார்களே தவிர, அரசு அதற்கான உத்தரவை வழங்கவில்லை. மாறாக அப்படி மாறுதல் செய்யப்பட்ட அந்த வழித்தடங்களில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்...

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அப்படி மாறுதல் செய்யப்பட்ட வழித்தடங்களில் மாற்று ஏற்பாடாக அரசினுடைய அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக அந்தப் பகுதிகளுக்கு போதுமான அளவிற்கு அந்த வழித்தடங்களிலே புதிதாகப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும், உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே அப்படிப்பட்ட வழித்தடங்களிலே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலே ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்கு உடனடியாக அரசு ஏற்பாடு செய்யும் என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே நிறுத்தப்பட்டிருந்த பேருந்துகளெல்லாம் மீண்டும் ஓட்டப்படுவதாக இங்கே பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால் மதுரையிலிருந்து நள்ளிரவு 12-00 மணியளவில் களியக்காவிளைக்கு—அதாவது கேரளா-தமிழகத்தினுடைய எல்லை, களியக்காவிளைக்கு—ஒரு பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், அது என்ன காரணத்தினாலேயோ நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் திரும்பவும் ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் நேரிலேயே மனு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்னும் அந்தப் பேருந்து இயக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, அந்தப் பேருந்தை இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?



2005 பிப்ரவரி 7]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிய பேருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன. கூடுகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிவுற்றவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.கு.சி. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வட்டங்களை மையமாக வைத்துதான் நகரப் பேருந்துகளை இயக்கி வருகிறோம். பொதுமக்கள் நலன் கருதியும், மாணவர்கள் நலன் கருதியும் Non-Taluk centre-களை இணைத்து நகரப் பேருந்துகளை இயக்க ஏதாவது திட்டமிருக்கின்றதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனை பெற்று அரசு உரிய நடவடிக்கை எடுப்பது குறித்து சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகளை இப்போது variation வாங்கி சில பேருக்கு High Court உத்தரவின்படி order வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னீர்கள். அதுகுறித்து அரசு ஏதாவது உச்ச நீதிமன்றத்திலே appeal செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கு

[2005 பிப்ரவரி 7

அரசு கருத்துருக்களைக் கேட்டது. ஆனால், நமது Advocate General அவர்களும் மற்றும் சட்டத் துறையும் அதற்கு வாய்ப்பில்லை என்று கருத்து தெரிவித்ததன் அடிப்படையில், இந்த மோட்டார் வாகனச் சட்டம் மத்திய அரசினுடைய மோட்டார் வாகனச் சட்டப் பிரிவின்படி இயக்கப்படுகிறது என்கிற காரணத்தால் மத்திய அரசின் அந்த மோட்டார் வாகனச் சட்டப்படி உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றாலும் அதற்கு வாய்ப்பில்லை என்று கருத்துத் தெரிவித்ததன் அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தில் அதற்காக நாம் மேல்முறையீடு செய்யவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு, A.G. அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை என்று கூறியிருக்கிறார். பல்வேறு நிலைகளிலே—சாலைப் பணியாளர்கள் சென்றபோது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். அதுபோல, இதிலும் பொதுமக்கள் நலன் கருதி, தனியார் பேருந்துகளை நிறுத்துவதற்கு உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான முயற்சிகளில் அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு சட்டத் துறையும் நமது Advocate General-ம் ஒப்புதல் வழங்கவில்லை என்கிற காரணத்தால், அதற்கு வாய்ப்பே இல்லை என்று இறுதியாக அவர்கள் கருத்துத் தெரிவித்ததன் அடிப்படையில் அதற்குத் தேவை எழவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**49—**

### பேருந்து வசதி

**•38770—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 7]

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கொடிக்குளம் செல்லும் பேருந்தை நத்தப்பட்டி வழியாக இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கொடிக்குளம் செல்லும் பேருந்தை நத்தப்பட்டி வழியாக இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நத்தப்பட்டி என்கிற கிராமம் பல காலங்களாக சாலை வசதி இல்லாத ஒரு கிராமமாக இருந்தது. தற்போது பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக மிகச் சிறப்பான சாலை அந்தக் கிராமத்திற்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அதோடுகூட கொடிக்குளம் செல்கின்ற பேருந்து தற்சமயம் செல்கின்ற வழியில் எந்தக் கிராமமும் விட்டுப் போகாத அளவிற்கு ஒரு furlong தூரம் அதிகமாகச் சென்றால், இந்தக் கிராமத்தைத் தொட்டுச் செல்கின்ற ஒரு நிலை ஏற்படுகின்றது. அந்தக் கிராமத்தினுடைய ஜனத்தொகை ஏறக்குறைய 2,000 மக்களுக்குமேல் இருக்கிறார்கள். எனவே, அந்தக் கிராமமும் பயன்படுகின்ற நிலையும் இருக்கும், அதோடு அரசுப் பேருந்திற்குக் கூடுதலாக வசூலும் வருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமென்கின்ற காரணத்தினால் வருகின்ற காலத்தில் அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து நத்தப்பட்டி வழியாக கொடிக்குளம் வரை செல்கின்ற வழித்தடத்தின் தூரம் 30.9 கி.மீ. என்ற அளவிற்கு உள்ளது. 30 கி.மீ. க்கு மேல் நகரப் பேருந்து இயக்குவதிலே இருக்கின்ற விதிமுறைகளைத் தளர்த்தி அதற்கு வேண்டுமானால் 0.9 கி.மீ. மட்டுமே கூடுதலாகியிருக்கின்ற காரணத்தினால் அதைப்பற்றி தளர்த்துவதற்கு வழிமுறைகள் உண்டா என்பதை ஆராய்ந்து அதற்கு வாய்ப்பு இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 பிப்ரவரி 7

**திரு. லா. சந்தானம்:** தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று கூறிய அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்றைக்கு பல்வேறு கிராமங்களுக்கு நமது அரசினுடைய சிறப்பான செயல் திட்டத்தின் மூலமாக கிராமியச் சாலைகள், பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டங்கள் போன்றவற்றிலே நல்ல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு போக்குவரத்தைத்தான் மக்கள் பெரிதும் வேண்டுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அப்படி புதிதாக நல்ல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்ற கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் தேவை என்கின்ற நிலை உருவாகியிருக்கின்ற காரணத்தினால், வருகிற ஆண்டில் அரசு புதிதாக பேருந்து வாங்குகின்ற நிலையை எடுத்திருக்கின்ற இந்த நேரத்தில் சில பேருந்துகளையாவது, தொகுதிக்கு 1, 2 என்று—எல்லாத் தொகுதிகளிலும் இந்தத் தேவை இருக்கிறது -- அப்படி ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பேருந்தையாவது ஒதுக்கி புதிய வழித்தடங்கள் நடத்துவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்துகள் இயக்குவதற்கு தடை ஒன்றுமில்லை. அதனால் அதற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியம் எழவில்லை. ஆனால், தேவை என்று கருதினால் பொதுமக்களுடைய தேவையின் அடிப்படையில் அதாவது கிராமத்திற்கு புதிதாக பேருந்து வசதியே முற்றிலும் இல்லாத கிராமத்திற்கு, அதற்கு சாலை வசதியும் இருக்குமேயானால் அப்படிப்பட்ட கிராமங்களுக்கு புதிய வழித்தடங்களில் பேருந்து வசதி கேட்டால், அந்தக் கிராமங்களுக்கு எல்லாம் போதிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் தேவைக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப ஆராய்ந்து, ஆய்வு செய்து, தேவை ஏற்பட்டால் புதிய வழித்தடங்களில், புதிய பேருந்துகள் இயக்குவதற்கு அரசு பரிவுடன் பரிசீலிக்குமென்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.



2005 பிப்ரவரி 7]

**50—**

## நந்தவனம் அமைத்தல்

***44439—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை கோயில் குன்றுகளின் தரமிழந்த பகுதிகளை பசுமைப்படுத்தி நந்தவனம் அமைக்கும் சீரிய திட்டம் செயல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலிலே, ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் 4 நாட்கள் தேர்த் திருவிழா நடைபெறுகிறது. இத்தேர்த் திருவிழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்கிறார்கள். ஆடிக் கிருத்திகை தினத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்கிறார்கள். மாதந்தோறும் கிருத்திகை தினத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முருகப் பெருமானை தரிசிக்க வருகிறார்கள். வள்ளிமலை கோயில் சுற்றுலாத் தலமாக மாறி வருகிறது. வள்ளிமலை வனப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மலைப் பகுதி முழுவதையும் பசுமையாக்கவும், மக்கள் பெருமளவுக்குக் கூடுகின்ற இடங்களிலே நந்தவனம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளிமலை கோயிலைச் சுற்றிலும் உள்ள தரம் இழந்த பகுதிகளில் ஏற்கெனவே ரூ.63,174 செலவில் 148.8 எக்டேர் பரப்பில் 72,000 மரக் கன்றுகள் நாவல், புங்கன், பரம்பை, கொடைவேலன் போன்ற மரங்கள் நட்டு, நன்றாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதனால் அந்தப் பகுதியில் தற்போது நந்தவனம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எஸ். சந்திரசேகரன். (குறுக்கீடு) திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றான சோளிங்கர் லட்சுமிநரசிம்ம சுவாமி மலைக் கோயில் என்னுடைய தொகுதியில் உள்ளது. அந்த மலைக் கோயிலைச் சுற்றியுள்ள மலைகள் தற்போது பாலைவனமாகக் காட்சியளிக்கின்றன.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தமற்றது. வினா எண் 51, திரு. ஆர். சாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**51—**

**அரசு கலைக் கல்லூரி**

***19520—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியிலுள்ள அரசு கலைக் கல்லூரியில் எம்.எஸ்சி. விலங்கியல், எம்.எஸ்சி. கணிதவியல், கணினி அறிவியல், எம்.ஏ. பொருளாதாரம் ஆகிய பாடப் பிரிவுகள் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் அரசு கலைக் கல்லூரியில் புதிய பாடப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஏற்கெனவே இயங்கி வருகிறது. அந்தக் கல்லூரியில் இளநிலை பட்டப் படிப்பு படித்துவிட்டு, முதுநிலை பட்ட மேற்படிப்பிற்கு வெளி மாவட்டங்களுக்குச்





செல்ல மாணவர்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மிகவும் பின்தங்கிய தொகுதி மேலூர் தொகுதி. ஆகையால், அந்த ஏழை மாணவ, மாணவியர்கள் படிக்க மேலூரிலே இருக்கின்ற அரசு கலைக் கல்லூரியில் எம்.எஸ்சி., விலங்கியல், எம்.எஸ்சி. கணிதவியல், கணினி அறிவியல், எம்.ஏ. பொருளாதாரம் ஆகிய பட்ட மேற்படிப்புகளை அரசே அங்கு தொடங்கினால், அந்தப் பகுதி ஏழை மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகையால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த ஏழை மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று பணம் கட்டிப் படிக்க இயலாத காரணத்தினால், படிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நான்கு ஆண்டு ஆட்சிக் காலத்தில் எல்லா சாதனைகளும், திட்டங்களும் மேலூர் தொகுதியிலே முழுமையாக நிறைவேறியிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாடப் பிரிவுகளை மட்டும் அங்கே தொடங்கினால் இன்னும் நிறைய சிறப்படைய வாய்ப்பு இருக்கின்றது. ஆகையால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து இந்தப் பாடப் பிரிவுகளை மேலூர் அரசு கலைக் கல்லூரியில் தொடங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியிலுள்ள அரசு கலைக் கல்லூரியில் எம்.எஸ்சி. விலங்கியல், எம்.எஸ்சி. கணிதவியல், கணினி அறிவியல், எம்.ஏ. பொருளாதாரம் ஆகிய பாடப் பிரிவுகளைத் தொடங்க அக்கல்லூரியிலிருந்து விண்ணப்பம் எதுவும் இதுவரை பெறப்படவில்லை. அப்பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அக்கல்லூரியிலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டால், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அதற்கான விண்ணப்பத்தினை சுயநிதி அடிப்படையில் அப்பாடப் பிரிவுகளைத் தொடங்குவது குறித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

[2005 பிப்ரவரி 7

52—

## தொடக்கப் பள்ளி

**•33971—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலக்கள்ளக்கிரி பகுதியில் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியத்தில் உள்ள மேலக்கள்ளக்கிரியிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கீழக்கள்ளக்கிரியில் ஓர் ஊராட்சி ஒன்றியப் பள்ளி இயங்கி வருவதால் மேலக்கள்ளக்கிரியில் ஆரம்பப் பள்ளி தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலக்கள்ளக்கிரி கிராமத்தில் 500-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். 70-க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கீழ்க்குடி கிராமத்திற்குச் சென்று கல்வி பயின்று வருகிறார்கள். எனவே, அரசு மறுபரிசீலனை செய்து மேலக்கள்ளக்கிரி கிராமத்தில் தொடக்கப் பள்ளி நிறுவ முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின்கீழ், ஐந்து வயது நிரம்பிய குழந்தைகள் எளிதாக நடந்து சென்று படிப்பதற்கு வசதியாக 300 மக்கள்தொகையும், ஒரு கிலோ மீட்டர் சுற்றளவும் கொண்ட குடியிருப்புகள் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. அதன்படி சென்ற ஆண்டிலே தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துக் கிராமங்களிலும் ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதன்படி அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலக்கள்ளக்கிரி என்ற கிராமத்தின் மக்கள்தொகை



2005 பிப்ரவரி 7]

300-க்கும் குறைவாக உள்ளது. கீழக்கள்ளக்கிரி என்ற இடத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியப் பள்ளி தற்போது இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கும் மேலக்கள்ளக்கிரிக்கும் இடையே உள்ள தூரம் ஒரு கிலோ மீட்டர் ஆகும். எனவே, மேலக்கள்ளக்கிரியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கீழக்கள்ளக்கிரியில் ஒரு பள்ளி இயங்கி வருவதால், மேலக்கள்ளக்கிரியில் ஓர் ஆரம்பப் பள்ளி தொடங்க தற்போது வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

53—

## பால் குளிரூட்டும் நிலையம்

**•53614—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி, வாழப்பாடியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதி, வாழப்பாடியில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு தொகுதி, வாழப்பாடி, தாலுகா தலைமையிடமாக உள்ளது. வாழப்பாடி தாலுகா பகுதியில் சுமார் 30,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, சேலம் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், வாழப்பாடியில் பால் குளிரூட்டும் நிலையம் அடுத்த ஆண்டாவது அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2005 பிப்ரவரி 7

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் காலத்தில் அப்பகுதியில் பால் உற்பத்தி அளவைக் கணக்கில் எடுத்துக்கொண்டும், நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, தேவைப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்@

## பட்டியல் 6

1—

### கதிர் அடிக்கும் நெற்களம்

**வினா எண் 46796—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரங்கம் ஊராட்சியிலுள்ள முத்துகிருஷ்ணாபுரத்தில் கதிர் அடிக்கும் நெற்களத்தை வேளாண்மை விற்பனைக் குழுவின் மூலமாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு

@ இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2005 பிப்ரவரி 7]

ஏற்றவாறு சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரங்கம் ஊராட்சியிலுள்ள முத்துகிருஷ்ணாபுரத்தில் வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

2—

### உலர்களம் அமைத்தல்

**வினா எண் 52349—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கடவாசல், கோபாலசமுத்திரம், அகரவட்டாரம், பன்னங்குடி, பஞ்சப்பெருமாள் நல்லூர் ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலம் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கடவாசல், கோபாலசமுத்திரம், அகரவட்டாரம், பன்னங்குடி, பஞ்சப்பெருமாள் நல்லூர் ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

3—

### உலர்களம் அமைத்தல்

**வினா எண் 52361—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், கொண்டல், நெப்பத்தூர், செம்மங்குடி, சட்டநாதபுரம், கீழ் சட்டநாதபுரம், கள்ளியாக்குடி ஆகிய ஊராட்சிகளுக்கு

[2005 பிப்ரவரி 7

வேளாண் விற்பனைக் குழு மூலம் உலர்களம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கொண்டல், நெப்பத்தூர், செம்மங்குடி, சட்டநாதபுரம், கீழ் சட்டநாதபுரம், கள்ளியாக்குடி ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

**4—**

## உலர்களம் கட்டுதல்

**வினா எண் 52367—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மருதங்குடி, செம்பதனிருப்பு, ராதாநல்லூர், கற்கோயில், ஆதமங்களம், பெருமங்களம் ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண் விற்பனைக் குழு மூலம் உலர்களம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மருதங்குடி, செம்பதனிருப்பு, ராதாநல்லூர், கற்கோயில், ஆதமங்களம், பெருமங்களம் ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.



2005 பிப்ரவரி 7]

**5—**

## உலர்களம் கட்டுதல்

**வினா எண் 52373—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், புதுத்துறை, காவிரிப்பூம்பட்டினம், காத்திருப்பு, புங்கனூர், பெருந்தோட்டம், பூம்புகார், விளந்திடசமுத்திரம் ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண் விற்பனைக் குழு மூலம் உலர்களம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், புதுத்துறை, காவிரிப்பூம்பட்டினம், காத்திருப்பு, புங்கனூர், பெருந்தோட்டம், பூம்புகார், விளந்திடசமுத்திரம் ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலம் உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

**6—**

## உலர்களம் கட்டுதல்

**வினா எண் 52380—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கதிராமங்கலம், காரைமேடு, வள்ளுவக்குடி ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலம் உலர்களம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

[2005 பிப்ரவரி 7

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கதிராமங்கலம், காரைமேடு, வள்ளுவக்குடி ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலம் உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

7—

## விளைபொருட்கள் உலர்களம் அமைத்தல்

**வினா எண் 52384—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெம்மேலி ஊராட்சியில் விளைபொருட்கள் உலர்களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, நெம்மேலி ஊராட்சியில் வேளாண்மை விற்பனைக் குழு மூலம் உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

8—

## உலர்களம் அமைத்தல்

**வினா எண் 53311—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 7]

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சி, ஆலாலசுந்தரம் ஊராட்சி, அளக்குடி ஊராட்சி, ஆரப்பள்ளம் ஊராட்சி, திருக்கருகாவூர் ஊராட்சி, திருமுல்லைவாசல் ஊராட்சி, வடகால் ஊராட்சி மற்றும் வேட்டங்குடி ஊராட்சிக்கு உலர்களம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர், ஆலாலசுந்தரம், அளக்குடி, ஆரப்பள்ளம், திருக்கருகாவூர், திருமுல்லைவாசல், வடகால் மற்றும் வேட்டங்குடி ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலம் உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

9—

## உலர்களம் அமைத்தல்

**வினா எண் 53327—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சி, வடரங்கம் ஊராட்சி, ஓலையாம்புத்தூர் ஊராட்சி, புத்தூர் ஊராட்சி, ஜோதியங்குடி ஊராட்சி, தாண்டவராயன்குளம் ஊராட்சி மற்றும் ஆலங்காடு ஊராட்சிக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலம் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 பிப்ரவரி 7

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல், வடரங்கம், ஓலையாம்புத்தூர், புத்தூர், ஜோதியங்குடி, தாண்டவராயன்குளம் மற்றும் ஆலங்காடு ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலம் உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

**10—**

### உழுவை வழங்கும் திட்டம்

**வினா எண் 55072—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரிய விவசாயிகளுக்கு பாதி விலையில் உழுவை (டிராக்டர்) வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** தற்போது அனைத்து விவசாயிகளுக்கும் மாநில மற்றும் மைய அரசின் நிதியுதவியுடன்

*(1) 30 முதல் 35 குதிரைத் திறன் உள்ள உழுவை இயந்திரங்கள் (ரூ. 30,000/-)*

*(2) பவர் டில்லர்கள் (ரூ. 30,000/-)*

*(3) நாற்று நடும் கருவி (ரூ. 50,000/-)*

*(4) கதிரடிக்கும் கருவி (ரூ. 15,000/-)*



2005 பிப்ரவரி 7]

முதலிய இயந்திரங்கள் வாங்கிட அடைப்புக் குறிக்குள் உள்ள தொகை அல்லது இயந்திரத்தின் விலையில் 25 சதவீதம், இதில் எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகை மானியமாக வழங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

பெரிய விவசாயிகளுக்கு பாதி விலையில் உழுவை (டிராக்டர்) வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**11—**

### புல் வகைகளை விளைவித்தல்

**வினா எண் 62859—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் காராமணிப் பயிறு வகை, ஸ்டைலோ, புல் வகைகளை அதிகமாக விளைவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் ஆனைமலை வட்டாரத்தில் உள்ள கிராமங்களில் கடந்த 2004 காரீப் பருவத்தில் காராமணி பயிறு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சுமார் 200 எக்டேரில் காராமணிப் பயிறு விளைவிக்க வரும் ஏப்ரல், மே, 2005 ஆம் ஆண்டில் விதை விநியோகம் செய்யப்பட்டு சாகுபடி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஸ்டைலோ, புல் வகை இந்தப் பகுதியில் தற்சமயம் சாகுபடி செய்யப்படுவது இல்லை. இனி வருங்காலங்களில் ஸ்டைலோ, புல் வகை விளைவிக்க சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2005 பிப்ரவரி 7

12—

## கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தை செப்பனிடுதல்

**வினா எண் 22860—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியில் எரியோடு கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தை நடப்பாண்டில் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** வேடசந்தூர் தொகுதியில் எரியோடு கால்நடை கிளை நிலையக் கட்டடம் அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டடத்தைப் பழுது நீக்கம் செய்ய 2003-2004 ஆம் ஆண்டு ரூ. 90,000/- மதிப்பீட்டுத் தொகை ஒதுக்கப்பட்டு, ரூ. 88,991/- செலவினம் மேற்கொள்ளப்பட்டு, மேற்படி கட்டடம் தளம் போடப்பட்டு கதவுகள், ஜன்னல்கள், மேற்கூரை ஆகியவை பழுதுபார்க்கப்பட்டன.

13—

## கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 32843—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் எத்தனை கால்நடை மருந்தகங்கள் உள்ளன?

(ஆ) இவ்வாண்டு புதியதாக எத்தனை கால்நடை மருந்தகங்கள் திறக்க அரசிடம் திட்டம் உள்ளது?

(இ) வாடகைக் கட்டடத்தில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?



2005 பிப்ரவரி 7]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் காஞ்சிக்கோவில், ஊத்துக்குளி, குன்னத்தூர் என்ற மூன்று கால்நடை மருந்தகங்கள் உள்ளன.

(ஆ) இவ்வாண்டு பெருந்துறை தொகுதியில் விஜயமங்கலம், நல்லாம்பட்டி ஆகிய இரண்டு பகுதிகளில் புதிய கால்நடை மருந்தகங்கள் துவக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) அனைத்து கால்நடை மருந்தகக் கட்டடங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

14—

## கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 41521—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், சுந்தரம்பள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், சுந்தரம்பள்ளி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் இயங்கி வருகிறது. இக்கிளை நிலையம் வாடகையில்லாக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக புதியதாக கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**15—**

## வெறிநாய் தடுப்பு ஊசி

**வினா எண் 52081—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி, சீர்காழி நகர் ஆகிய இடங்களில் வீடு வீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறிநாய் தடுப்பு ஊசி போட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி, சீர்காழி நகர் ஆகிய இடங்களில் வீடு வீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறிநாய் தடுப்பு ஊசி போடும் பணி மேற்கொள்ள தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, இந்நோய்க்கு அருகிலுள்ள கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை கிளை நிலையங்களில் தேவையான சிகிச்சையளிக்கப்படுகிறது. மேலும், வெறிநாய்க்கடியை கட்டுப்படுத்த சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகர்ப்புறங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாட்டில் வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சேலம், ஈரோடு, தருமபுரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**16—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 56981—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை கட்டடம் கட்டிக் கொடுத்து மருந்து அலுவலர் நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 760. இதன் அருகில் 2 கி.மீ. தூரத்தில் சீர்காழி கால்நடை மருத்துவமனையும், 6 கி.மீ. தூரத்தில் கொள்ளிடம் கால்நடை மருந்தகமும், 8 கி.மீ. தூரத்தில் மாதானம் கால்நடை மருந்தகமும் உள்ளது. இவை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் இக்கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளது. மேலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடை ஆணை இன்னும் அமலில் உள்ளது. ஆதலால் சீர்காழி தொகுதி, அரசூர் கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வழிவகை இல்லை.

**17—**

## கால்நடை மருத்துவ துணை நிலையம்

**வினா எண் 57797—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சியில் கால்நடை மருத்துவ துணை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

*(ஆ) எழாது.*

**18—**

## கால்நடை மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர்

**வினா எண் 57799—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் இயங்கிவரும் கால்நடை மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) சீர்காழியில் இயங்கிவரும் கால்நடை மருத்துவமனை அலுவலக் கட்டடம் 27-7-2004 காலை திடீரென்று சுவற்றில் பல இடங்களில் வெடிப்பு ஏற்பட்டு தரைமட்டத்தை விட 3 அங்குலம் இறங்கியது. கட்டடம் எந்த நேரத்திலும் இடிந்து விழும் நிலையில் உள்ளதால், பணியாளர் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. ஆதலால், மேற்படி கால்நடை மருத்துவமனையை வேறு கட்டடத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் சுற்றுச் சுவர் கட்டும் வினா எழாது.*

**19—**

## ஆடு வளர்ப்போர் சங்கம்

**வினா எண் 60661—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் பயன் பெறுவதற்காக ஆடு வளர்ப்போர் சங்கம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *தற்போது தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் பயன் பெறுவதற்காக ஆடு வளர்ப்போர் சங்கம் தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**20—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 62407—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி, ஆலஞ்சேரியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி, ஆலஞ்சேரி கிராமத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000-க்கும் குறைவாக 842 மட்டுமே உள்ளது. இதன் அருகில் 3 கி.மீ. தூரத்தில் கொண்டல் கால்நடை கிளை நிலையமும், 6 கி.மீ. தூரத்தில் வைத்தீஸ்வரன் கோயில் கால்நடை மருந்தகமும் உள்ளது. அரசு தற்போது துறையின் கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆதலால், ஆலஞ்சேரி கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.*

[2005 பிப்ரவரி 7

**21—**

## கால்நடை அறிவியலில் தகவல் தொழில்நுட்பம்

**வினா எண் 62875—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கிராமப்புறங்களில் கால்நடை அறிவியலில் தகவல் தொழில்நுட்பத்தைப் புகுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் கால்நடை அறிவியலில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த களப் பயிற்சி மற்றும் நிலையப் பயிற்சியை கிராமப்புற பண்ணையாளர்களுக்கு வழங்க தற்போது பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் கீழ்க்காணும் முகவரிகளில் இயங்கி வருகின்றன.

1. காளப்பட்டி பிரிவு, சத்தி ரோடு, சரவணம்பட்டி (அஞ்சல்), கோயம்புத்தூர் 641 035.

2. கால்நடை மருத்துவமனை வளாகம், காமராஜ் ரோடு, திருப்பூர் 641 604.

கோயம்புத்தூர் கிராமப்புற பண்ணையாளர்கள் இம்மையங்களை நேரிலோ அல்லது தொலைபேசி மூலமோ அணுகி கால்நடை மற்றும் கோழியின வளர்ப்பு குறித்த நவீன தொழில்நுட்பத் தகவல்களைப் பெறலாம். கால்நடை மற்றும் கோழியின அம்சங்கள் மேலாண்மை, தீவன முறை போன்ற அம்சங்கள் குறித்த ஆலோசனைகளும், பயிற்சியும் பெறலாம். கால்நடைகள் மற்றும் கோழியினங்களில் ஏற்படும் இழப்பு குறித்த ஆய்வு மற்றும் சிகிச்சை விவரங்களையும் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2005 பிப்ரவரி 7]

**22—**

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 64529—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதியிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் தேவையான மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதியில் பொன்னமராவதி மற்றும் சுப்பிரமணியாபுரம் ஆகிய ஊர்களில் இரு கால்நடை மருத்துவமனைகள் இயங்குகின்றன. அதில் சுப்பிரமணியாபுரம் கால்நடை மருந்துவமனை கால்நடை மருத்துவர் பதவி நிரப்பப்பட்டுள்ளது. தற்போது காலியாகவுள்ள பொன்னமராவதி கால்நடை மருத்துவமனை, கால்நடை மருத்துவர் பதவியின் பொறுப்புகளை சுப்பிரமணியாபுரம் கால்நடை மருத்துவமனை கால்நடை மருத்துவரே கூடுதல் பொறுப்பில் கவனித்து வருகிறார். அரசின் பரிசீலனையிலுள்ள கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்/கால்நடை மருத்துவர் பதவி உயர்வுக்கான பெயர்ப் பட்டியல் குறித்து அரசாணை வெளியிடப்பட்டதும், பொன்னமராவதி கால்நடை மருத்துவமனை கால்நடை மருத்துவர் பதவி நிரப்பப்படும்.

**23—**

## தொழிற்சாலைகள் அமைத்தல்

**வினா எண் 47674—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் எத்தனை தொழிற்சாலைகள் அமைக்க இசைவாணைகள் அளிக்கப்பட்டன?

[2005 பிப்ரவரி 7

(ஆ) எத்தனை தொழிற்சாலைகளில் உற்பத்தியைத் தொடங்க இசைவாணைகள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** (அ) 2002-2003 ஆம் ஆண்டில் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் 490 தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு இசைவாணைகள் அளிக்கப்பட்டன. (Consent to establish green site)

(ஆ) 1,101 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்க இசைவாணைகள் வழங்கப்பட்டுள்ளன. (Consent to operate)

**24—**

### தேயிலை பயிரிடல்

**வினா எண் 59382—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் அரசு மற்றும் வனத் துறைக்குத் தெரியாமல் தேயிலை பயிரிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** (அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பகுதியில் அரசு மற்றும் வனத் துறைக்குத் தெரியாமல் தேயிலை எதுவும் பயிரிடப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2005 பிப்ரவரி 7]

**25—**

### டான்டி தொழிலாளர் மருத்துவமனை

**வினா எண் 62281—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள டான்டி தொழிலாளர் மருத்துவமனையில் மகப்பேறு பிரிவு, பல் மருத்துவப் பிரிவு மற்றும் இருதய பிரிவு துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வால்பாறைக்கு அருகிலுள்ள சின்கோனாவில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள டான்டி மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவ சிகிச்சை வசதிகள் செய்யப்பட்டு பிரசவம் பார்க்கப்பட்டு வருகின்றது. பல் மற்றும் இருதயம் போன்ற சிறப்புச் சிகிச்சைப் பிரிவுக்காக சிறப்புத் தகுதியுள்ள மருத்துவர்கள் சின்கோனா போன்ற தொலைதூரப் பகுதிகளில் பணிபுரிய விரும்புவதில்லை. இருப்பினும், மேற்கண்ட நோய்களுக்கு சிகிச்சை தேவைப்படும் தொழிலாளர்கள் அருகிலுள்ள அரசு மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு, அதற்கான செலவினங்களை தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமே ஏற்றுக்கொள்கிறது.

**26—**

### மருந்துகள் வழங்குதல்

**வினா எண் 62337—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 7

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையிலுள்ள டான்டி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் டான்டி மருத்துவமனைக்குத் தேவையான மருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை சின்கோனாப் பகுதியில் இயங்கும் தமிழ்நாடு தேயிலைத் தோட்ட மருத்துவமனைகளுக்கு அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள மருந்துகள் தேவையான அளவு வழங்கப்பட்டு வருகிறது.

**27—**

## நர்ஸ் காலனி

**வினா எண் 62662—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள டான்டி மருத்துவமனையில் பணிபுரியும் நர்ஸ் காலனியை இரண்டு முறை யானைகள் இடித்து விட்டது அரசுக்குத் தெரியுமா ?

*(ஆ)* ஆம் எனில், நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** *(அ)* கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக மருத்துவமனையில் பணிபுரியும் நர்ஸ் குடியிருப்புகளுக்கு அருகில், இரவு நேரங்களில் யானைகள் வந்து சென்றுள்ளன. ஆனால், அக்குடியிருப்புகளுக்கு எந்தச் சேதமும் ஏற்படுத்தவில்லை.

*(ஆ)* கேள்வி எழவில்லை.



2005 பிப்ரவரி 7]

**28—**

## நெசவு ஆசிரியர் நியமனம்

**வினா எண் 35693—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை மாவட்டத்தில் நெசவு ஆசிரியர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

*(ஆ)* ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ)* அரசின் கொள்கை அடிப்படையில் கைத்தொழில் ஆசிரியர்கள், மரவேலை, நெசவு மற்றும் விவசாய ஆசிரியர் பணியிடங்களை பள்ளிக் கல்வித் துறையில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நிரப்புவதற்கு தடையாணை உள்ளது. எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் நெசவு ஆசிரியர் நியமனம் மேற்கொள்வதற்கு இயலாத நிலை உள்ளது.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**29—**

## பகுதிநேர நூலகம்

**வினா எண் 36686—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், மணக்கொல்லை பஞ்சாயத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா ?

*(ஆ)* ஆம் எனில், எப்போது ?

[2005 பிப்ரவரி 7

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், மணக்கொல்லை கிராம மக்கள் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றினால் அவ்விடத்தில் பகுதிநேர நூலகம் திறக்க இயலும்:

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ. 2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. தலா ரூ. 1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**30—**

## கிளை நூலகம்

**வினா எண் 44636—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கோமாபுரம் ஊராட்சி, கோமாபுரம் கிராமத்தில் புதிதாக கிளை நூலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 7]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கோமாபுரம் கிராமத்தில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும், நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்ட கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏதும் இதுவரை பூர்த்தி செய்யப்படாததால் அவ்விடத்தில் நூலகம் திறக்க இயலவில்லை:

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ. 2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. தலா ரூ. 1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**31—**

## புதிய வகுப்பறைகள்

**வினா எண் 48483—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, வெங்கரை நடுநிலைப் பள்ளியில் புதிய வகுப்பறைகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** கபிலர்மலை ஒன்றியத்திற்குட்பட்ட வெங்கரை

[2005 பிப்ரவரி 7

நடுநிலைப் பள்ளிக்கு 2002-2003 ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலமாக மூன்று வகுப்பறைக் கட்டடம் ஒன்றும், 2003-2004 ஆம் ஆண்டில் கபிலர்மலை ஊராட்சி ஒன்றியக் குழுவின் மூலமாக ஒரு கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய கட்டடம் கட்ட போதுமான இடவசதி இல்லை. எனவே, மேலும் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**32—**

## காவலர்கள் நியமனம்

**வினா எண் 48821—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இரவு நேரக் காவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தற்பொழுது அடிப்படைப் பணியாளர்களின் பணியிடத்தில் புதிய நியமனங்கள் வழங்கிட தடையாணை செயல்பாட்டில் உள்ளது.

**33—**

## கிளை நூலகம்

**வினா எண் 49301—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ரெட்டிதத்தூரில் கிளை நூலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 7]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, ரெட்டிதத்தூரில் மக்கள் தொகை 654. தமிழ்நாடு பொது நூலக விதிகள் 1950-ன்படி மக்கள்தொகை 5,000-க்கு மேல் உள்ள கிராமங்களில்தான் கிளை நூலகம் அமைக்க வழிவகை உள்ளது. குறைந்த (654) மக்கள் தொகையின் அடிப்படையில் மேற்படி கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை. தவிர, கிளை நூலகம் அமைக்க ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் தோற்றுவிக்க வேண்டும். மேலும், தற்பொழுது புதிய பணியிடம் தோற்றுவிக்க தடையாணை உள்ளது. எனவே, ஆண்டிமடம் தொகுதி, ரெட்டிதத்தூரில் கிளை நூலகம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை. எனினும், அவ்வூர் பொதுமக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவேற்றித்தரும் பட்சத்தில் அப்பகுதியில் பகுதிநேர நூலகம் அமைக்க இயலும்:

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**34—**

## பகுதிநேர நூலகம்

**வினா எண் 50489—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 7

(அ) செஞ்சி தொகுதி, இல்லோடு கிராமத்தில் பகுதிநேர நூல்கம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, இல்லோடு கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை. மேலும், அக்கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. எனினும், இல்லோடு கிராமத்தின் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் நூலகம் திறப்பதற்குரிய கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவேற்றித்தரும் பட்சத்தில் அக்கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்க இயலும்.

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. வருங்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தமாக 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான இலவச காலிமனை மாவட்ட நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**35—**

## இடைநிலை ஆசிரியர்கள்

**வினா எண் 55266—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 7]

2004-2005 ஆம் கல்வி ஆண்டில் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் எத்தனை பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** அரசின் கொள்கை முடிவின்படி அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக படிப்படியாக உயர்த்தி, பணியிடம் நிரப்பப்பட வேண்டும். எனவே, அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது என்பதற்கான நிலை எழவில்லை.

**36—**

## கிளை நூலகம்

**வினா எண் 57879—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் ஊராட்சியில் கிளை நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948-ன்படி மக்கள் தொகை 5,000-க்கு மேலுள்ள ஊர்களில் கிளை நூலகம் அமைக்கலாம். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் ஊராட்சியின் மக்கள்தொகை 1,253 ஆகும். எனவே, குறைந்த மக்கள்தொகை அடிப்படையில் வடகால்

[2005 பிப்ரவரி 7

ஊராட்சியில் கிளை நூலகம் அமைக்க வழிவகையில்லை. அவ்வாறு போதிய மக்கள்தொகை இருந்தாலும், புதிதாக கிளை நூலகம் அமைக்க ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். மேலும் அரசாணை (நிலை) எண் 212, நாள் 29-11-2002-ல் புதிய நியமனம் செய்ய தடையாணை உள்ளது. எனவே, வடகால் ஊராட்சியில் கிளை நூலகம் அமைப்பது சாத்தியமன்று. எனினும் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவேற்றித் தரும்பட்சத்தில் அப்பகுதியில் பகுதிநேர நூலகம் திறக்க இயலும்:

1. பகுதிநேர நூலகம் செயல்பட வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. குறைந்தது 5 சென்ட் காலிமனை நூலக ஆணைக் குழுவின் பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

**37—**

## பால்வள உற்பத்தியாளர் சங்கம்

**வினா எண் 60685—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கோட்டைப்பட்டினம், திருப்புனவாசல் பெருமருதூர், கரகத்திக்கோட்டை, துரையரசபுரம், ரெத்தினக்கோட்டை, அமரசிம்மேந்திரபுரம், அரசர்குளம் கிழக்கு, அம்பலவானேந்தல், மஞ்சக்குடி சாத்தியடி, ஆவணத்தான்கோட்டை, மணலூர், மணமேல்குடி, மேற்பனைக்காடு, இடையூர், மீமிசல், தாழனூர், பொன்பேத்தி, குருங்களூர் மற்றும் அமரடக்கியில் பால் உற்பத்தியாளர் சங்கம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2005 பிப்ரவரி 7]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மேலே குறிப்பிட்டுள்ள கிராமங்களில் கள ஆய்வு செய்யப்பட்டதில் அக்கிராமங்களில் பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்து செயல்படுத்துவதற்குத் தேவையான அளவு பால் உற்பத்தி இல்லை. எனவே, மேற்படி கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

**38—**

## இலவச அரிசி

**வினா எண் 31019—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் உள்ள கைத்தறி கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் எத்தனை பேருக்கு இலவச அரிசி வழங்கப்பட்டது?

(ஆ) எத்தனை சங்கங்கள் பயனடைந்தன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** (அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 489 உறுப்பினர்களுக்கு 29-7-2002, 21-8-2002 மற்றும் 15-9-2002 ஆகிய தேதிகளில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா 20 கிலோ வீதம், மூன்று முறை மொத்தம் 60 கிலோ இலவச அரிசி வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 29,640 கிலோ (494 X 60 கிலோ) இலவச அரிசி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியில் 20 சங்கங்கள் பயனடைந்துள்ளன.

[2005 பிப்ரவரி 7

39—

## கைத்தறி நெசவு

**வினா எண் 49795—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களின் வேலையில்லா இளைஞர்களை நெசவுத் தொழிலில் ஈடுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** கைத்தறி நெசவாளர்களில் 18 வயது நிரம்பிய நெசவுத் தொழில் வேலையில்லா இளைஞர்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து தொழில் செய்ய முன்வந்தால் 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்படி அவர்களை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து தொழில் வழங்க வாய்ப்புள்ளது.

40—

## நீச்சல் குளம் மற்றும் படகு இல்லம்

**வினா எண் 54576—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி ஏரியை சுற்றுலாத் துறை கையகப்படுத்தி நீச்சல் குளம் மற்றும் படகு இல்லம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி ஏரியை சுற்றுலாத் துறை கையகப்படுத்தி நீச்சல் குளம் மற்றும் படகு இல்லம் அமைப்பது தொடர்பான எவ்வித செயற்குறிப்பும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.



2005 பிப்ரவரி 7]

41—

## இன்ஜினியரிங் தொழிற்சாலைகளைத் திறத்தல்

**வினா எண் 51409—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் மூடிய இன்ஜினியரிங் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** கோவை மாவட்டத்தில் மொத்தம் 13 இன்ஜினியரிங் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. அதனால் சுமார் 4,102 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த 13 நிறுவனங்களில், 3 நிறுவனங்கள் கலைப்பு அதிகாரியின் பொறுப்பில் உள்ளன. 2 நிறுவனங்கள் குறித்த வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. தொழிலாளர் நீதிமன்றம் முன்பு ஒரு நிறுவனம் குறித்த வழக்கு நிலுவையில் உள்ளது. இதர காரணங்களுக்காக 2 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இவை தவிர, கதவடைப்பு, உற்பத்தி நிறுத்தம் ஆகிய காரணங்களுக்காக 5 நிறுவனங்கள் இயங்காமல் உள்ளன. இதில் 3 நிறுவனங்கள் குறித்த பிரச்சினை தற்சமயம் தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டு, அதன் தீர்வம் எதிர்பார்க்கப்படுகிறது. தீர்வம் கிடைக்கப்பெற்றபின் இந்த ஆலைகளை இயக்குவது குறித்து முடிவு செய்ய இயலும். ஒரு நிறுவனத்தைப் பொறுத்தவரை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்றுமொரு நிறுவனத்தைப் பொறுத்த வரையில், 31-12-2002-ல் ஒப்பந்தம் ஏற்படுத்தியும், நிர்வாகம் அளித்த புனரமைப்புத் திட்டத்தினை பி.ஐ.எப்.ஆர். ஏற்றுக் கொள்ளாததால், நிதி வசதி பெற்று நஷ்ட ஈடு வழங்க இயலவில்லையாதலால், அந்த ஆலை 1-10-2003 முதல் இயங்காமல் உள்ளது.

42—

## குடிநீர்ப் பஞ்சம்

**வினா எண் 10219—திரு. எஸ். சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 7

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட ஆவடி ராமலிங்கபுரம், காந்தி தெரு, பி.கே.டி. தெரு 1, 2 மற்றும் பாரதி தெரு பகுதிகளில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட ஆவடி ராமலிங்கபுரம் பகுதியில், 4.55 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்மட்டத் தொட்டி உள்ளது. மேலும், இப்பகுதியில் கிணறுகள் மூலமாக 12 பொதுக் குழாய்களும், நான்கு ஆழ்துளை க் குழாய்களும், ஒரு திறந்தவெளிக் கிணறும் உள்ளன. மேலும், குடிநீர் லாரிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2. காந்தி நகர், ஆர்.கே.பி. 1, 2 பகுதிகளில் இரண்டு ஆழ்துளைக் கிணறுகளும், 2002-2003 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மின் மோட்டாருடன் கூடிய ஆழ்துளைக் கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் லாரிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

3. பாரதி தெருவில், 4.55 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி உள்ளது. மேலும் இப்பகுதியில் கிணறுகள் மூலமாக 2 பொதுக் குழாய்களும், ஒரு ஆழ்துளைக் குழாயும் உள்ளன. மேலும் குடிநீர் லாரிகள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, ஆவடி நகராட்சியின் மூலம் குடிநீர் விநியோகம் முறையாக செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் தட்டுப்பாடு எதுவும் இல்லை.

**43—**

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 22943—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 7]

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் ஊராட்சி, காத்திக்கணக்கனூரிலுள்ள பால்வாடி சத்துணவு மையத்திற்கு குடிநீர் வசதிக்காக ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) அதன் விவரம், அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் ஊராட்சி, காத்திக்கணக்கனூர் குடியிருப்பில் உள்ள பால்வாடி சத்துணவு மையத்திற்கு காத்திக்கணக்கனூரில், இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு உடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இம்மையத்திற்குத் தனியாக ஆழ்துளைக் கிணறு அமைக்க கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**44—**

## மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா எண் 27352—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், புதுசத்திரம் ஒன்றியம், நவனி ஊராட்சிக்குட்பட்ட ஓலப்பாளையம் கிராமத்திற்கு மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** நாமக்கல் மாவட்டம், புதுசத்திரம் ஒன்றியம், நவனி ஊராட்சி, ஓலப்பாளையம் குடியிருப்புக்கு அருகிலுள்ள தத்தாரிபுரம் ஊராட்சியிலிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும்,

[2005 பிப்ரவரி 7

இக்குடியிருப்பு, 6 பேரூராட்சிகள் மற்றும் 1,399 ஊரகக் குடியிருப்புகளுக்கான பட்டணம் — சீராப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் இக்குடியிருப்பு போதுமான அளவு குடிநீர் வசதி பெறும்.

**45—**

## குடிநீர்

**வினா எண் 43867—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், இராமதேவம், குருவிக்கல்காடு, கரட்டுப்பாளையம், சுங்காரம்பட்டி கிராம மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* பரமத்தி ஒன்றியம், இராமதேவம் ஊராட்சி, இராமதேவம் குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பரமத்தி ஒன்றியம், சித்தம் பூண்டி ஊராட்சி, குருவிக்கல்காடு குடியிருப்புக்கு ஒரு கையிறைப்பான் மற்றும் சிறுமின்விசைத் திட்டம் மூலம் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பரமத்தி ஒன்றியம், குன்னமலை ஊராட்சி, கரட்டுப்பாளையம் குடியிருப்புக்கு 110 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் நாயக்கன்பாளையம் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2005 பிப்ரவரி 7]

பரமத்தி ஒன்றியம், சுங்காரம்பட்டி ஊராட்சி, சுங்கராம்பட்டி குடியிருப்புக்கு தனி மின்விசைத் திட்டம், சிறுமின்விசைத் திட்டம், ஆர். புதுப்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**46—**

## மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

**வினா எண் 43908—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பெருங்குறிச்சி கிராமம், உப்புப்பட்டி காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பெருங்குறிச்சி ஊராட்சியிலுள்ள உப்புப்பாளையம் அருந்ததியர் குடியிருப்புக்கு 2002-2003 ஆம் ஆண்டு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**47—**

## மழைநீர் கால்வாய்

**வினா எண் 53080—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 7

சென்னையிலுள்ள மழைநீர் கால்வாயின் மொத்த நீளம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சென்னையிலுள்ள மழைநீர் கால்வாயின் மொத்த நீளம் கடந்த 31-3-2004 வரை 834.21 கி.மீ. ஆகும்.

**48—**

## பூங்கா அமைத்தல்

**வினா எண் 53642—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மருத்துவமனைக்கு எதிரிலுள்ள காலியிடத்தில் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**49—**

## அவைக்கூட்ட அறை

**வினா எண் 54850—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகராட்சியில் அவைக்கூட்ட அறை கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



2005 பிப்ரவரி 7]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** எடப்பாடி நகராட்சியில் தற்போது அமைக்கப்பட்டுள்ள நகர்மன்றப் பேரவை அறை நல்ல நிலையில் உள்ளது. நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாததால் தற்சமயம் மன்றக் கூட்ட அறை புதியதாக அமைக்க இயலாத சூழ்நிலை உள்ளது.

**50—**

## விளையாட்டு அரங்கம்

**வினா எண் 55725—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் உள் விளையாட்டு மற்றும் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** (அ) நாமக்கல் மாவட்டத்தில் உள் விளையாட்டு மற்றும் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு நடவடிக்கையில் உள்ளது.

(ஆ) நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகக் கொண்ட விளையாட்டரங்கக் குழு, உள் விளையாட்டு மற்றும் விளையாட்டு அரங்கம் அமைக்க தக்க இடத்தினைத் தேர்வு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2005 பிப்ரவரி 7

## பட்டியல் 7

1—

### கட்டட வசதி

**வினா எண் 48720—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு பேரூராட்சி, திருவி.க. நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் வருவாய்த் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** பேரணாம்பட்டு பேரூராட்சி, பேரணாம்பட்டு பிர்கா, திரு.வி.க. நகரில் வருவாய்த் துறை அலுவலகம் எதுவும் இயங்கி வரவில்லை.

2—

### மனுநீதித் திட்டம்

**வினா எண் 51177—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மனுநீதித் திட்டத்தின்கீழ் 2003 ஆம் ஆண்டில் எத்தனை கிராமங்களில் எவ்வளவு மனுக்கள் பெறப்பட்டன?

(ஆ) அவற்றில் எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) தமிழ்நாட்டில் மனுநீதித் திட்டம் 2003 ஆம் ஆண்டில் 2,222 கிராமங்களில் நடத்தப்பட்டு 2,47,217 மனுக்கள் பெறப்பட்டன.



2005 பிப்ரவரி 7]

(ஆ) 57,879 மனுக்கள் நிலுவையில் உள்ளன.

3—

### நிலுவையில் உள்ள வழக்குகள்

**வினா எண் 9564—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளதை விரைவாக முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 31-7-2004 நிலவரப்படி அசல் வழக்குகள் (Original Suits) வாடகைக் கட்டுப்பாடு குறித்த அசல் வழக்குகள் (Rent Control Original Petition) உள்ளிட்ட 1,637 உரிமையியல் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் கண்டறியப்பட்டு அவற்றை விரைந்து முடிக்க பின்வரும் நடவடிக்கைகள் சென்னை உயர் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. மாதாந்திர பட்டியல் முறையின் மூலம் பழைய நிலுவையிலுள்ள வழக்குகள் கண்டறியப்பட்டு அவற்றை விரைந்து முடிக்க தகுந்த நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

2. நிலுவையிலுள்ள வழக்குகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் நீதிபதிகளுக்குத் தீர்வு காண வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. ஏழு வருடங்களுக்கு மேல் நிலுவையிலுள்ள வழக்குகளை முடிக்க இரட்டை வரையறை முறையும் புகுத்தப்பட்டுள்ளது.

4. மூத்த குடிமக்களது வழக்குகளை உடனுக்குடன் முடித்துக் கொடுக்க வழிகாட்டுதல்கள் (Directions) பிறப்பிக்கப்பட்டுள்ளன.

4—

## மென்பொருள்

**வினா எண் 63833—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலம் மென்பொருள் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலம் மென்பொருள் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. தனியார் தொழில் முனைவோர்கள் முன்வந்தால் அரசு அதனை ஊக்குவிக்கும்.

5—

## அங்காடிகளுக்குக் கட்டட வசதி

**வினா எண் 57157—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, காசாவயல் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட கீழ்க்குடி, ஒக்கூர் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட குமலூர், கானாவேந்தல், கரூர், நரசிங்கபுரம் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட சௌந்திரநாயகிபுரம், தனிக்கொண்டான், காவதுகுடி, பள்ளிவயல் கிராம அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி



தொகுதி, காசாவயல் வேளாண் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் கீழக்குடி முழுநேர நியாயவிலைக் கடை ஒக்கூர் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் கானாவேந்தல், கரூர், குமலூர் ஆகிய முழுநேர நியாயவிலைக் கடைகள், நரசிங்கபுரம் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் சௌந்திரநாயகிபுரம், தனிக்கொண்டான் மற்றும் காவதுகுடி முழுநேர நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகின்றன. மேற்காணும் நியாயவிலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு திட்டங்களில் தற்போது வழிவகை செய்யப்படவில்லை. நரசிங்கபுரம் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் பள்ளிவயல் பகுதிநேரக் கடைக்கு ஊர் மக்களே இலவசக் கட்டட வசதி செய்து தர வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதால், அரசு திட்டங்களின்கீழ் பள்ளிவயல் பகுதிநேரக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

6—

## கட்டட வசதி

**வினா எண் 57180—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட பெரிய கடை வீதி, முஸ்லீம் தெரு, அக்னி பஜார் மற்றும் திருப்புனவாசல் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட பறையாத்தூர் அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின்கீழ் பெரிய கடை வீதி முழுநேர நியாயவிலைக் கடையும், முஸ்லீம் தெரு என்கிற அக்னிபஜார் முழுநேர நியாயவிலைக் கடையும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தற்போதைய அரசுத் திட்டங்களின்கீழ் வழிவகை செய்யப்படவில்லை.

திருப்புனவாசல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கீழ் பறையாத்தூர் பகுதிநேரக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடைக்கு அந்த கிராம மக்கள்தான் இலவச கட்டட வசதி செய்து தர வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளதால், அரசு திட்டங்களின்கீழ் சொந்தக் கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

7—

## பயனடைந்த விவசாயிகள்

**வினா எண் 61409—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கோட்டைப்பட்டினம், மணமேல்குடி, திருப்புனவாசல், நிலையூர் ஆகிய தொடக்க கூட்டுறவு வங்கிகளில் 2001 ஆம் ஆண்டு வட்டி, அபராத வட்டித் தள்ளுபடி திட்டத்தின்கீழ் பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** வட்டி, அபராத வட்டி திட்டம் 2001-ன்கீழ் மேற்காண் வங்கிகளில் பயனடைந்த விவசாயிகள் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் பெயர் | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை | வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | கோட்டைப்பட்டினம் | 177 | 1,06,012 |
| 2 | மணமேல்குடி | 122 | 1,18,403 |
| 3 | திருப்புனவாசல் | 288 | 2,65,092 |
| 4 | நிலையூர் | 154 | 4,88,415 |
| | மொத்தம் | 741 | 9,77,922 |



இத்திட்டத்தின்கீழ் 30-11-2001 வரை தமிழ்நாட்டில் 6,11,193 விவசாயிகளுக்கு ரூ. 226.56 கோடி அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 32,143 விவசாயிகளுக்கு ரூ. 874.85 இலட்சம் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8—

## பயனடைந்த விவசாயிகள்

**வினா எண் 61414—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, தினையாக்குடி, கண்டனிவயல், காரக்கோட்டை, பெருங்காடு, ஆயங்குடி ஆகிய வேளாண் தொடக்க கூட்டுறவு வங்கிகளில் 2001 ஆம் ஆண்டு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி திட்டத்தின்கீழ் பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** வட்டி, அபராத வட்டி நிவாரணத் திட்டம் 2001-ன்கீழ் மேற்காண் வங்கிகளில் பயனடைந்த விவசாயிகள் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் பெயர் | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை | வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | தினையாக்குடி | 110 | 5,16,785 |
| 2 | கண்டனிவயல் | 135 | 1,37,877 |
| 3 | காரக்கோட்டை | 329 | 4,92,785 |
| 4 | பெருங்காடு | 96 | 85,696 |
| 5 | ஆயங்குடி | 54 | 73,902 |
| | மொத்தம் | 724 | 13,07,045 |

அரசாணை எண் 230, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 21-6-2001-ல் விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி நிவாரணத் திட்டம் 2001 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 30-11-2001 வரை தமிழ்நாட்டில் 6,11,193 விவசாயிகளுக்கு ரூ.226.56 கோடி அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 32,143 விவசாயிகளுக்கு ரூ.874.85 இலட்சம் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**9—**

### சத்துணவுக் கூடத்தைச் சீர்படுத்துதல்

**வினா எண் 32210—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஊராட்சி தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் சீர்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு 1999-2000 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சத்துணவுக் கூடம் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

**10—**

### சத்துணவுக் கூடக் கட்டடம்

**வினா எண் 32225—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சி ஆதி திராவிடர் நலப் பள்ளியில் ஆர்.சி.சி. கான்கிரீட் சத்துணவு சமையல் கூடம் உள்ளது.

**11—**

### சத்துணவுக் கூடக் கட்டடம்

**வினா எண் 32228—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பன்னங்குடி ஊராட்சி, கற்பள்ளம் ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பன்னங்குடி ஊராட்சி, கற்பள்ளம் ஒன்றியத்தில் உதவிபெறும் பள்ளி உள்ளது. இதற்கு அரசு நிதியில் பணிகள் மேற்கொள்ள அரசு விதிகளில் வழிவகை இல்லை என்றாலும், இப்பள்ளிக்கு பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.50,000/- மதிப்பீட்டில் சமையல் கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2005 பிப்ரவரி 7

12—

## சத்துணவுக் கூடக் கட்டடம்

**வினா எண் 32242—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கடைக்கன் வினாயகநல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், நல்லவினாயகபுரம் ஊராட்சியிலுள்ள கடைக்கன் வினாயகநல்லூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவு சமையல்கூடம் ரூ.50,000/- மதிப்பீட்டில் நடப்பு நிதி ஆண்டில் வறுமை ஒழிப்புத் திட்டத்தில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13—

## சத்துணவுக் கூடம்

**வினா எண் 32244—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, விழுக்காடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சி,



2005 பிப்ரவரி 7]

விழுக்காடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு 1999-2000 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் சத்துணவு சமையல்கூடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

14—

## சத்துணவுக் கூடம்

**வினா எண் 32256—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சி, கீழ்ச்சாலை உதவிபெறும் துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சி, கீழ்ச்சாலை உதவிபெறும் தொடக்கப் பள்ளிக்கு சத்துணவு சமையல் கூடம் அரசு நிதியில் கட்ட அரசு விதிமுறையில் வழிவகையில்லை என்றாலும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

15—

## சத்துணவுக் கூடம் அமைத்தல்

**வினா எண் 32257—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வேதராஜாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 பிப்ரவரி 7

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், வேதராஜாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவு சமையல் கூடம் ஓட்டுக் கட்டடத்தில் உள்ளது. அதில் சத்துணவு சமையல் சமைத்து வழங்கப்படுகிறது.

16—

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 32294—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, தாழந்தோண்டியிலுள்ள ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, தாழந்தோண்டியிலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவு சமையல் கூடம் நல்ல நிலையில் உள்ளது.

17—

**சத்துணவுக் கூடக் கட்டட வசதி**

**வினா எண் 32332—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 7]

(அ) சீர்காழி நகரில் உள்ள கோவில்பத்து கிருஷ்ணமூர்த்தி முதலியார் உதவிபெறும் உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள கோவில்பத்து உதவிபெறும் பள்ளி சத்துணவு சமையல் கூடம் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டினால் போடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

18—

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 32346—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் உள்ள புழுகாப்பேட்டை ராதாகிருஷ்ணா உதவிபெறும் நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் உள்ள புழுகாப்பேட்டை ராதாகிருஷ்ணா நடுநிலைப் பள்ளி (உதவிபெறும் பள்ளி)-க்கு சத்துணவு சமையல் கட்டடம் அரசு நிதியில் கட்ட விதிமுறையில் வழிவகையில்லை என்றாலும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.50,000/- மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

19—

### சத்துணவுக் கூடக் கட்டடம்

**வினா எண் 32347—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி நகரிலுள்ள டி.இ.எல்.சி. உதவிபெறும் நடுநிலைப் பள்ளிக்கு புதிய சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரிலுள்ள டி.இ.எல்.சி. உதவிபெறும் நடுநிலைப் பள்ளிக்கு புதிய சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர அரசு விதிமுறைகளில் வழிவகை இல்லை என்றாலும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.50,000/- மதிப்பீட்டில் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

20—

### சத்துணவுக் கூடம்

**வினா எண் 32349—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, ஆலங்காடு ஊராட்சியிலுள்ள வசந்தலா உதவிபெறும் நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, ஆலங்காடு ஊராட்சியிலுள்ள அரசு நிதியுதவி பெறும் வசந்தலா நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவு மையம் கட்டித்தர அரசு விதிமுறைகளில் வழிவகையில்லை என்றாலும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.50,000/- மதிப்பீட்டில் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*



21—

### மகப்பேறு மருத்துவமனைகள் கட்டுதல்

**வினா எண் 50856—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஏற்காடு தொகுதியில் உள்ள கிராமங்களில் மகப்பேறு மருத்துவமனைகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *(அ) ஏற்காடு தொகுதியில் உள்ள கிராமங்களில் மகப்பேறு மருத்துவமனைகள் கட்டித் தரும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

22—

### நோய்கள் ஆராய்ச்சி

**வினா எண் 55156—திரு. ஜ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 7

• தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் என்னென்ன நோய்கள் ஆராய்ச்சி (மற்றும்) பயிற்றுவித்தல் நடத்தப்படுகின்றன ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் கீழ்க்கண்ட துறைகளில் ஆராய்ச்சி நடத்தப்படுகின்றன:

**சோதனை மருத்துவத் துறை மற்றும் எய்ட்ஸ் ஆராய்ச்சி மையம்**

பாலியல் நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் இரத்த தானம் செய்பவர்கள் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் இரத்தத்தில் எச்.ஐ.வி. எவ்வளவு சதவிகிதம் பரவியுள்ளது என்பதைக் கண்டறிதல் தொடர்பான ஆராய்ச்சி கடந்த ஆண்டு நடத்தப்பட்டது. தற்போது எச்.ஐ.வி. தொற்றினை எதிர்க்கும் மருந்துகளின் செயல்திறன் மற்றும் தாய் சேய் மேவாத் திட்டத்தில் கூட்டு மருந்துகளின் திறன் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. குருதி ஏற்றுத் துறையில் இரத்த வகைப் பிரிவுகள் கண்டறியப்படுகின்றன. நோய்த் தடுப்புத் துறையில் தொற்றுநோய் விளைவிக்கக்கூடிய கிருமிகளைக் கண்டறிதல் மற்றும் அவை சம்பந்தமான ஆராய்ச்சிகள், இரத்தம் ஏற்றுதல் மூலம் பரவும் நோய்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நோயாளிகளுக்குச் செய்ய வேண்டிய பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. எம்டி. (Blood Transfusion) பட்ட மேற்படிப்பு செயல்பட உள்ளது.

**23—**

**காலரா நோய் பரவாமல் தடுத்தல்**

**வினா எண் 59285—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் காலரா பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?



2005 பிப்ரவரி 7]

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் ஒரே ஒரு நபர் மட்டுமே காலரா நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற அவரும் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளார். கடந்த ஆண்டுகளில் வழக்கத்திற்கு மாறாக ஏற்பட்ட வறட்சி காரணமாக குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் பொதுமக்கள் கிடைத்த நீரையே உபயோகித்து வந்துள்ளனர். சிலர் மாசு கலந்த குடிநீரை உபயோகித்ததால் தீவிர வயிற்றுப்போக்கு நிகழ்வுகள் நடந்தது கண்டறியப்பட்டு தீவிர கண்காணிப்புப் பணிகளில் பொதுச் சுகாதார மருத்துவர் அடங்கிய மருத்துவக் குழுக்கள், போதிய மருந்து உபகரணங்களுடன் அந்தந்தப் பகுதிகளில் முகாமிட்டு நோய் மேலும் பரவா வண்ணம் அவர்களால் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் நோய் மேலும் பரவா வண்ணம் தடுக்கப்பட்டுள்ளன. அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய மருத்துவ வசதியுடன் நோய் தடுப்பு/நோய் முன் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் காலரா நோய் பரவ சாத்தியமில்லை.

**24—**

**மருத்துவ ஊர்தி**

**வினா எண் 59831—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள சோலையார் டேம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ ஊர்தி வாங்கித்தர அரசு ஆவன செய்யுமா ?

[2005 பிப்ரவரி 7

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தற்போது 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே மருத்துவ உதவி வழங்கப்படுகிறது. சோலையார் நகர் (டேம் அல்ல) ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். எனவே, வால்பாறை தொகுதியில் உள்ள சோலையார் நகர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ ஊர்தி வாங்கித்தர சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

## மருந்தாளுநர் நியமனம்

**வினா எண் 60883—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கு மருந்தாளுநர் நியமிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பணியிடத்தில் ஏற்கெனவே சித்தா மருந்தாளுநர் பணிபுரிந்து வருகிறார்.

26—

## மருந்தாளுநர் நியமனம்

**வினா எண் 60887—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம் அரசு மருத்துவமனை சித்த மருத்துவப் பிரிவிற்கு மருந்தாளுநர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?



2005 பிப்ரவரி 7]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம் அரசு மருத்துவமனை சித்த மருத்துவப் பிரிவிற்கு சித்த மருந்தாளுநர் பதவி ஒப்பளிக்கப்படவில்லை. எனவே, சித்த மருந்தாளுநர் நியமிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

## வேலைவாய்ப்பு முன்னுரிமை

**வினா எண் 57676—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும்போது முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோருக்கு வேலைவாய்ப்பு பதிவுக்கு முன்னுரிமை சான்று அரசால் அளிக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், சேலம் மாவட்டத்தில் இத்திட்டத்தின்படி எவ்வளவு பேர் பதிவு செய்வதற்கு முன்னுரிமை பெற்றுள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின்படி சேலம் மாவட்டத்தில் இதுவரை, முன்னாள் படைவீரரைச் சார்ந்தோர் 477 நபர்கள் முன்னுரிமைச் சான்று பெற்று வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ளனர்.

| | |
|---|---|
| முன்னாள் படைவீரர்களின் மகன்கள் | = 345 |
| முன்னாள் படைவீரர்களின் மகள்கள் | = 93 |
| முன்னாள் படைவீரர்களின் மனைவியர் | = 39 |
| மொத்தம் | = 477 |

28—

## கறவை மாடு வழங்குதல்

**வினா எண் 57798—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியில் வசிக்கும் ஆதிதிராவிடர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடு வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருநகரி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வழங்க இதுவரை விண்ணப்பங்கள் தாட்கோ மாவட்ட மேலாளர், நாகப்பட்டினம் அலுவலகத்தில் பெறப்படவில்லை. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தக்க சான்றுகளுடன் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாக தாட்கோ மாவட்ட மேலாளருக்கு கிடைக்கப் பெற்றதும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மானியக் கடன் உதவி வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

29—

## சுய வேலைவாய்ப்பு வசதி

**வினா எண் 61959—திரு. கு. ஜெயக்குமார்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** *தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு தனி நபர் தொழில் முனைவோர் திட்டம் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் படித்த இளைஞர்கள் தங்கள் தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ற தொழிலை தேர்வு செய்து சுயமாகத் தொழில் தொடங்க வங்கிகள் மூலம் தாட்கோ மானியத்துடன் கடனுதவி வழங்கப்படுகிறது. மேலும், அவரவர் கல்வித் தகுதிக்கு ஏற்ப அதிக வேலைவாய்ப்பு உள்ள துறைகளில் தொழிற் பயிற்சியும், பயிற்சிக்குப் பின் மானியக் கடனுதவியும் வழங்கப்படுகிறது.*

30—

## மணல் எடுத்தல்

**வினா எண் 20511—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியில் மாணம்பள்ளி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் லாரிகளில் மணல் கடத்துவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) அந்த லாரி உரிமத்தை அரசு ரத்து செய்யுமா?*

*(இ) உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** *(அ), (ஆ) மற்றும் (இ) தற்பொழுது அரசாணை எண் 95, தொழில் துறை, நாள் 1-10-2003-ல் மாநிலத்திலுள்ள அனைத்து தனியார் மணல் குவாரி குத்தகைகளை ரத்து செய்தும் அரசுத் துறை (பொதுப் பணித் துறை) மூலம் மணல் குவாரிப் பணி செய்து வழங்குவதற்கும் ஆணை*

வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசு புறம்போக்கு நிலத்திலோ அல்லது பட்டா நிலத்திலோ தனி நபர்களுக்கு இனி மணல் குவாரி குத்தகைகள் வழங்கப்பட மாட்டாது. இதன்மூலம் கள்ளத்தனமாக மணல் கடத்தப்படுவதைத் தடுக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**31—**

## மணல் குவாரி ஏலம்

**வினா எண் 35075—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விருத்தாசலம் பகுதி ஆற்றுப் படுகையில் உள்ள மணல் குவாரி ஏலம் விடப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** *தற்பொழுது அரசாணை எண் 95, தொழில் துறை, நாள் 1-10-2003-ன் மூலம் மாநிலத்தில் மணல் குவாரிப் பணி அரசு பொதுப் பணித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனி நபர்களுக்கு ஏலம் மூலம் குத்தகை வழங்கும் நடைமுறை தற்பொழுது ரத்து செய்யப்பட்டுவிட்டது.*

**32—**

## நிவாரணம் வழங்குதல்

**வினா எண் 52124—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2003-2004 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மர சாகுபடி விவசாயிகள் எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) 2003-2004 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மர சாகுபடி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க எவ்வித நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை.*

**33—**

## காட்டுத் தீ தடுப்புத் திட்டம்

**வினா எண் 62880—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலை வட்டம், அமராவதி, உடுமலை வனப் பகுதியில் ஒருங்கிணைந்த காட்டுத் தீ தடுப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** *(அ) உடுமலை வட்டம், அமராவதி, உடுமலை வனப் பகுதியில் ஒருங்கிணைந்த காட்டுத் தீ தடுப்புத் திட்டம் என்ற திட்டம் ஏதும் தனியே நடைமுறையில் இல்லை. எனினும், உடுமலை வட்டம், அமராவதி மற்றும் உடுமலை சரகத்திலுள்ள வனப் பகுதிகளில் காட்டுத் தீ தடுப்பு, மேற்குத் தொடர்ச்சி மலைகள் திட்டம், வனப் பாதுகாப்புத் திட்டம், இந்திரா காந்தி வன உயிரின உய்விடத் திட்டம், இந்திரா காந்தி தேசியப் பூங்கா திட்டம் மற்றும் யானை வளர்ப்புத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற நிதி ஆதாரங்களைக் கொண்டு தீ தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், தீ தடுப்புக் காவலர்களை நியமித்தல் போன்ற தீ தடுப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன.*

*(ஆ) மேற்குறிப்பிட்ட பதிலின் அடிப்படையில் கேள்வி எழவில்லை.*

[2005 பிப்ரவரி 7

34—

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 39297—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, மணமேல்குடி அரசினர் ஆண்கள் மற்றும் அறந்தாங்கி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் நியமிக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** ஆசிரியர் மாணவர் விகிதங்களுக்கு ஏற்ப ஆசிரியர் தேவை விவரங்கள் கீழ்வருமாறு:

| | அறந்தாங்கி மணமேல்குடி அரசினர் (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி | | அறந்தாங்கி மணமேல்குடி அரசினர் (பெண்கள்) மேல்நிலைப் பள்ளி | |
|---|---|---|---|---|
| | காலிப் பணியிடம் | கூடுதல் தேவைப் பணியிடம் | காலிப் பணியிடம் | கூடுதல் தேவைப் பணியிடம் |
| முதுகலை ஆசிரியர் | 1 | — | 2 | 1 |
| பள்ளி உதவி ஆசிரியர்/ இடைநிலை ஆசிரியர் | — | 3 | — | 3 |
| நெசவு ஆசிரியர் | 1 | — | — | — |

காலிப் பணியிடங்கள் நடைமுறையில் உள்ள விதிகளின்படி மாறுதல் மூலம் நிரப்பப்படும். கூடுதல் தேவைப்படும் பணியிடங்கள் முன்னுரிமைப்படி பணி நிரவல் மூலம் நிரப்பப்படுகின்றன. தேவைப்படும் கூடுதல் பணியிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்படும் நிலையில் பிற பள்ளிகளில் மிகவும் கூடுதல் தேவை இருந்தமையால் இப்பள்ளிகளுக்குக் கூடுதல் பணியிடங்கள் வழங்கப்படவில்லை.



2005 பிப்ரவரி 7]

35—

## பொது நூலகம்

**வினா எண் 40504—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1-வது வட்டத்தில் முதலாவது பகுதியில் பொது நூலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1—வது வட்டத்தில் நூலகம் திறக்கக் கோரி கொடுங்கையூரிலிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு முதற்கட்டமாக பகுதிநேர நூலகம் திறப்பதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகள் விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய நிபந்தனைகள் இன்னும் நிறைவு செய்யப்படாததால் அவ்விடத்தில் பகுதிநேர நூலகம் அமைக்க இயலவில்லை:

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தமாக 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை இலவச காலிமனை மாவட்ட நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்படவேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ. 2,000/- மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

5. ரூ. 1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

[2005 பிப்ரவரி 7

36—

## பணி நிரந்தரம்

**வினா எண் 55690—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு நூலகங்களில் தினக்கூலி அடிப்படையிலும், செக்யூரிட்டி மூலமும் பணிபுரிந்து வருபவர்களின் பணி நிரந்தரம் செய்யப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *பொது நூலகத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட நூலக ஆணைக் குழு கிளை நூலகங்களில் காலியாகவுள்ள நூலகர் பணியிடங்களில் முறையான நியமனம் மாவட்ட வேலைவாய்ப்பகம் மூலம் தகுதியுள்ள பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட வேண்டும். நூலகங்களில் கூடுதல் பணிகளைச் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் நூலகருக்கு பணியில் உதவ தேவையின் அடிப்படையில் தினக்கூலி மற்றும் செக்யூரிட்டி மூலம் பணியாளர்கள் அவ்வப்போது தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் தினக்கூலி அடிப்படையிலும், செக்யூரிட்டி மூலம் பணிபுரிந்து வருபவர்களின் பணியினை நிரந்தரம் செய்ய இயலாது.*

37—

## கழிப்பிடம் சீர் செய்தல்

**வினா எண் 2708—திரு. டி.பி. பொன்னம்பலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை மாநகராட்சி 3 மற்றும் 4-வது வார்டுகளிலுள்ள கழிப்பிடங்களை சீர்செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*



2005 பிப்ரவரி 7]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *மதுரை மாநகராட்சி 3 மற்றும் 4-வது வார்டுகளிலுள்ள கழிப்பறைகள் மராமத்துப் பணிகள் முடிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகின்றன. 4-வது வார்டிலுள்ள அழகர் நகர் பகுதி கழிப்பறை மட்டும் நீதிமன்ற வழக்கு காரணமாக இயங்காமல் உள்ளது.*

38—

## கழிவறை செப்பனிடல்

**வினா எண் 7410—திரு. டி.பி. பொன்னம்பலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சமயநல்லூர் தொகுதியில் உள்ளடங்கும் மதுரை மாநகரம் 1-8 வார்டுகளிலுள்ள கழிவறைகளை தனி நபர் பயன்படுத்திக் கொண்டும் பராமரிப்பு இன்றியும் உள்ளது. அரசு மீட்டு செப்பனிட்டுத் தருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி, வார்டுகள் 1-8 வரையிலுள்ள கழிப்பறைகள் ஏதும் தனி நபர் பயன்பாட்டில் இல்லை. மேலும், வார்டு எண் 2, 3, 4, 5, 7 மற்றும் 8 ஆகிய இடங்களிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைகள் தண்ணீர் வசதியுடன் மாநகராட்சியால் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. வார்டு எண் 1 மற்றும் 6 ஆகிய இடங்களிலுள்ள கழிப்பறைகள் மராமத்துப் பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

[2005 பிப்ரவரி 7

39—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10215—திரு. சி. சண்முகம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஒன்றியம், கோளப்பன்சேரி ஊராட்சியில் மேலும் ஒரு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஒன்றியம், கோளப்பன்சேரி ஊராட்சியில் ஏற்கெனவே உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைத் தவிர கோளப்பன்சேரி காலனிக்கு கூடுதலாக 2002-2003 ஆம் வருடம் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.*

40—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 13345—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், கூத்தப்பாடி கீழூர் (செல்லனூர்) என்ற இடத்தில் குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*



2005 பிப்ரவரி 7]

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம்' ஊராட்சி ஒன்றியம், கூத்தப்பாடி கீழூர் (செல்லனூர்) என்பது கூத்தப்பாடி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்புக்கு 11 கையிறைப்பான்கள் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் ஆகியவற்றின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.*

41—

## குடிநீர் வசதி

**வினா எண் 22442—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சி, ஏ.கே. புதூரில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு ஒரு சின்டெக்ஸ் டேங்க் மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சிக்குட்பட்ட ஏ.கே.புதூரில் வசிக்கும் மக்களுக்கு இங்குள்ள 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியின் மூலம், ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 3/2000 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சின்டெக்ஸ் தொட்டி மூலம் குடிநீர் வழங்கும் நிலை இல்லை.*

[2005 பிப்ரவரி 7

42—

## குடிநீர் வழங்கல்

**வினா எண் 22951—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், கோணங்கியூர் மேல் காடு (ராஜா கோவில் வளவு) பகுதியிலுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டி 3 வருடம் ஆகியும் அங்குள்ள மக்களுக்கு குடிநீர் வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட கோணங்கியூர் மேல்காடு (ராஜா கோவில் வளவு) பகுதியில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்படுகிறது.

43—

## நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 26047—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 7]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, கோவள்ளி கோம்பை பகுதியில் தரைமேல் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, கோவள்ளி கோம்பை குடியிருப்பில் 7 கையிறைப்பான்கள் மற்றும் 2003-2004-ல் நிறைவேற்றப்பட்ட 1,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமேல் நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய சிறு மின்விசைத் திட்டம் ஆகியவை மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

44—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 29175—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்களக்குறிச்சி புதுக் காலனியில் ஆழ்துளைக் கிணறு ஒன்றை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஆனைமலை ஒன்றியம், அங்களக்குறிச்சி ஊராட்சி, அங்களக்குறிச்சி புதுக் காலனி, அங்களக்குறிச்சி

குடியிருப்புடன் சேர்ந்தே உள்ள பகுதியாகும். இதன் மொத்த மக்கட்தொகை 6,641. இக்குடியிருப்பு 3 மின்னிறைப்பான்கள் மூலமும் மற்றும் அங்களக்குறிச்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமும் குடிநீர் வசதி பெறுகிறது. எனவே, புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

**45—**

## மகளிர் சுய உதவிக் குழுக்கள்

**வினா எண் 34109—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரத்திலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இந்தக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) செங்கற்பட்டு நகரத்தில் மொத்தம் 150 சுய உதவிக் குழுக்கள் உள்ளன.

(ஆ) இதில் 82 சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக ரூ.13.68 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**46—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 54152—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், 5-வது பகுதி. பெரியார் நகர் பிரிவு சாலையிலிருந்து திடீர் நகர் வரை தார்ச் சாலை அமைக்கப்படுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சி, 5-வது பகுதி, பெரியார் நகர் பிரிவு சாலையிலிருந்து திடீர் நகர் வரை சாலை அமைக்கும் பணிக்கு ரூ.10,00,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை நான்கு மாதத்தில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**47—**

## கிணறு தூர் வாருதல்

**வினா எண் 54153—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், 5-வது பகுதி, பெரிய புதூர் அர்த்தநாரிக் கவுண்டர் தோட்டத்திலுள்ள பொதுக் கிணற்றைத் தூர் வார அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சி, 5-வது பகுதி, பெரியபுதூர் அர்த்தநாரிக் கவுண்டர் தோட்டத்தில் உள்ள பொதுக் கிணற்றினைத் தூர் வார மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**48—**

## சாலை புதுப்பித்தல்

**வினா எண் 54158—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 7

சேலம் மாநகர், 7-வது பகுதி, கம்பர் தெரு மாரியம்மன் கோயிலிலிருந்து வசந்தபுரம் வரை சாலை புதுப்பிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சி, 7-வது பகுதி, கம்பர் தெரு மாரியம்மன் கோயிலிலிருந்து வசந்தபுரம் வரையுள்ள சாலையைப் புதுப்பிக்கும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**49—**

## கிணறு தூர் வாருதல்

**வினா எண் 54161—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், 12-வது பகுதி, நரசுஸ் காபி கம்பெனி அருகில் டி.வி.எஸ். பின்புறமுள்ள மயானத்திற்கு அருகில் உள்ள கிணறு தூர் வாரி சுத்தம் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சி, 12-வது பகுதி, நரசுஸ் காபி கம்பெனி அருகில் டி.வி.எஸ். பின்புறமுள்ள மயானத்திற்கு அருகில் உள்ள கிணற்றைத் தூர்வாரி சுத்தம் செய்யவும், சுற்றுச் சுவர் அமைத்து இரும்புவேலி அமைக்கவும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேற்கண்ட பணியை வரும் நிதி ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்யப்பட்டு வருகிறது.



2005 பிப்ரவரி 7]

**50—**

## திரைக்காட்சிகளில் வன்முறையைத் தடுத்தல்

**வினா எண் 58128—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திரையிடப்படும் திரைக்காட்சிகளில் வங்கிகளிலும், வீட்டிற்குள்ளும் புகுந்து கொள்ளையடிப்பது, சிறைச்சாலைகளில் இருந்து கைதிகள் தப்பி விடுவது மற்றும் கொலை செய்வது போன்ற திரைக்காட்சிகளைக் காட்டுவதற்கு தடை செய்வது குறித்து மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திரைப்பட தயாரிப்பாளர்களின் கலைத்திறன் வெளிப்பாடு மற்றும் ஆக்கப்பூர்வ தயாரிப்புகளை மத்திய தணிக்கைக் குழு அனுமதி சான்றிதழ் வழங்கும்போது தடை செய்வது இல்லை. குற்றங்களை நியாயப்படுத்தும் மற்றும் பெருமைப்படுத்தும் வசனங்களை மற்றும் காட்சிகளை மட்டும் இக்குழு தடை செய்து சான்றிதழ் வழங்குகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறித்து மத்திய அரசு வெளியிட்ட ஆணை

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளிக்கிழமை, 4 ஆம் தேதியன்று நான் சட்டப் பேரவையிலே பேசிய நேரத்தில், முதல்வர் அவர்கள் 30 ஆம் தேதி பிரதமருக்கு எழுதிய கடிதம் சம்பந்தமாக நான் குறிப்பிட்டிருந்தேன். அந்தக் கடிதத்திற்கு பிரதமர் அவர்கள் 31 ஆம் தேதி பதில் எழுதியிருந்தார். நான் அதைப்பற்றிப் பேசும்போது, எழுதாத கடிதம் என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். பிறகு, அந்தக் கடிதம் வரவில்லை என்று சொன்னார்கள். அந்தக் கடிதத்திற்குப் பதிலாகத்தான் உள் துறை அமைச்சகத்திலிருந்து தனக்குப் பதில் வந்திருப்பதாகச் சொன்னார்கள். உள் துறை அமைச்சரிடத்திலிருந்து கடிதமாக வந்ததா? அல்லது அது அரசாணையாக வந்ததா? அல்லது வெறும் O.M., Office Memorandum-ஆ அல்லது விளக்கமா என்பதை அன்றையதினம் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, இப்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், (குறுக்கீடு) இல்லை, உங்களுடைய பேச்சினுடைய தொடர்ச்சியா இது? (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விளக்கம் கேட்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு விளக்கம் சொல்லத் தயாராகவே இருக்கிறேன். கடந்த வெள்ளிக்கிழமை, அதாவது, 04-02-2005 அன்று இந்த அவையில் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நான் அளித்த பதில் நூற்றுக்கு நூறு உண்மை. கடந்த 30 ஆம் தேதியன்று, நான் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதன்பிறகு, 31 ஆம் தேதியிட்ட மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்தின் அரசாணை இந்த அரசால் பெறப்பட்டது. அரசாணை என்பதை கடந்த 4 ஆம் தேதி தெளிவாகக் குறிப்பிட்டு, அதனை வாசித்தும் காண்பித்தேன். ஆகவே, உள் துறை அமைச்சகத்திலிருந்து வந்தது கடிதமா, அரசாணையா என்பதை முதல்வர் விளக்கவில்லை என்று திரு. எஸ்.ஆர்.பி. சொல்வது தவறு. அது அவைக்



குறிப்புகளிலேயே உள்ளது. அதன் பின்னர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கடந்த 4 ஆம் தேதி பேசுகின்றபோது, பிரதமர் அனுப்பிய"கடிதம் எங்கே என்று கேட்டார். அதுவரை பிரதமரிடமிருந்து எந்தக் கடிதமும் பெறப்படவில்லை. 4 ஆம் தேதி, 04-02-2005 அன்று நான் இந்தச் சட்டசபைக்கு வரும்வரை பிரதமரிடமிருந்து எவ்விதமான கடிதமும் எனக்கு வரவில்லை. சட்டசபை நிகழ்ச்சிகள் முடிந்து, நான் இல்லத்திற்குச் சென்றபிறகு, 04-02-2005 ஆம் நாள் மாலைதான் பிரதமருடைய 31-1-2005 தேதியிட்ட கடிதம் கிடைக்கப்பெற்றது. பிரதமரின் கடிதத்தில் 31-1-2005 என்று தேதியிடப்பட்டிருந்ததே தவிர, அது 04-02-2005 அன்று சட்டசபை நிகழ்ச்சிகள் முடிந்து நான் இல்லத்திற்குச் சென்ற பிறகு, அன்று மாலைதான் எனக்குக் கிடைத்தது. உடனடியாக நான் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பி, அதற்குப் பதில் அனுப்பி, அந்தக் கடிதத்திலேயே தெளிவாக நடந்ததைக் குறிப்பிட்டிருக்கிறேன். அது பத்திரிகைகளிலேயும் வெளிவந்திருக்கிறது. ஆக, இது வேண்டுமென்றே செய்யப்பட்ட காரியமோ என்று இப்போது நினைக்கத் தோன்றுகிறது. காரணம், வழக்கமாக பிரதமர் அலுவலகத்திலிருந்து அல்லது மத்திய அமைச்சகம் எதுவாக இருந்தாலும், ஒரு மத்திய அமைச்சகத்திலிருந்து இத்தகைய முக்கியமான கடிதம் ஒரு மாநிலத்தின் முதலமைச்சருக்கு வருகின்றபோது, அனுப்புகின்றபோது முதலில் உடனடியாக அதை Fax மூலம் அனுப்புவார்கள். இதுவரை வந்த முக்கியமான கடிதங்கள் எல்லாம் அப்படித்தான் வந்திருக்கின்றன. ஒரு கடிதத்தில் ஒரு தேதியிட்டு அன்றையதினமே Fax மூலம் அனுப்பிவிடுவார்கள். ஆகவே, உடனடியாக அது முதலமைச்சரின் பார்வைக்கு வரும். அதில் என்ன இருக்கிறது என்பது இந்த அரசுக்கும் தெரியும். பின்னர் fair copy-ஐ தபால் மூலம் அனுப்புவார்கள். அது பெரும்பாலும், 5 நாட்கள், 6 நாட்கள் அல்லது ஒரு வாரம் கழித்துக்கூட இங்கே வந்து சேரும். ஆனால், இந்த முறை 31-01-2005 என்று பிரதமர் அவர்களின் கடிதத்தில் தேதியிடப்பட்டிருக்கிறதே தவிர, அன்றையதினம் எந்த Fax-ம் இங்கே பெறப்படவில்லை. ஆகவே, தபால் மூலம்தான் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. என்றைக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டது என்பது எங்களுக்குத் தெரியாது. ஆகவே, பிரதமர் இத்தகைய ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார் என்ற செய்தியே எங்களுக்குத் தெரியாது, எனக்கும் தெரியாது, இந்த அரசுக்கும் தெரியாது. ஆனால், வெள்ளிக்கிழமை அன்று பேசிய திரு. எஸ்.ஆர்.பி அவர்களுக்கு மட்டும் தெரிந்திருக்கிறது. அது எப்படி? மாநில முதலமைச்சருக்கும், மாநில

அரசுக்கும் பிரதமர் இத்தகைய ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார் என்ற செய்தியே தெரியாதபோது, அன்றையதினம் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு மட்டும் தெரிந்து, அந்தக் கடிதம் எங்கே, எங்கேயென்று திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டிருந்தார். ஆகவே, இதிலிருந்து - இதெல்லாம் ஒரு யூகம்தான்—என்ன நினைக்கத் தோன்றுகிறது என்றால், 30 ஆம் தேதி நான் பிரதமருக்கு ஒரு கடிதம் அனுப்பி இருந்தேன். அதில் மத்திய நிதி அமைச்சர் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை மானியமாகவும், கடனாகவும் வழங்கப்படும். இந்த மானியமும், கடன் தொகையும் வங்கிகள் மூலமாகத்தான் வழங்கப்படும் என்று ஒரு பேட்டியளித்திருக்கிறார். ஆனால், இவையெல்லாம் மாநில அரசு வழியாகத்தான் வழங்கப்பட வேண்டுமென்று 30 ஆம் தேதியிட்ட கடிதத்தில் நான் பிரதமரை கோரியிருந்தேன்.

*முற்பகல் 11-20*

*31-1-2005* அன்று அதற்குப் பதில் தரும் விதமாக மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்திலிருந்து அந்த அமைச்சகத்தின் அரசாணை இங்கே அனுப்பப்பட்டது. அந்த அரசாணையை நான் வாசித்தும் காண்பித்தேன். அந்த அரசாணையில் மாநில அரசுக்குத்தான் இந்த நிதி வழங்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டு இருந்தது. இதோ மீண்டும் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்குக் காண்பிக்கிறேன். இது Government of India, Ministry of Home Affairs, National Disaster Management Division அனுப்பியிருக்கிற G.O. இதில் தெளிவாக para 4-ல் "the Ministry of Finance, Department of Expenditure are requested kindly to release the funds in favour of the respective States from National Calamity Contingency Fund immediately as per the details below" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையேதான் நான்காம் தேதி அன்றைக்கும் வாசித்துக் காண்பித்தேன். ஆகவே, இது மத்திய அரசாணைதான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. 31 ஆம் தேதியிட்ட இந்த அரசாணை தமிழக அரசுக்கு வந்தது. அதன்பிறகு கடந்த இரண்டாம் தேதி இந்த அவையில் பேசுகின்றபோது, இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். அப்போது மத்திய நிதி அமைச்சர் வங்கிகள் மூலமாகத்தான் மானியத்தொகை வழங்கப்படும் என்று சொன்னார். ஆனால், மத்திய அரசிடமிருந்து வந்த அரசாணையில் இது மாநில அரசு மூலமாகத்தான் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தேன். மீண்டும், மூன்றாம் தேதி இந்த அவையில் நான் பேசுகின்றபோது ஒரு அறிக்கையையே வாசித்தேன். நான் விடுத்த கோரிக்கையை பிரதமர் ஏற்றுக்கொண்டதால் இந்த அரசாணை



வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, மாநில அரசின் அதிகாரத்தை, பொறுப்பை நான் உறுதிப்படுத்தியிருக்கிறேன் என்று இங்கே கூறினேன். இது மத்திய நிதி அமைச்சருக்கு அவமானமாகப் போய்விட்டதோ என்னவோ? அவர் சொன்னதை மத்திய அரசாணையில் மாற்றப்பட்டு இருக்கிறதே என்று நினைத்தாரோ என்னவோ? ஆகவே, அதன்பிறகு அவர் சென்று பிரதமரை சந்தித்து இருக்கக்கூடும். என்னை இப்படி அவமானப்படுத்திவிட்டீர்களே என்று முறையிட்டு இருக்கக்கூடும். அதனால் அவர் பிரதமரை கட்டாயப்படுத்தி இப்படி ஒரு கடிதத்தை அனுப்புங்கள் என்று வலியுறுத்தி இருக்கக்கூடும். அதனால் *31-1-2005* என்று தேதியிட்டு அதன்பின்னர் இந்தக் கடிதம் அனுப்பியிருக்கக்கூடும். அப்போது Fax மூலம் அனுப்பி இருந்தால் இரகசியம் வெளிப்பட்டுவிடும் என்பதற்காகத்தான் அதை Fax மூலம் அனுப்பாமல் தபால் மூலம் அனுப்பியிருக்கிறார்கள். அதனால்தான் இப்படி ஒரு கடிதம் வந்ததே எனக்கும் தெரியாது. இந்த அரசுக்கும் தெரியாது. அதாவது இப்படி ஒரு கடிதம் அனுப்பப்பட்டது எங்களுக்குத் தெரியாது. ஆனால், மத்திய நிதி அமைச்சரும், திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள், நெருக்கமானவர்கள், நண்பர்கள். ஆகவே, அங்கிருந்து அவர் செய்தியைத் தெரிவித்திருக்கக்கூடும். நீங்கள் சட்டசபையில் இந்தப் பிரச்சினையை எழுப்புங்கள் என்று சொல்லியிருக்கக்கூடும். அதனால்தான் திரு. எஸ்.ஆர்.பி அவர்கள் நான்காம் தேதியன்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினையை எழுப்பி, பிரதமர் அனுப்பிய கடிதம் எங்கே எங்கே என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தார்.

*முற்பகல் 11-25*

நான் இதில் ஒளிவுமறைவு இல்லாமல் வெளிப்படையாகவே நடந்துகொண்டிருக்கிறேன். உண்மையாகவே பிரதமர் அனுப்பிய கடிதத்தைப் பற்றி எனக்குத் தெரியாது, இந்த அரசுக்கும் தெரியாது. 4 ஆம் தேதி மாலைதான் இந்தக் கடிதம் கிடைக்கப்பெற்றது. அந்தக் கடிதம் பார்த்தவுடன அதில் பிரதமர் மத்திய நிதி அமைச்சர் சொன்னதைப் போலத்தான் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவியில் மானியத் தொகையும் கடன் தொகையும் வங்கிகள் மூலமாகத்தான் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், பிரதமரின் கடிதத்தில் போடப்பட்டிருந்த தேதி *31-1-2005*. அதே தேதியில் *31-1-2005*-ல் மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் வெளியிட்டிருந்த அரசு ஆணையில் இப்போது நான் வாசித்துக் காண்பித்தேனே, அதே மத்திய அரசின் அரசு ஆணையில் இந்த மானியத் தொகை மாநில அரசு மூலமாகத்தான்

வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் மத்திய அரசு வழங்கிய அரசு ஆணையில் இந்த மானியத் தொகை மாநில அரசுக்குத்தான் - மாநில அரசு மூலமாகத்தான் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதே தேதியிட்ட பிரதமரின் கடிதம் 4 ஆம் தேதி எனக்கு வந்து சேருகிறது. 31 ஆம் தேதியிட்ட கடிதம் 4 ஆம் தேதி எனக்கு வந்து சேருகிறது. அந்தக் கடிதத்தில் எல்லாமே வங்கிகள் மூலமாகத்தான் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதனால்தான் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக நடந்ததைச் சொல்லி, உங்கள் கடிதம் இப்போதுதான் எனக்கு வந்து சேர்ந்திருக்கிறது என்பதைப் பிரதமருக்குக் குறிப்பிட்டு உடனடியாக பதில் கடிதம் அனுப்பி நீங்கள் 31-1-2005 அன்று வெளியிட்ட மத்திய அரசாணையில் உள்ளபடியே மாநில அரசு மூலமாகத்தான் இந்த மானியத்தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டு மீண்டும் கடிதம் அனுப்பி இருக்கிறேன். பதிலுக்காகக் காத்திருக்கிறேன். ஆகவே, இதில் எந்த ஒளிவுமறைவும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) இனிமேல் அதில் விவாதத்திற்கு இடமில்லை. குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. லா. சந்தானம். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இதில் விவாதத்திற்கு இடமில்லை.



## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல், திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறித்து மத்திய அரசு வெளியிட்ட ஆணை—தொடர்ச்சி

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. G.O.-வை வெளியிடுங்கள். G.O.-வை வெளியிடுங்கள்.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் G.O.-வை திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களிடம் கொடுத்தார்கள்.)

**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குரிய விளக்கம் சொல்லப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. Point of order. சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைப்படி நீக்கப்பெற்றது.

226629.
Chennai-600 008

[2005 பிப்ரவரி 7

**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சத்தம் போடக்கூடாது. அனுமதியில்லாமல் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்) அனுமதியில்லாமல் பேசக் கூடாது. திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரமே புரியாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு அனுப்பிய அரசாணையை இப்போது திரு. எஸ்.ஆர்.பி. அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். அவர் அதைத்தான் வாசித்துக்கொண்டிருக்கிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் வாசியுங்கள், சொல்லுங்கள். அதை வாசியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது அரசு ஆணையே அல்ல. பேச அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) 30 ஆம் தேதி முதலமைச்சர் எழுதிய கடிதத்திற்கு 31 ஆம் தேதி பிரதமர் கடிதம் எழுதியதாக இப்போது ஒப்புக்கொள்கிறார். காலம்கடந்து கிடைத்தது என்று சொல்லியிருக்கிறார். அதோடு நிறுத்தியிருந்தால் தப்பில்லை. உள்நோக்கம் கற்பிக்கிறார். பதில் எழுதவில்லை என்று. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தாங்கள் பேசியதை வைத்துத்தான் முதலமைச்சர் அவர்கள் அவ்வாறு சொல்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்தவற்றை இங்கே தெரிவித்தேன். அதற்கு உள்நோக்கம் கற்பிக்கிறேன் என்று குற்றம்சாட்டினால் என்ன அர்த்தம்? நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். முக்கியமான கடிதங்களை பிரதமர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2005 பிப்ரவரி 7] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அலுவலகம் அனுப்புகின்றபோது எந்த நாள், எந்தத் தேதி அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அன்றையதினமே உடனடியாக ஃபேக்ஸ் அனுப்புவார்கள். இந்த விஷயத்தில் 31 ஆம் தேதி இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது உண்மையானால், ஏன் உடனடியாக ஃபேக்ஸ் அனுப்பவில்லை?

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி., சொல்லிவிட்டார்கள், விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., அரசாணையை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திருமதி வளர்மதி ஜெபராஜ்.

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

## 3. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2005 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2005 பிப்ரவரி 7

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும், பதிலுரையும். மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசும்போது சொல்லட்டும். (குறுக்கீடுகள்) அவர்தான் பேசுகிறார், பேசும்போது சொல்லட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசுகிறார், பேசும்போது சொல்லட்டும்.

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து எழுந்து நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சியின் சார்பாக திரு. ஆற்காடு வீராசாமி அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறித்து மத்திய அரசு வெளியிட்ட ஆணை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, whatever Thiru S.R.B. may say, this is clearly a sanction order releasing the amount to the States. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எவ்வளவு மறுத்தாலும், மாநில அரசுகளுக்கு நிதி ஒதுக்குகின்ற மத்திய அரசாணைதான் இது. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மிக முக்கியமான ஒரு பிரச்சினை பற்றி சர்ச்சை நடந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சர்ச்சை இல்லை.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள்.



2005 பிப்ரவரி 7]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை விவரித்தார்கள். நாங்கள் இப்பொழுது தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம்—திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசினார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார் நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம்—உள் துறையிலேயிருந்து-அமைச்சகத்திலேயிருந்து ஓர் ஆணை வந்திருக்கிறது என்று முதலமைச்சர் தெரிவிக்கிறார். பிறகு, பிரதமரிடத்திலேயிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது என்று தெரிவிக்கிறார். ஆனால் தைரியமாக முதலமைச்சர் அவர்கள் அந்த ஆணையைக்கூட எடுத்துக் கொடுத்தார்கள். நான் கேட்பது, இது இரண்டு பேருடைய பிரச்சினை அல்ல. ஒன்று House-க்கு வந்துவிட்டால், இது House property. So, அந்த ஆணை என்ன என்பதையும் நாங்கள் பார்க்க வேண்டும். பிரதமருடைய கடிதத்தையும் இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். எனவே, இரண்டையும் இந்த மன்ற உறுப்பினர்களுக்கு தாங்கள் படித்துக்காட்ட வேண்டும். இல்லாவிட்டால், எங்களுக்கு அதைப் படிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். காரணம், என்ன எழுதியிருக்கிறது என்று தெரிய வேண்டும் அல்லவா? ஏனென்றால், நீங்கள் சொன்னீர்கள், பிரதமர் அவர்கள், Finance Minister-உடைய அந்த idea-வை அப்படியே follow பண்ணியிருக்கிறார் என்று சொல்கிறீர்கள். ஆனால், verbatim-ஆக என்ன இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது, இரண்டிலும். எனவே, இந்த அவையில், (குறுக்கீடு) நீங்கள் வாசித்தால் பரவாயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இரண்டுமே இருக்கிறது. அரசாணையும் என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் அவர்கள் எழுதிய கடிதமும் என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவைப்பட்டால் இரண்டு கடிதங்களையும் நான் உங்களுக்குத் தருகிறேன். அரசாணையும் தரப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. Government of India, Ministry of Home Affairs, National Disaster Management Division அரசாணை. Subject:- Tsunami of 26th December 2004—Rajiv Gandhi Rehabilitation Package for Tsunami affected areas—Central Assistance thereof.

அரசாணை, மத்திய அரசாணை. முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் சரியான விளக்கம். போதுமான விளக்கம். நிறைவான விளக்கம். இனிமேல் அதுபற்றி விவாதிப்பதற்கு எந்த இடமும் கிடையாது. உரிய விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்ட காரணத்தால், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் அதற்கு மேற்கொண்டு பேசியது

அவைக்குறிப்பிலே இடம் பெறாது. மாண்புமிகு அண்ணன், ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுங்கள். (மணியடிக்கப்பெற்றது) இனிமேல் அதில் விவாதிப்பதற்கு இடம் இல்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சியின் சார்பாக, திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. திரு. துரைமுருகன், நீங்கள் கேட்டதற்கான விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இரண்டையும் என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். பிரதமருடைய கடிதத்தையும் என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அரசாணையையும் கொடுத்திருக்கிறார்கள். தாங்கள் தேவைப்பட்டால் வந்து பாருங்கள். முழுமையையும் வாசித்தே காட்டலாம். (குறுக்கீடுகள்) தேவைப்பட்டால் பாருங்கள். இரண்டையும் பாருங்கள். திரு. ஆற்காடு வீராசாமி, பேச ஆரம்பியுங்கள். (குறுக்கீடுகள்) இரண்டையும் பாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தனர்)*

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. துரைமுருகன் வேண்டுமென்றால் மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அலுவலகத்திற்குச் சென்று அவற்றைப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து தாராளமாக வாசித்துக்கொள்ளலாம். என்னுடைய அலுவலகத்திற்கு வந்து தாராளமாக இரண்டையும் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை அமைச்சகத்திலிருந்து வெளியிடப்பட்ட இந்த அரசாணையில் "The undersigned is directed to say that the Government of India after taking into account the reports of the Central teams, the recommendations of the Inter Ministerial Group (IMG) and High Level Committee (HLC) have approved Central Assistance of Rs.2731.04 crores in respect of the Tsunami affected States of Andhra Pradesh, Kerala, Tamil Nadu and Union Territory of Pondicherry. The package of Central Assistance will be termed



"Rajiv Gandhi Rehabilitation Package for Tsunami affected areas" and is as follows:

அதன் பிறகு, Relief and Response என்ற தலைப்பின்கீழ், ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு ஒதுக்கீடு என்று தரப்பட்டிருக்கிறது. அதன் பின்னர், Fishing Sector என்ற தலைப்பின்கீழ், ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு ஒதுக்கீடு என்று தரப்பட்டிருக்கிறது. அதன் பின்னர், Housing Sector என்ற தலைப்பின்கீழ், ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு ஒதுக்கீடு என்று தரப்பட்டிருக்கிறது. அதன் பிறகு, para 2-ல் The financial assistance for Relief and Response and Fishing Sector will be provided out of the National Calamities Contingency Fund (NCCF) subject to the adjustment of Rs.450.00 crores released earlier as an immediate assistance.

Para 3. The Financial assistance for housing sector will be used for supporting the housing component of rehabilitation plans being prepared for the affected areas with the assistance of the core group established in the Planning Commission and in consultation with the relevant Ministries and State Governments. Further assistance in subsequent phases would be released for supporting these plans. The orders for releasing financial assistance for housing sector will be issued separately.

"The orders for releasing financial assistance for housing sector will be issued separately" என்றாலே these are orders for fishing sector என்றுதானே அர்த்தம்?

மேலும் Para 4. "The Ministry of Finance, Department of Expenditure are requested kindly to release the funds in favour of the respective States from NCCF immediately as per the details below". அதன் பிறகு தமிழ்நாட்டிற்கும் மற்ற மாநிலங்களுக்கும் என்ன ஒதுக்கீடு, எவ்வளவு ஒதுக்கீடு என்று குறிப்பிட்டு,

Para 5. The assistance in respect of Pondicherry will be provided by the UT Division of the Ministry of Home Affairs out of the budget of this Ministry.

Para 6. The Department of Drinking Water Supply are requested kindly to release the assistance as approved above (Relief and Response) out of their Accelerated Rural Water Supply Programme (ARWSP) to the respective State or Union Territory under intimation to this Ministry.

Para 7. The Department of Rural Development and the Department of Food and Public Distribution may kindly issue necessary allocation or release orders

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 பிப்ரவரி 7

for supply of foodgrains to the respective States as indicated above (Relief and Response) for relief employment under intimation to this Ministry.

Para 8. The Department of Agriculture and Co-operation are requested to release Rs.1.6 crores to Government of Kerala for Coconut seedling under intimation to this Ministry.

Para 9. The package of technical and financial incentives for agricultural land affected due to sea water will be finalized separately by the Ministry of Agriculture.

Para 10. The detailed instructions in regard to the Rajiv Gandhi Rehabilitation Package for Tsunami affected areas are being conveyed to the States / Union Territory of Pondicherry separately with details of the package and instructions thereof.

இதில் பல்வேறு அரசுத் துறைகளுக்கு, அமைச்சகங்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இது அரசாணை இல்லை என்றால் வேறு என்ன இது? (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது மட்டுமல்ல. ஆந்திராவிற்கு, கேரளாவிற்கு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, இது அரசாணைதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் போதுமானது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** சொல்கிறேன், சொல்கிறேன். சத்தம் போடுவதை நிறுத்தினால் நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால், Government of India does not issue Government Orders in the form adopted by the State Governments. It adopts only the format of proceedings as in the Ministry of Home Affairs order. Thus it is clear that it sanctions amount to States. அதாவது, மாநில அரசுகளில் G.O. என்று போடுவது போல், மத்திய அரசில் போடும் வழக்கம் கிடையாது. ஆகவே இப்பொழுது உள்ள ஆணையில் நான் எப்படி வாசித்தேனோ அதுபோலத்தான் இருக்கும். மத்திய அரசாணை இருக்கும். இதனுடைய தலைப்பு F.No.32-1/2005-NDA-1, GOVERNMENT OF INDIA, MINISTRY OF HOME AFFAIRS, National Disaster Management Division, North Block, New Delhi. 31st January 2005. Sub: Tsunami of 26th December 2004 - Rajiv Gandhi Rehabilitation Package for Tsunami affected areas - Central Assistance thereof.



2005 பிப்ரவரி 7] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதுதான் மத்திய அரசாணை. அதனுடைய format இப்படித்தான். (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, விடுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் பேசிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31 ஆம் தேதி பாரதப் பிரதமர் தமிழகத்தினுடைய முதலமைச்சருக்கு அந்தக் கடிதத்தை எழுதிய தகவல், முதலமைச்சருக்குத்தான் கிடைத்திருக்க வேண்டும். Official Secret Act பிரகாரம் பிறருக்கு அது சென்று சேர முடியாது. ஆனால், மாண்புமிகு திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் கைக்கு பிரதம அமைச்சர் முதலமைச்சருக்கு எழுதிய அந்தக் கடிதம், கடிதத்தினுடைய தகவல் கிடைத்தது, Official Secret Act-ஐ மீறிய குற்றத்தைப் புரிந்திருக்கிறார். இவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க, சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Privilege issue கொண்டு வாருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது படித்தது (குறுக்கீடு) உள் துறை அமைச்சகத்திலிருந்து இந்த அரசுக்கு அனுப்பப்பட்ட ஒரு instruction. அதாவது, தகவல். ஏனென்றால், ஆணை- (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இது அரசாணை. நானே பார்த்தேன். ஆந்திரப் பிரதேசத்திற்கு, தமிழ்நாட்டுக்கு, கேரளாவிற்கு, பாண்டிச்சேரிக்கு அனைத்துக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு அனுப்பப்பட்ட instruction அல்ல. மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்திலிருந்து பல்வேறு மத்திய அமைச்சகங்களுக்கு அனுப்பப்பட்ட instruction, அரசாணை. அதனுடைய நகல்தான் இங்கே வரப்பெற்றிருக்கிறது.

[2005 பிப்ரவரி 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பிரச்சினை முடிந்தது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதிலே போதுமான விளக்கம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். பிரச்சினை முடிந்தது. தயவுசெய்து அவை நடவடிக்கைகளுக்கு இனிமேல் குந்தகம் விளைவிக்க வேண்டாம். (குறுக்கீடுகள்) அதாவது, தாங்கள் எந்த நேரத்திலும் என்னுடைய அலுவலகத்திலே வந்து பாருங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய அலுவலகத்திலே வந்து பாருங்கள் (குறுக்கீடு) திரு. துரைமுருகன், அவையினுடைய நேரத்தை வீணடிக்க வேண்டாம். இந்த G.O.-வையும், மாண்புமிகு பிரதமர் அவர்கள் எழுதிய கடிதத்தையும் என்னுடைய அறையில் வந்து எப்போது வேண்டுமானாலும் பாருங்கள். (குறுக்கீடுகள்) அதிலே பிரச்சினை இல்லை. அவை நடவடிக்கையில் . . . இந்தப் பிரச்சினையை இத்தோடு முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) திரு. ஆற்காடு வீராசாமியைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை முடிந்தது. இனிமேல் இதிலே எந்த விவாதத்திற்கும் இடம் இல்லை. முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடு) தங்களைப் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் எந்தத் தவறும் இல்லை, எந்தக் குழப்பமும் இல்லை. இப்பொழுது நான் வாசித்தது மத்திய அரசிடமிருந்து வரப்பெற்றது, மத்திய அரசாணைதான். மாநில அரசுகளின் வழக்கங்கள் வேறு, வழிமுறைகள் வேறு, மத்திய அரசின் வழிமுறைகள் வேறு. இங்கே மாநிலத்தில், அரசின் தலைமைச் செயலாளரை Chief Secretary என்று அழைக்கிறோம். மத்தியிலே தலைமைச் செயலாளரை Cabinet Secretary என்று அழைக்கிறார்கள். இங்கே செயல்படுகின்ற முறை வேறு. அங்கே செயல்படுகின்ற முறை வேறு. மத்திய அரசின் அரசாணை என்றால், அது இந்த format-ல்தான் இருக்கும். (குறுக்கீடுகள்)



2005 பிப்ரவரி 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை இதோடு முடிந்தது. இனிமேல் பேசுவதற்கு இடம் இல்லை. இந்தப் பிரச்சினையிலே பேசுவதற்கு இடம் இல்லை. இந்தப் பிரச்சினையிலே பேசுவதற்கான வாய்ப்பு இல்லை. திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடு) இனிமேல் இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை, (குறுக்கீடு) பிரச்சினை முடிந்தது. திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். வேறு ஏதாவது கருத்து இருந்தால் அதை ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுவார்கள், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக விளக்கம் தந்துவிட்டார். உங்களுக்கு அதில் ஏதேனும் இன்னும் தெளிவு தேவையென்றால் மைய அரசிடம் தொடர்பு கொண்டு நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். பேரவைத் தலைவருடைய அலுவலகத்திற்குச் செல்லுங்கள். சந்தேகம் இருக்குமென்றால் மைய அரசோடு தொடர்பு கொண்டு விளக்கம் பெறுங்கள். (குறுக்கீடு) Doubt பண்ணவில்லை என்றால் பின்னர் எதற்குப் பிரச்சினை?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் இந்தப் பிரச்சினைக்கு இடமில்லை. (குறுக்கீடு) திரு. துரைமுருகன், இனிமேல் இந்தப் பிரச்சினைக்கு இடமில்லை. (குறுக்கீடு) வேறு ஏதாவது பார்க்க வேண்டுமென்றால் என்னுடைய அலுவலகத்திலே வந்து பாருங்கள். மீண்டும், மீண்டும் இந்தப் பிரச்சினையைப் பேசுவதற்கு இடமளிக்க மாட்டேன். தயவுசெய்து உட்காருங்கள், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சியின் சார்பாக திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், இப்போது பேசுவார்கள். (குறுக்கீடுகள்) இனிமேல் இந்தப் பிரச்சினைக்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) இனிமேல் இந்தப் பிரச்சினைக்கு இடமில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டிருக்கிறார். மத்திய அரசின் உள் துறை அமைச்சகம் ஒரு அரசாணையை அனுப்பியிருக்கிறது, பிரதமர் ஒரு கடிதத்தை அனுப்பி இருக்கிறார். இதில் மாநில அரசு எதை எடுத்துக்கொள்ளப் போகிறது என்று கேட்கிறார். அதைத்தான் நான்

பிரதமருக்கே மறுபடியும் கடிதம் எழுதி கேட்டிருக்கிறேன். நீங்கள் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறீர்கள், மத்திய அரசின் உள் துறை அமைச்சகம் வேறுவிதமான அரசாணை அனுப்பியிருக்கிறது, இதில் எதை எடுத்துக்கொள்வது? ஆகவே, மத்திய அரசின் அரசாணையில் என்ன உள்ளதோ அதன்படியே நீங்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டு பிரதமருக்கு நான்காம் தேதியே கடிதம் அனுப்பியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் இதுபற்றிய விளக்கத்தை முழுமையாகச் சொல்லிவிட்டார்கள். தயவுசெய்து உட்காருங்கள். திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடு) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடு) ஒலிபெருக்கியை அங்கே கொடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விளக்கம் கூற வாய்ப்பளிக்காததைக் கண்டித்து காங்கிரஸ் கட்சி வெளிநடப்புச் செய்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுக்கு ஒலிபெருக்கி இணைப்பினைக் கொடுங்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள்.

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒருசில கருத்துகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

2000 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் சென்னை பொது மருத்துவமனையில் ஒரு மாடி இடிந்து, அந்தச் செய்தியை

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கேள்விப்பட்டவுடனே அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் என்னையும், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த துரைமுருகன் அவர்களையும் கூப்பிட்டு, உடனடியாக மருத்துவமனைக்குப் போங்கள், நோயாளிகள் கதி என்னவாயிற்று என்று தெரியவில்லை, உடனடியாக அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று கூறியபோது, உடனடியாக அங்கே போனோம். பாதிக்கப்பட்ட நோயாளிகளையெல்லாம் வேறு இடத்திற்கு மாற்றிய பிறகு, இடிந்துபோன அந்தக் கட்டடங்களைப் புதுப்பிப்பதற்காக முதலமைச்சரிடத்திலே சொல்லி, ரூ.104 கோடி செலவாகும், அந்தக் கட்டடங்கள் 150 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டடங்கள்; எனவே, அதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்டபோது, நிதித் துறைச் செயலாளரும் மற்றவர்களும் அதற்கு இசைவு தந்து அந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதை இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விரைவிலே திறக்க இருக்கிறார்கள். அதிலேயும் 1,650 படுக்கைகள் கொண்ட அந்த மருத்துவமனைக் கட்டடங்களைத் திறக்க இருப்பதாக ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய திட்டமாயிற்றே என்று அதை கைவிட்டுவிடாமல், தொடர்ந்து கட்டியதற்காக உள்ளபடியே என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோது, மாவட்ட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை, நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் தப்பாகவேச் சொல்லவில்லை. (குறுக்கீடு) என்னைச் சொல்ல விடுங்கள் நீங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது ஏதாவது தவறாகக் குறிப்பிட்டால் அமைச்சர்கள் விளக்கம் சொல்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. இந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது, திறப்பு விழா நடக்கப் போகிறது, என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றுதான் சொன்னேனே தவிர, வேறொன்றும் இல்லை.

*முற்பகல் 11-50*

அதைப்போலவே, நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோது கலைஞர் அவர்கள் ஓர் ஆணையைப் பிறப்பித்தார்கள். மாவட்டத் தலைநகரங்களிலே உள்ள எல்லா மருத்துவமனைகளுக்கும் C.T.Scan வாங்கிக் கொடுக்கப்பட வேண்டும்; சென்னை, மதுரையிலே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு M.R.I.Scan வாங்கித் தரவேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். அதை வாங்கித் தருவதற்கான நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டபோது, இப்படி ஒரு சில இடங்களிலே மட்டும் வாங்கிக் கொடுத்தால் போதாது, பல இடங்களிலே, தாலுகா மருத்துவமனைகளையும் மேம்படுத்த வேண்டியிருக்கிறது, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளையும் மேம்படுத்த வேண்டியிருக்கிறது; எனவே, உலக வங்கியிடம் நாம் கடன் கேட்கலாம் என்று சொல்லி 1,000 கோடி ரூபாய் கடன் கேட்டோம். உடனே மத்திய அரசாங்கம் இந்தக் கடன் தொகையைக் குறைத்து proposal அனுப்புங்கள் என்று சொன்னார்கள். 900 கோடி ரூபாய்க்கு அனுப்பினோம். அதுவும் இப்பொழுது உலக வங்கியாலே ஏற்றுக்கொள்ளப்பட்டு 600 கோடி ரூபாய்க்கு அனுமதி தந்திருக்கிறது என்ற செய்தியைப் படிக்கின்ற நேரத்தில் எங்கள் கனவு நிறைவேறியிருக்கிறது என்ற அந்த மகிழ்ச்சி எங்களுக்கு ஏற்படுகிறது. அதைப் போலவே .. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஏதோ விளக்கம் சொல்ல வருகிறார்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது நான் கண்டிப்பாக ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும். 1995-லே மாண்புமிகு எங்களுடைய முதலமைச்சர், அன்றையதினம் முதலமைச்சராக இருக்கும்பொழுது, சீர்பட வேண்டுமென்ற முறையிலே இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஐந்தாண்டு காலம் இருந்தீர்கள். அந்தத் திட்டத்தினுடைய நிலை என்ன என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். மீண்டும் இந்தத் திட்டத்தை உலக வங்கியிடமிருந்து நிதியைப் பெறுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீரிய முறையிலே இதற்கு ஆய்வு நடத்தி, 2001-ல் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, மீண்டும் டெல்லியிலே சென்று, உலக வங்கியிடமிருந்து நிதியைப்



பெற்றிருக்கிறோம். இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏதோ தி.மு.க. ஆட்சியிலே அதற்காக முயற்சியே நடக்காததைப்போல மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிடுகிறார்கள். ஆனால், கோப்புகளைப் பார்த்தால் நன்றாகத் தெரியும். முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அந்தக் காலத்திலே நம்முடைய மத்திய அரசுக்கு நாங்கள் எழுதிய கடிதங்களை எல்லாம் வாங்கிப் படித்தால் தெரியும். யார் ஆரம்பித்தாலும், தமிழகத்திலே உள்ள மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும். அதை நாங்கள் தொடர்ந்து செய்தோம். இப்போது நீங்கள் அதைத் தொடர்ந்து நிறைவேற்றியிருக்கிறீர்கள் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

அதைப்போல, இங்கே சுனாமி பேரலையால் ஏற்பட்ட பாதிப்புகளைப்பற்றி மூன்று தினங்களாக மிக விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். அதிலே நான் ஏற்கெனவே என்னுடைய கருத்தைக் குறிப்பிட்டு விட்டேன். சுனாமியைப் பொறுத்தவரையில் தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் மிகத் தெளிவாக, இதிலே அரசியலே கூடாது, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளும் கிடைக்க அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று தெரிவித்து, அனைத்துக் கட்சியினர் கூட்டத்திலேயும் நான் அந்தக் கருத்தைச் சொல்லி, ஏற்கெனவே இங்கேயும் நான் அந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கின்றேன். ஆனால், எனக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம், சுனாமி பாதித்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அந்த மக்களைப் போய் பார்ப்பதற்குப் பதிலாக, பயந்துகொண்டு மருத்துவமனையிலே போய்ப் படுத்துவிட்டாரே என்று ஓர் உறுப்பினர் பேசினார். எங்கள் தலைவர் கலைஞரைப்பற்றி நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். எதற்கும் பயப்படாதவர். எதைப்பற்றியும் கவலைப்படாதவர். அறிவாற்றல் மிக்கவர். இன்னும் சொல்லப்போனால் (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிரிப்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. எப்படி உங்களுடைய தலைவருக்கு இருக்கக்கூடிய ஆற்றலை நீங்கள் ...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தலைவருடைய தைரியத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். கைது செய்தபோது எந்த

அளவுக்கு அவர் 'ஓவென்று' கதறினார் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். (கூச்சல்-குழப்பம்) (மணியடிக்கப்பெற்றது)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையைவிட்டு எழுந்து வந்து கூச்சலிட்டனர்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார். (கூச்சல்-குழப்பம்) உறுப்பினர்களே இருக்கைக்குப் போங்கள். தயவுசெய்து உறுப்பினர்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகிறார். (கூச்சல்-குழப்பம்) துணைத் தலைவர் பேசுகிறார். தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்) எல்லா உறுப்பினர்களும் இருக்கைக்குச் செல்லுங்கள். திரு. பரணிகுமார். (கூச்சல்-குழப்பம்) எல்லா உறுப்பினர்களும் இருக்கைக்குச் செல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்) திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம். திரு. துரைமுருகன் பேசுகிறார், அவர் விளக்கம் கேட்கிறார். விளக்கம் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இருக்கைக்குப் போங்கள். (கூச்சல்-குழப்பம்) தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள். திரு. துரைமுருகன், பேசுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையை விட்டு எழுந்து வந்து நின்று பேசிக்கொண்டிருந்தனர்)

முற்பகல் 11-55

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞரைக் கைது செய்தபோது.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கையை விட்டு எழுந்து வருவது முறையல்ல.

**திரு. துரைமுருகன்:** அவர் கதறினார் என்று ஒரு அமைச்சர் சொல்லுகிறார். * * (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், மாண்புமிகு அமைச்சரவர்கள் தவறாக எதையும் சொல்லவில்லை. அதற்கு ஆற்காடு வீராசாமி பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார். அவர் பேசிக்கொண்டிருக்கிறார். திரு. பரணிகுமார் பேசியது, மற்ற உறுப்பினர்கள் பேசியது, தலைவர் அனுமதியில்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியிலே அது தெளிவாக வந்திருக்கிறது. ஐயோ கொல்றாங்களே, ஐயோ கொல்றாங்களே என்று. (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்து வந்து பேசிக்கொண்டே இருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்) தயவுசெய்து இருக்கையிலே சென்று கேளுங்கள். திரு. துரைமுருகன் அவருக்குச் சொல்ல வேண்டிய கருத்தை, பதிலை சொல்லியிருக்கிறார். தயவுசெய்து நீங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். திரு. பொன்முடி, (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள். இருக்கையிலே சென்று பேசுங்கள். தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து இருக்கையிலே சென்று பேசுங்கள். தயவுசெய்து உட்காருங்கள். திரு. துரைமுருகன், உங்களுடைய தி.மு.க. உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உங்களுடைய உறுப்பினர்களை இருக்கைகளுக்குச் செல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) (கூச்சல்-குழப்பம்) தயவுசெய்து உங்களுடைய உறுப்பினர்களை இருக்கைகளுக்குச் செல்லச் சொல்லுங்கள். அதுவரைக்கும் நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது.

**திரு. துரைமுருகன்:** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுகின்ற வரைக்கும் தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் யாரும் அவர்களுடைய இருக்கைகளிலிருந்து வரவில்லை. தாங்கள் அத்தனை பேரும் இருக்கைகளிலிருந்து எழுந்து மொத்தமாக வந்திருக்கிறீர்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் இருக்கைகளுக்குச் செல்லுகின்ற வரைக்கும் நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே நிச்சயமாக ஏறாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(குறுக்கீடுகள்) இருக்கைகளுக்குச் செல்லுகின்ற வரைக்கும் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. திரு. துரைமுருகன், உங்களுடைய உறுப்பினர்களை தயவுசெய்து இருக்கைகளுக்குச் செல்ல வைத்ததற்குப் பிறகுதான் நீங்கள் பேசுவதற்கு அனுமதி கிடைக்கும். தயவுசெய்து தி.மு.க. உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுங்கள். அதற்குப் பிறகு திரு. துரைமுருகன் பேசுவதற்கு நான் அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் திருப்பி இந்தப் பிரச்சினையை வளர்க்க விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட்டால் இந்த மன்றத்திற்குக் கண்ணியம். ஆகையினாலே தாங்கள் அருள்கூர்ந்து அதற்கு ஆணையிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்திலே சில நேரங்களிலே சூடாகவும் கருத்துகள் பரிமாறப்படலாம். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. உறுப்பினர்கள் அவரவர் இருக்கைக்குச் சென்று பேசுமாறு தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சி நடந்தபோது, தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது இதே சட்டமன்றத்தில் இன்றைய முதலமைச்சர் அவர்களைப் பற்றி எந்தெந்த வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை தயவுசெய்து அருள்கூர்ந்து நீங்கள் படித்துப் பார்க்க வேண்டும். அந்த அளவுக்கு கண்ணியக் குறைவாக இப்பொழுது எந்த வார்த்தையும் பேசப்படவில்லை. கண்ணியக் குறைவாக எந்த வார்த்தையும் பேசப்படவில்லை. அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதற்கு ஆற்காடு வீராசாமி அவர்கள் பதில் சொல்வார்கள். தயவுசெய்து நீங்கள் இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஆற்காடு வீராசாமி பேசிக்கொண்டிருக்கிறார், அவர் பதில் சொல்வார். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்)



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கட்சித் தலைவர் மீதும் அந்தந்த உறுப்பினர்களுக்கும், அந்தக் கட்சி தொண்டர்களுக்கும் அளவற்ற மரியாதை இருக்கிறது. மாண்புமிகு ஆற்காட்டார் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே யாரையும் புண்படுத்துகின்ற மாதிரி பேசவில்லை. அதற்காக அமைச்சர் ஒரு கட்சித் தலைவரை கொச்சைப்படுத்துவது என்பது ஏற்புடையதாக இல்லை. தயவுசெய்து அமைச்சர் சொன்னதை கட்டாயம் நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு ஆற்காடு வீராசாமி பதில் சொல்வார்.

**திரு. ஜி.கே. மணி:** அமைச்சர் சொன்னதை கட்டாயம் நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, திரு. ஆற்காடு வீராசாமி அதற்குப் பதில் சொல்வார். பேசிக்கொண்டிருப்பது தி.மு.க. உறுப்பினர். அமைச்சர் சொன்னதற்கு திரு. ஆற்காடு வீராசாமி பதில் சொல்வார். தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களைக் கேட்பது இதுதான். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொன்னார், அதற்கு ஆற்காடு வீராசாமி பதில் சொல்வார்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், திரு. சுந்தரம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சுந்தரம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் எங்களுடைய முதலமைச்சரைப்பற்றி அன்றைக்கு மிகக் கேவலமாக, நம் முதலமைச்சர் அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் சிறையிலே செல்வார்கள், அவர்கள் நிறைய தவறு செய்திருக்கிறார்கள் என்று இந்த அவையிலே, இதே அவையிலே பேசியிருக்கிறார்கள். தேவையில்லாமல் நம்முடைய முதலமைச்சரைப்பற்றி ஆதாரம் இல்லாமல்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆற்காடு வீராசாமி, அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடு) (கூச்சல்-குழப்பம்) இதுபற்றிய பிரச்சினை முடிந்தது. திரு. ஆற்காடு வீராசாமி, அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடத்தில் நான் ஒரு தீர்ப்பை எதிர்பார்க்கிறேன். எங்கள் தலைவரைப் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டும் என்று எங்களது கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்துகிறேன். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுந்தரம் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்கிறார்கள். திரு. சுந்தரம், சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே அன்றைக்கு எங்களது முதல்வரைப்பற்றி அளவுக்கதிகமாக சொத்து சேர்த்திருக்கிறார்கள், அவர்களை சிறையிலே அடைப்போம், அவர்கள் கம்பி எண்ணுவார்கள், தேர்தலிலே நிற்க முடியாது என்று ஆதாரமில்லாமல் இந்த அவையிலே பல முறை குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அவையெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கின்றன. அன்றைக்கு அவை அனைத்துமே அவைக் குறிப்பிலே இருக்கின்றன. மேலும், இதே ஆற்காடு வீராசாமி அவர்கள் முன்னாள் தலைமைச் செயலாளர் அவர்களை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரவிலே ஆளை வைத்து அடித்துவிட்டு பகலிலே பார்க்கச் சென்றதாக இந்த அவையிலே இதே வீராசாமி அபாண்டமாகக் கூறியிருக்கிறார்கள். அதை நான்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதற்கு திரு. சுந்தரம் சொன்ன விளக்கம் சரியாகப் போய்விட்டது. திரு. ஆற்காடு வீராசாமி, பேசுங்கள். (கூச்சல்-குழப்பம்) இல்லை, இல்லை. திரு. துரைமுருகன் பேசியதற்கு திரு. சுந்தரம் அவர்கள் உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) தாங்கள் கேட்டதற்கு உரிய விளக்கத்தை திரு. சுந்தரம் அவர்கள் சொல்லிவிட்டார்கள். மேற்கொண்டு பேசுங்கள்.



மேற்கொண்டு பேசுங்கள். பேசுங்கள், திரு. ஆற்காடு வீராசாமி பேசுங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன் உட்காருங்கள், திரு. ஜி.கே. மணி உட்காருங்கள். (குறுக்கீடு) தி.மு.க. உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) தி.மு.க. உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ** என்று சொல்லவில்லை. அப்படி அவர் சொல்லவில்லை. (குறுக்கீடு)அவர் அப்படிச் சொல்லவில்லை. மாண்புமிகு ஆற்காட்டார் அவர்கள் பேசுகிறபோது அவர் அச்சப்படமாட்டார் என்று சொன்னார். ஆனால், டி.வி. நிகழ்ச்சியில் அவர் அச்சம் வெளிப்பட்டது என்பதைத்தான் கோடிட்டுக் காட்டினார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. துரைமுருகன் அவர்கள் ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. துரைமுருகன் அவர்கள் ** என்று குறிப்பிட்டுப் பேசியதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் பேசியதற்கு திரு. சுந்தரம் விளக்கம் சொல்லிவிட்டார். நீங்கள் மேற்கொண்டு பேசலாம். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். அவரைப் பேச விடுங்கள். அவர் பதில் சொல்வார். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பதில் சொல்வார். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் இழித்தும் பழித்தும் பேசவில்லை. அவருடைய தலைவரைப்பற்றி, அவர் தைரியத்தைச் சொன்னார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், திரு. துரைமுருகன், உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். ஒரு அமைச்சர் பேசினால் அதற்கு அவர் பதில் சொல்வார். (குறுக்கீடு) பதில் அவர் சொல்வார். தயவுசெய்து உட்காருங்கள், தயவுசெய்து உட்காருங்கள், நீங்கள் இருக்கையில் சென்று அமருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. புகழேந்தி அமருங்கள். (குறுக்கீடு) திரு. புகழேந்தி அமருங்கள். உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நான் பழித்துப் பேசவில்லை (மணியடிக்கப்பெற்றது) அவர் தைரியத்தைப் பற்றிப் பேசினார். தைரியம் எப்படிப்பட்டது என்று நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டாம். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கருத்துச் சொல்லியிருந்தால் அதற்கு உரிய பதிலை உங்களுடைய உறுப்பினர் பேசுகின்றபோது சொல்வார். (குறுக்கீடுகள்) அவர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சத்தம் இந்தப் பக்கத்திலேயிருந்தும் வரும் என்பதை மறந்துவிடாதீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்கள் அவருடைய தலைவரைப் பற்றிக் குறிப்பிடும்போது எங்கள் தலைவர் தைரியம் உள்ளவர் என்று குறிப்பிட்டார். அதற்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்கள் தலைவர் தைரியத்தைப் பற்றி எங்களுக்குத் தெரியும் என்று சொன்னார். இப்போது இருப்பதெல்லாம் உங்கள் தலைவருக்கு தைரியம் இருக்கிறதா, இல்லையா என்பதை நீங்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீராசாமி அவர்களே, பேசுங்கள். விளக்கம் சொல்லுங்கள். நீங்கள் பேசுகின்றபோது விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வீராசாமி அவர்களே தாங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு. (குறுக்கீடு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தவறாக எதுவும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது தி.மு.க. தலைவர்



அவர்களின் தைரியத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மிகவும் தைரியமானவர் என்றார்கள். அதற்குத்தான் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அவர் கைதாகும்போது அவர் தைரியத்தை தொலைக்காட்சியில் எல்லோரும் பார்த்தோமே என்றார். இதில் தரக்குறைவாக ஒன்றும் இல்லை. ஆனால் மாறாக, தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது, நான் வெளியிலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது இந்த அவையின் உறுப்பினராகக்கூட இல்லாதபோது என்னைப் பற்றி என்னவெல்லாமோ தரக்குறைவாக இந்த அவையில் பேசப்பட்டிருக்கிறது. அவைக் குறிப்புகளில் பதிவாகி இருக்கிறது. அப்போது ராஜீவ் காந்தி கொலை வழக்கில்கூட எனக்குத் தொடர்பு உள்ளது என்று அன்றைய முதலமைச்சர் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி பேசியிருக்கிறார். ராஜீவ் காந்தியின் கொலையாளிகளை என் அருகில் வைத்துக் கொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டேன் என்றெல்லாம் பேசி இருக்கிறார். இது ராஜீவ் காந்தி கொலை வழக்கிலேயே ஒரு திருப்புமுனையாக அமைகிறது என்றெல்லாம் பேசி இருக்கிறார். இன்னும் அன்றைய முதலமைச்சரும், அன்றைய சட்ட அமைச்சரும் பலமுறை இந்த அவையில் பேசுகின்றபோது வழக்குகளில் இந்த அம்மையார் ஜெயிலுக்குப் போவார், என் பெயரையே குறிப்பிட்டு ஆயுட்காலம் முழுவதும் சிறையிலேயே இருப்பார் என்றெல்லாம் பேசி இருக்கிறார். அப்படி எல்லாம் இப்போது இந்தத் தரப்பிலிருந்து யாரும் பேசவில்லை. தரக்குறைவாக எதுவும் பேசவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்ல வேண்டும் என்றால், 1989 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது, திரு. துரைமுருகன் அமைச்சராக இருந்தபோது, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது என்னை அவமானப்படுத்தி, அடித்து, துன்புறுத்தி இதே துரைமுருகன் என் சேலையைப் பிடித்து இழுத்தாரே அப்படி எந்தச் சம்பவமும் இப்போது இந்த அவையிலே நடைபெறவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், தயவுசெய்து அமருங்கள். திரு. ஆற்காடு வீராசாமியை பேச அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். ஆற்காடு வீராசாமியை பேச அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) விவகாரத்தை நீங்கள்தான் வளர்க்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்கு திரு. ஆற்காடு வீராசாமி பதில் சொல்லியிருப்பார். நீங்கள் எதற்கு விவகாரத்தை வளர்க்கிறீர்கள்? (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஆற்காடு வீராசாமியைத்

தவிர வேறு யாரையும் நான் பேச இப்போது அனுமதிக்கப் போவதில்லை. திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமியைத் தவிர வேறு யாரையும் நான் பேச அனுமதிக்கப் போவதில்லை. (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) திரு. வீராசாமி, இதற்கு உரிய விளக்கத்தை சட்ட அமைச்சர் அவர்கள் உரிய வகையிலே சொன்னார். அதற்குரிய விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இதற்கு மேல் இதில் விவாதத்திற்கு இடம் கிடையாது. (குறுக்கீடு) மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) இப்போது திரு. ஆற்காடு வீராசாமி அவர்களைத் தவிர வேறு யாரையும் நான் பேச அனுமதிக்கப் போவதில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ சாமர்த்தியமாக திசை திருப்புவதாக திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே கூறிக் கொண்டிருக்கிறார். நான் சாமர்த்தியமாக எதையும் திசை திருப்பவில்லை. பிரச்சினையே திரு. ஆற்காடு வீராசாமி அவர்களால்தான் வந்தது. அவர் என்ன சொன்னார், முதலமைச்சராக இருந்தபோது நடந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு தி.மு.க. தலைவர் கருணாநிதி மிகவும் தைரியம் உள்ளவர் என்று குறிப்பிட்டார். அதற்கு எங்கள் சட்ட அமைச்சர், அவரைக் கைது செய்தபோது "கொல்றாங்கப்பா, கொல்றாங்கப்பா" என்று சத்தம் போட்டார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதே அவருடைய தைரியத்தை நாங்கள் தெரிந்துகொண்டோம் என்றார். இதில் ஒன்றும் தவறில்லை. நடந்ததைக் கூறியிருக்கிறார். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) உங்களைவிட மூத்த உறுப்பினர், அவர் பேசட்டும். அவரைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) அவர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். உங்களைவிட மூத்த உறுப்பினர், அவர் விளக்கம் சொல்லட்டும், பேசட்டும். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் உரிய பதிலைச் சொல்லி பேசட்டும். (குறுக்கீடுகள்) உரிய விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடுகள்)



•**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியின்போது இதே சட்டமன்றத்தில் நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை கண்ணியக் குறைவாக பேசுகிறபோது இதே அவையில் நான் அதைத் தட்டிக் கேட்டதற்கு, இந்த தி.மு.க. கட்சிக்காரர்கள் அந்த நேரத்திலே என்னை இதே அவையில் கொலை செய்ய முயற்சி செய்தார்கள். தி.மு.க. கட்சி கொலைகாரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். (குறுக்கீடுகள்) இதே சட்டமன்றத்தில் என்னை அடித்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பினீர்களே சண்டாளர்களா, பாவிகளா, நீங்கள் எல்லாம் விளங்குவீர்களா? (குறுக்கீடுகள்) இந்தமாதிரி கொலைகாரக் கட்சிகள் எல்லாம் இருந்தால் விளங்குமா? (குறுக்கீடுகள்) இந்த நிலைமையை தமிழ்நாட்டு மக்கள் நன்கு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தாழ்த்தப்பட்ட எம்.எல்.ஏ. என்பதால் அன்றைக்கு தி.மு.க. ஆட்சியில் என்னை இதே சட்டமன்றத்தில் அடித்து கொலை செய்ய முயற்சி செய்தீர்கள். அன்றைக்கு யாரும் கேட்பாரற்று, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் மருத்துவமனையிலே என்னைச் சேர்த்து, என்னை ஆளாக்கி இந்தச் சட்டமன்றத்திற்கு மீண்டும் கொண்டு வந்திருக்கிறார்கள். தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள் கொலைகாரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை இப்போது மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசட்டும். தொடர்ந்து பேசட்டும். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் தொடர்ந்து பேசட்டும். (குறுக்கீடுகள்) தி.மு.க. உறுப்பினர்கள் இருக்கைகளுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்களைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினை இத்தோடு முடிந்தது. முதலமைச்சர் உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார். அப்போது அவையில் இருந்த திரு. சுந்தரம், திரு. கருப்பசாமி சொல்ல வேண்டிய விளக்கங்களைச் சொல்லிவிட்டார்கள். இப்போது ஆற்காடு வீராசாமி அவர்கள் தொடர்ந்து அடுத்த பிரச்சினைக்குப் போங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டாம். (குறுக்கீடுகள்) தயவுசெய்து, மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள்.

(குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். (குறுக்கீடுகள்) திரு. வேலு, இது உங்கள் இடமில்லை. உங்களுடைய இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் அவரவர்களுடைய இடங்களுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். உட்காருங்கள், திரு. துரைமுருகன். (குறுக்கீடுகள்) 12-15 ஆகிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை வேறு இன்றைக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை வேறு இருக்கிறது. தயவுசெய்து இருக்கைகளுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) தொடர்ந்து ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுவார்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி உங்கள் தி.மு.க.வின் சார்பாகத்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) தி.மு.க.வின் சார்பாகத்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) மூத்த உறுப்பினர், அவர்தான் பேசுகிறார். அவரைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி அவர்களைத் தவிர வேறு யாரையும் பேச நான் அனுமதிக்கப் போவதில்லை. அவர் தொடர்ந்து பேசுவார். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடுகள்) அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுங்கள். நான் திரு. துரைமுருகனைப் பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் அவரவர்களுடைய இருக்கைகளுக்குச் செல்லுங்கள். திரு. துரைமுருகன் (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், முதலில் எல்லோரையும் அவரவர்களுடைய இருக்கைகளுக்குப் போகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) காது கேட்கவில்லையா? (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரையும், உங்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அவரவர்களுடைய இருக்கைகளுக்குப் போகச் சொல்லுங்கள். அவரவர்களுடைய இருக்கைகளிலே இருக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இருக்கைகளுக்குச் செல்லுங்கள். இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டியது தவிர வேறு வழியில்லை. அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். தயவுசெய்து இருக்கைகளுக்குச் செல்லுங்கள். பேசுவதற்கு ஆற்காடு வீராசாமி அவர்கள் காத்திருக்கிறார்கள், நிற்கிறார்கள். அவர்கள் பேசட்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.



*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தய்வுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் உட்காருங்கள், திரு. பழனிசாமி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள் (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை, போய் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் தெரிவித்த ஒரு கருத்தினுடைய அடிப்படையில் சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் உரிய விளக்கத்தை, தெளிவாகச் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். முன்பு உங்களுடைய ஆட்சி நடைபெற்றபோது அந்த அவையில் இடம் பெற்றிருந்த திரு. சுந்தரம் போன்றவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் போன்றவர்கள், அவர்களும் தெரிவிக்க வேண்டிய விளக்கங்களைத் தெரிவித்துவிட்டார்கள். இந்தப் பிரச்சினை இத்தோடு முடிந்தது. அடுத்த பிரச்சினையை ஆரம்பித்து மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள், அவர்களுடைய உரையை நிறைவு செய்யட்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை வேறு இருக்கிறது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் இந்த அவையை நடத்த வேண்டுமென்றுதான் விரும்புகிறோம். இன்னும் சொல்லப்போனால் எங்கள் கட்சியினுடைய பொருளாளர், இன்றைக்குப் பேசுகிறார். (குறுக்கீடுகள்) இல்லை. பிரச்சினை என்னவென்று கேட்டால், அவர் எங்கள் தலைவரைப் பற்றிச் சொன்னதற்கு, அதைப் புண்படுத்துகிற வகையில் போலீஸ்காரர் பிடித்தபோது இப்படி கத்தினாரே என்று சொன்னார். நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், போலீஸ் வந்து - எண்பது வயதானவரை ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், (குறுக்கீடு) திரு. துரைமுருகன், தயவுசெய்து அந்தப் பிரச்சினையை இத்தோடு முடியுங்கள். ஏனென்றால் இது வளரக்கூடிய பிரச்சினை. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே தாங்கள் இதைச் சொன்னீர்கள். இதற்கு முதலமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) இதற்கு முதலமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குற்றச்சாட்டுகளை தி.மு.க.-வினர் பலமுறை கூறியிருக்கிறார்கள். ஆகவே, அப்போது 2001-ல் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியைக் கைது செய்தபோது என்ன நடந்தது, காவல் துறையினர் எப்படி நடந்துகொண்டார்கள்? அத்துமீறல்கள் ஏதாவது இருந்ததா, என்பதை விசாரிக்க விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் அதைப்பற்றி இப்போது பேசுவது சரியல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆகையினாலே, ஒரு வயதானவரை அடித்தால் அவர் கதறாமல் என்ன செய்வார் என்றுதான் கேட்டேன். ஆனால் . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதானவரை அடித்தால் வலியால் கத்தமாட்டாரா என்று மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் கேட்கிறார். அடிக்கவில்லை என்பதுதான் எங்கள் தரப்பு வாதம். அடித்தார்கள் என்று இவர்கள் கூறுகிறார்கள். அதனால்தான் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரை, இந்தக் காவல் துறையைப் பொறுத்தவரை, யாரும் அவரை அடிக்கவில்லை. துன்புறுத்தவில்லை. அப்படி எதுவும் நடக்கவில்லை. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியின்போது திரு. கருணாநிதி அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்தபோது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் என்னை தொடர்புபடுத்தி, என்னை நாடு கடத்த வேண்டும் என்றெல்லாம் இந்த அவையில் பேசி, அது அவைக் குறிப்பிலே பதிவாகி இருக்கிறது. அப்படி யாரும் தரக் குறைவாக இங்கே பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இந்தப் பிரச்சினையை இத்தோடு முடியுங்கள். தயவுசெய்து, இந்தப் பிரச்சினையை இத்தோடு முடியுங்கள். முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். இனிமேல் இதை வளர்க்காதீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் கேட்கிறேன். இப்போது என்ன தவறு நிகழ்ந்துவிட்டது? திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, தைரியம் உள்ளவர் என்றார். சட்டத்



துறை அமைச்சர் அவர்கள், அவரைக் கைது செய்யும்போதுதான் அவர் தைரியத்தைப் பார்த்தோமே என்றார். இதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இனிமேல் இது தொடர்பான பிரச்சினை பற்றிப் பேச வேண்டாம். முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தை விரிவாக, மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள், விளக்கமாக, சொல்லிவிட்டார்கள். இனிமேல் இந்தப் பிரச்சினை வேண்டாம். அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவர்கள் அடித்தார்கள் என்கிறார்கள், அமைச்சர் இல்லை என்கிறார்கள். அதனால்தான் விசாரணை கமிஷனிலே இருக்கிறது என்று சொன்னார். (குறுக்கீடு) அதனால்தான் சொல்கிறேன் எல்லாவற்றையும் expunge செய்யுங்கள் என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் தொலைக்காட்சியில் பார்த்தோம் என்று அதைத்தான் குறிப்பிட்டார்கள். அதிலே ஒன்றும் தவறில்லை. அதுபற்றிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இனிமேல் இதுபற்றிய பிரச்சினைக்கு இடமில்லை.

**திரு. துரைமுருகன்:** வீராசாமி அடித்தார் என்றார். அமைச்சர் இல்லை என்றார். விசாரணை கமிஷனில் இருக்கிற காரணத்தால்தான் நாங்கள் சொல்கிறோம், எல்லாவற்றையும் expunge செய்யுங்கள் என்று, செய்தீர்களா? இப்போது நான் கேட்கிறேன், சபாநாயகரை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டிய பதிலைச் சொல்லியாகிவிட்டது.

**திரு. துரைமுருகன்:** இல்லை. சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்ட கேள்விக்குரிய விளக்கத்தை முதலமைச்சர் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடித்ததைப் பற்றி திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசவும் இல்லை. அடித்ததைப் பற்றி சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவும் இல்லை. ஆகவே, சட்டத் துறை அமைச்சர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியமே இல்லை. திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசியது இதுதான். தி.மு.க. தலைவருக்கு நிறைய தைரியம் இருக்கிறது என்றார். அதற்கு திரு. ஜெயக்குமார் அவர்கள், அவரைக் கைது செய்யும்போதுதான் அவர் தைரியத்தைப் பார்த்தோமே என்றார். வேறு எதுவும் சொல்லவில்லை.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் இதுபற்றிய பிரச்சினைக்கு இடமில்லை. இனிமேல் இதுபற்றிய பிரச்சினையை, தயவுசெய்து கிளப்ப வேண்டாம். அடுத்த பிரச்சினைக்கு திரு. ஆற்காடு வீராசாமி போகட்டும். (குறுக்கீடுகள்) உரிய விளக்கங்கள் அனைத்தும் சொல்லப்பட்டுவிட்ட காரணத்தால், இனிமேல் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) அடுத்த பிரச்சினையைப் பற்றிப் பேசுங்கள். அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12 மணியிலேயிருந்து அவர்கள் பதிலுரைக்காக நேரம் கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப காவல் துறையினர் தி.மு.க. தலைவரை அடித்ததாக இங்கே கூறிக்கொண்டே இருக்கிறார்கள். உண்மையிலே அன்றையதினம் திரு. முரசொலி மாறன் அவர்கள் காவல் துறை D.I.G. முகமது அலியை கண்ணில் குத்தினார், அடித்தார். (குறுக்கீடுகள்) அதை தொலைக்காட்சியிலேயே அனைவரும் பார்த்தார்கள். ஆகவே, அவர்கள் செய்ததை அவர்கள் மாற்றி பழியை எங்கள் மீது போடப் பார்க்கிறார்கள். அது உண்மையல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இனிமேல் இதுபற்றிய பிரச்சினைக்கு இடமில்லை. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இனிமேல் இது தொடர்பாக விவாதத்தை வளர்க்க



வேண்டாம். நீங்கள் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். ஆளுங்கட்சித் தரப்பிலும் சொல்ல வேண்டிய கருத்து சொல்லப்பட்டுவிட்டது. இனிமேல் இந்தப் பிரச்சினைக்கு இடமில்லை. இனிமேல் இந்தப் பிரச்சினைக்கு இடமில்லை. தயவுசெய்து உட்காருங்கள். அடுத்த பிரச்சினைக்கு ஆற்காடு வீராசாமி போகலாம், அவருடைய உரையைத் தொடரட்டும். (கூச்சல்-குழப்பம்)

**டாக்டர் க. பொன்முடி:** அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** நீக்கினால் பிரச்சினை இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் உட்காருங்கள். மாண்புமிகு ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, நீங்கள் இடத்திற்குப் போங்கள். தயவுசெய்து இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு ஆற்காடு வீராசாமி பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் மாண்புமிகு வீராசாமி அவர்கள் பேசுகின்ற அந்த நேரத்தை எடுத்துக்கொள்வதால் நேரத்தை அவர் இழக்க வேண்டிவரும். தயவுசெய்து மாண்புமிகு வீராசாமி அவர்கள் பேசுவதற்கு நீங்கள் அழைக்க வேண்டும். (குறுக்கீடு) Time வேண்டும் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பலமுறை அழைத்துவிட்டேன். தயவுசெய்து உங்களுடைய இடங்களுக்குச் செல்லுங்கள். ஆற்காடு வீராசாமி அவர்கள் பேச்சைத் தொடரட்டும். (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, பொன்முடி, பொன்முடி உங்கள் இடத்திற்குப் போங்கள். இதுபோன்ற விவாதம் செய்வது முறையற்றது. தயவுசெய்து உங்களுடைய இடத்திற்குப் போங்கள். திரு. பரணிகுமார், அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். தயவுசெய்து இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சரிடத்திலே எல்லாம் நேரடியாக நீங்கள் இப்படிப் பேசக்கூடாது. இது முறையல்ல. சட்டமன்றத்திலே நடந்துகொள்ளக்கூடிய முறையல்ல. எதுவாக இருந்தாலும் என்னிடத்திலே சொல்லுங்கள். தயவுசெய்து உங்கள் இடங்களுக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உங்களுடைய கோரிக்கை என்ன? அமைச்சர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்கிறீர்கள். நீக்க முடியாது. (குறுக்கீடுகள்) அவர் பேசியது சரியானது. (குறுக்கீடுகள்) தரப்பட்ட விளக்கம்

சரியானது. நீக்க முடியாது. (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசியதை நீக்குவதற்கு வழியில்லை. திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். இதுதான் என்னுடைய தீர்ப்பு, அவ்வளவுதான்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

அவை நடவடிக்கைகளுக்கு தயவுசெய்து குந்தகம் விளைவிக்காதீர்கள். நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை வரும். திரு. ஆற்காடு வீராசாமி அவர்களைப் பேச அனுமதியுங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

தயவுசெய்து இப்படி கோஷம் எழுப்பக் கூடாது. அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது. தயவுசெய்து இருக்கைக்குச் செல்லுங்கள். இல்லாவிட்டால் வெளியேற்ற வேண்டியிருக்கும்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற கோஷத்தை எழுப்புகிறார்கள். அவையினுடைய கண்ணியம் மீறப்படுகிறது. தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எச்சரிக்கை விடுத்துவிட்டு, தேவையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எச்சரிக்கை விடுத்துவிட்டேன். அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். தயவுசெய்து அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். இல்லாவிட்டால் வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். அடுத்த பிரச்சினைக்கு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் போகட்டும். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நான் எங்களுடைய தலைவர் தைரியமானவர் என்று சொன்னேன். வேண்டுமானால் ஜெயக்குமார் அவர்கள் அவரைவிட அதிக

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தைரியமுள்ளவராக இருக்கலாம். அதுமட்டுமல்ல. எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் 67 ஆண்டு பொது வாழ்க்கையில் யாருக்கும் அஞ்சியதில்லை. அவர் தண்டவாளத்திலே தலை வைத்தவர். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசிக்கொண்டுதான் இருக்கிறார். அவர்தான் பேசிக்கொண்டு இருக்கிறார். (குறுக்கீடுகள்) ஏன் நீங்கள் சத்தம் போடுவதில்லையா அவர்கள் பேசும்போது? அவர் பேசிக்கொண்டுதான் இருக்கிறார். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். தயவுசெய்து கழகத் தோழர்கள் நம்முடைய கருத்துகளைப் பதிவு செய்ய ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆளுங் கட்சிக்காரர்கள் எவ்வளவு கேலி செய்தாலும் நாம் அதைப் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதையெல்லாம் உங்கள் எம்.எல்.ஏ.-க்கள் கூட்டத்திலே பேசி முடிவு செய்ய வேண்டாமா? இங்கே வந்தா சொல்வது? (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) பேசுங்கள், பேசுங்கள், நீங்கள் பேசுங்கள்.

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கலைஞர் அவர்கள் தமிழ்மொழியைக் காப்பாற்றுவதற்காக தனிமைச் சிறையிலே, பாளையங்கோட்டையில் 48 நாட்கள் அடைக்கப்பட்டிருந்தவர். எத்தனையோ சோதனைகளைச் சந்தித்தவர். எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்தவர். எனவே, அவரைப் பற்றி இங்கே ஒரு சிலர் ஏதோ சொல்கிறார்கள் என்பதற்காக நாங்கள் கவலைப்படவில்லை. தலைவர் கலைஞர் அவர்களுடைய திறமை, அறிவு, ஆற்றல் அத்தனையும் இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். அவர் படைத்த படைப்புகள், அவருடைய கதை, வசனங்கள், அவருடைய இலக்கிய அறிவு, இவற்றையெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே அறிவீர்கள். ஒரு புலவர் ஒரு தடவை தலைவரைச் சந்தித்து விதவை என்ற வார்த்தையிலேகூட ஒரு பொட்டு இல்லையே என்று கேட்டபோது, அவர் சிரித்துக் கொண்டே சொன்னார். விதவை என்று ஏன் சொல்கிறீர்கள்? கைம்பெண் என்று சொல்லுங்கள். இரண்டு பொட்டு இருக்கும் என்று சொன்னார். இதை நான் சொல்வதற்குக் காரணம் அவருக்குத் தமிழிலே எந்த அளவிற்கு ஆற்றல் இருக்கிறது

என்பதை எடுத்துக்காட்டத்தான். அப்படிப்பட்ட தலைவரை ஏதோ சுனாமிக்குப் பயந்துகொண்டு அவர் மருத்துவமனையிலே இருந்தார்களே என்று சொன்னதற்காகத்தான் அவர் தைரியமானவர் என்று சொன்னேனே தவிர, அதுமட்டுமல்ல, அவர் இதுவரையிலே எத்தனையோ போராட்டங்களுக்குச் சென்றிருக்கிறார், எத்தனையோ வழக்குகளைச் சந்தித்திருக்கிறார். எந்த நேரத்திலேயும் எந்தச் சூழ்நிலையிலேயும் அவர் வாழ்க்கையிலே முன்ஜாமீன் கேட்டதே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல.

தலைவர் கலைஞரைப் பொறுத்தவரையில் அவர் அன்றையதினம் மருத்துவமனையிலே எப்படி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார் என்பது எங்களுக்குத்தான் தெரியும். அந்தச் சூழ்நிலையிலேகூட எங்களையெல்லாம் உடனடியாகப் போய் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்லச் சொன்னாரே தவிர, ஏதோ மருத்துவமனையிலே அவரோடு இருக்க வேண்டும் என்று விரும்பவில்லை. நானும், தம்பி ஸ்டாலினும் உடனடியாக ஒரு மணி நேரத்திலே சென்னை கடற்கரையிலே பாதிக்கப்பட்ட மீனவர்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் சொன்னோம். அதுமட்டுமல்ல.

அவர் அப்படி படுக்கையிலே இருந்தபோதுதான், சில விஷமிகள் அவர் இறந்துவிட்டதாகவே தமிழ்நாட்டிலே பொய்ப் பிரச்சாரம் செய்தார்கள். அந்த நேரத்திலே சில பகுதிகளிலே கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டன. உடனே மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காக, அவரைத் தொலைக்காட்சியிலே பேசச் சொல்லி, அவர் நலமாக இருக்கிறார் என்று நாங்கள் நிரூபிக்க வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலேகூட தலைவர் கலைஞர் அவர்கள் இந்த அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு, சுனாமியைப் பொறுத்தவரையிலே ஆதரவு தர வேண்டும் என்று சொன்னாரே தவிர எதிர்த்து எதையும் செய்ய வேண்டும் என்று எந்தச் சூழ்நிலையிலும் சொன்னதில்லை. ஏறக்குறைய 40 லாரிகளிலே தமிழ்நாடு முழுவதும் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உணவுப் பொருட்களுக்கும், கைத்தறி ஆடைகளுக்கும் ஏற்பாடு செய்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நாங்கள் அனுப்பியிருக்கின்றோம். இப்படி தமிழ்நாட்டு மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கின்ற ஒரு தலைவரைப்பற்றி இங்கே கேவலமாகக் குறிப்பிட்டார்களே என்பதற்காகத்தான் இதை நான் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.



பிற்பகல் 12-30

அதைப்போலவே வீரப்பனைச் சுட்டதைப் பற்றி இங்கே சொன்னார்கள். வீரப்பனைச் சுட்டதைப் பற்றி ஏதோ எங்கள் தலைவர் கவலைப்பட்டதாகக்கூட இங்கே பேசினார்கள். எங்கள் தலைவர் என்ன சொன்னார் என்றால், அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே 18-10-2004 அன்று வீரப்பனை ஒழித்துக் கட்டியது குறித்து செய்தி கிடைத்தவுடன், வீரப்பன் மீது அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதல் குறித்து செய்தியாளர்கள் கொடைக்கானலில் தங்கியிருக்கும்போது கலைஞர் அவர்களிடம் தொடர்புகொண்டு அவரது கருத்தினைக் கேட்டபோது வீரப்பன் குழுவினருக்கும், அதிரடிப்படையினருக்கும் இடையே நேற்று இரவு நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் வீரப்பனும் அவனது குழுவினரும் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து அதிரடிப்படைக்குப் பொறுப்பேற்றிருந்த முக்கிய அதிகாரிகளில் ஒருவர் கொடைக்கானலில் தங்கியிருந்த எனக்குத் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு அன்று காலையிலே தகவல் தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டு காலமாக தமிழக, கர்நாடக அரசுகளுக்குத் தலைவலியாக இருந்துவந்த பிரச்சினைக்கு இதன் மூலம் ஒரு முடிவு காணப்பட்டுள்ளது. தொலைபேசியில் முக்கிய காவல் துறை அதிகாரி இச்செய்தியினை எனக்குத் தெரிவித்தபோது மாநில போலீசாரின் விடாப்பிடியான தொடர் முயற்சிக்குக் கிடைத்த வெற்றிக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்வதாகக் கூறினேன். வீரப்பனைப் பிடிப்பதற்கான தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட இரு மாநிலங்களின் அதிரடிப்படையினர், குறிப்பாக டி.ஜி.பி. விஜயகுமார், ஐ.பி.எஸ். முதல் காவலர்கள் வரையில் அனைவரின் உழைப்பையும் பாராட்டுகிறேன் என்றுதான் தெரிவித்தாரே தவிர, கலைஞர் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை எதிர்க் கட்சிக்காரர்களும் அதை வரவேற்றார்களே தவிர, இந்த அரசை எங்கேயும் குறை சொல்லவில்லை. ஆனால், ஏதோ தி.மு.க. ஆட்சியிலேதான் வீரப்பன் இருந்த காட்டிலே கோபாலும் மற்றவர்களும் சுதந்திரமாகச் சென்றதைப் போலவும், மற்ற ஆட்சியிலே எல்லாம் ஏதோ அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு இருந்ததைப் போலவும் இங்கே பேசினார்கள். வீரப்பன் சந்தன மரத்தை வெட்டினான், பல பேரைக் கொலை செய்தான். யானைகளை வெட்டி தந்தங்களை விற்றான். ஒரு கொடுமைக்காரன் என்பதிலே இரு வேறு கருத்துகளுக்கு இடமேயில்லை. இதே அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது 1994 ஆம் ஆண்டு ஒரு போலீஸ் அதிகாரியையும் மற்ற இருவரையும் அவன் கடத்திச் சென்றான். அப்போது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் எப்படியாவது

அவரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொண்டார்கள் என்பது நாட்டுக்கு நன்றாகத் தெரியும். வீரப்பன் இருந்த இடத்திற்கு அதிரடிப்படையினர் போகக்கூடாது என்று கோவை மாவட்ட ஆணையர் உத்தரவு பிறப்பித்திருந்தார். பேபி என்ற அவனுடைய தூதுவனை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். அர்ஜுனன் என்ற வீரப்பனுடைய தம்பிக்குச் சிகிச்சை அளித்தார். இது எல்லாம் அப்பொழுது நடைபெற்றது. இது தவறு அல்ல. ஏனென்றால் மத்திய அரசிலேகூட சில பேர் இப்படி கடத்தப்பட்ட நேரத்தில் அல்லது தீவிரவாதிகள் முக்கியமானவர்களைக் கடத்திடும்போது, இப்படிப்பட்ட உத்திகளைக் கையாளுவது அந்தந்த மாநில அரசாங்கத்தினுடைய கடமை.

1991-ல் காஷ்மீர் முதலமைச்சர் முப்தி முகம்மது சையத் அவர்களின் மகள் டாக்டர் ரூபியா சையது கடத்தப்பட்டபோது சிறைப்பட்டிருந்த முக்கிய தீவிரவாதிகள் சிலரை விடுதலை செய்ததன் மூலம்தான் ரூபியா சையதை மீட்க முடிந்தது. அதைப்போல 1999-ல் ஏறத்தாழ 160 பயணிகளைக் கொண்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தை ஆப்கானிஸ்தான் நாட்டிலுள்ள காந்தகாரில் முக்கிய தீவிரவாதிகள் சிலரை விடுதலை செய்துதான் பயணிகளை மீட்க வேண்டியிருந்தது.

அதைப்போலதான் தி.மு.க. ஆட்சியிலே நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டபோது எப்படியாவது அவரை மீட்க வேண்டும் என்று கலைஞரும், கர்நாடக அரசு முதல்வர் அவர்களும் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி, தூதுவர்களை அனுப்பி அவரைக் காப்பாற்றினார்களே தவிர ராஜ்குமார், ஒரு மாபெரும் நடிகர். ஏதாவது ஒன்று அவருக்கு ஏற்பட்டிருந்தால் கர்நாடகாவிலே இருக்கக்கூடிய தமிழர்கள் இலட்சக்கணக்கிலே பாதிக்கப்படுவார்களே என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஆனால், இப்படி வீரப்பன் செய்த அக்கிரமங்களுக்கு ஒரு முடிவு ஏற்பட்டது என்பது அனைவருக்கும் நிம்மதியே தவிர ஏதோ தி.மு.க. ஆட்சியிலே மட்டும்தான் அந்தக் காட்டிற்குத் தூதுவர்கள் சென்றார்கள், மற்ற ஆட்சிகளிலே யாரும் செல்லவில்லை என்பதைப் போல கருத்துச் சொல்வது இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைக் கொடுப்பதாகும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-35*

புதிய வீராணம் திட்டத்தினைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே 2, 3 நாட்கள் விளக்கத்தைக் கொடுத்துவிட்டார்கள்.



ஏறக்குறைய தினமும் 840 மில்லியன் கன அடி தண்ணீர் சென்னை நகருக்குத் தேவைப்படுகிறது. எனவே, அதற்குத் தேவையான திட்டங்களையெல்லாம் நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம்; 720 கோடி ரூபாயிலே முதலிலே ஒரு திட்டத்தை, புதிய வீராணம் திட்டம் என்று அறிவித்தோம். அதன் மூலம் பண்ருட்டிக்கு அருகிலே போர்வெல் போட்டு தண்ணீரைக் கொண்டுவந்தோம், பிறகு வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டுவந்தோம் என்றெல்லாம் சொல்லிவிட்டு, பிறகு கடல் நீரைக் குடிநீராக ஆக்கப் போகிறோம், 1,000 கோடி ரூபாய் அதற்காக ஏற்கெனவே ஒதுக்கப்பட்டு, டெண்டர் எல்லாம் கோரப்பட்டது. உண்மையிலேயே அது அப்போதே நிறைவேற்றப்பட்டிருந்தால், இந்நேரத்தில் தண்ணீர் கிடைத்திருக்கும். ஆனால், அது நீதிமன்றத்திற்குப் போய்விட்ட காரணத்தினாலே அந்தத் திட்டம் இதுவரையிலே நிறைவேற்றப்படவில்லை. இப்போது புதிதாக 2006 ஆம் ஆண்டுக்குள் நீர் கிடைக்கக்கூடிய வகையிலே டெண்டர்கள் எல்லாம் இன்று கோரப்பட்டிருக்கின்றன. அந்தத் தண்ணீர் கிடைக்குமென்று தெரிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே மகிழ்ச்சி. ஆனால், அதே நேரத்தில் இப்போதாவது டெண்டர்கள் போடுகின்றவர்கள் நீதிமன்றத்திற்குப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஆளுங்கட்சியினுடைய கடமை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்தவிடாமல் கடந்த முறை நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுத்தவருக்கு உயர் நீதிமன்றமே கண்டனம் தெரிவித்து, அவருக்கு அபராதமும் விதித்தது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் நீதிமன்றத்திற்குப் போனதை சரியென்று இங்கே நான் சொல்லவில்லை. அப்படிப் போன காரணத்தினாலே இரண்டு ஆண்டுக்காலம் வீணாகிவிட்டது. அதற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் வேண்டுமென்றே மாநில அரசுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்று நீதிமன்றத்திற்குச் சென்றால் அதற்கு மாநில அரசு என்ன செய்ய முடியும்? ஒருவர் வேண்டுமென்றே அப்படி நீதிமன்றத்திற்குச்

சென்றார். அதனால்தான் இந்தத் திட்டம் தாமதப்படுத்தப்பட்டது. அதனால் விரைவில் அதை முடிக்க வேண்டுமென்றுதான் மாநில அரசு விரும்புகிறது. கடந்த முறை இப்படி நீதிமன்றத்திற்குச் சென்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றவிடாமல் செய்தவருக்கு உயர் நீதிமன்றம் கடுமையான கண்டனம் தெரிவித்து அவருக்கு அபராதமும் விதித்து, அவர் மீது மாநில அரசு கிரிமினல் நடவடிக்கை எடுக்கலாம் என்றுகூட தீர்ப்பளித்தது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். ஆகவே, மீண்டும் அப்படி நீதிமன்றத்திற்குச் செல்ல மாநில அரசு இடம் கொடுக்க வேண்டாம் என்றால் என்ன அர்த்தம் என்று புரியவில்லை? கடந்த முறையும் அவர் நீதிமன்றத்திற்குச் சென்றபோது மாநில அரசு எந்த இடமும் தரவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ உள்நோக்கத்தோடு இதைச் சொல்கிறேன் என்று நினைக்கக் கூடாது. காலதாமதம், விரயம் ஆகக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில்— அதிலும் சென்னையிலே குடியிருக்கக்கூடியவன் என்கிற அடிப்படையில் சொல்கிறேனே தவிர, வேறல்ல. இந்த வீராணம் தண்ணீர் கிடைத்துவிட்டது, இவ்வளவு முயற்சிகள் எடுத்தோம், எல்லோருக்கும் பைப்புகள் மூலம் தண்ணீர் கொடுக்கிறோம் என்றெல்லாம்கூட சொல்லியிருக்கிறீர்கள். நான் அதிலே குறை சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம். என்னுடைய வீட்டிற்குக் குடிதண்ணீர் பைப்பிலே வருகிறது. ஆனால், அண்ணா நகரிலே இருக்கக்கூடிய ஒரு பகுதிக்கு இன்னும் குழாய்கள் மூலமாக தண்ணீர் கிடைக்கவில்லை. இருந்தாலும் ஒரு முயற்சி எடுத்திருக்கிறீர்கள். அதற்காக நான் அதிலே குறை சொல்ல விரும்பவில்லை. அந்த முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் இங்கே வெளியிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலே 15,089 தெருக்கள் உள்ளன. அதில் 13,581 தெருக்களில் குழாய் மூலமாக ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிதண்ணீர் கொடுக்கப்படுகிறது. 641 தெருக் குழாய்களில் குழாய் அமைப்புகள் இருந்தும் அழுத்தம் குறைவு காரணமாக நீரேற்று அமைப்புகளின் கடைக்கோடியிலுள்ள பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் அந்த 641 தெருக்களில் தண்ணீர் குழாய் மூலமாக கொடுக்கப்படுவதில்லை. (குறுக்கீடு)



பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் விளக்கத்தைத்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மீதம் இருக்கின்ற 867 தெருக்களில் குழாய் அமைப்புகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், இப்பகுதிகளில் லாரி மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன் என்று அமைச்சர் பதில் சொல்கிறார் என்று தெரியவில்லை. எல்லா இடங்களிலும் குழாய்களிலே தண்ணீர் வரவில்லை, என் வீட்டிற்கு வருகிறது என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். எனவே, அரசாங்கத்தின்மீது குறை சொல்லவில்லை. சில இடங்களில் இன்னும் தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொன்னேன். அதையேதான் அவரும் சொல்கிறார். இங்கே ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார். அண்ணா நகரிலேதான் குடியிருக்கிறார். அவர் வாழக்கூடிய அந்தப் பகுதியிலேதான் தண்ணீர் போகவில்லை. அது என்னுடைய தொகுதி. அதைத்தான் நான் சொல்கிறேன். பொதுவாக எல்லா இடங்களுக்கும் குடிதண்ணீர் கிடைக்கவில்லை. சில இடங்களிலே கிடைத்திருக்கிறது. இன்னும் சில இடங்களுக்குக் கொடுக்க வேண்டும். எனவே, வீராணம் திட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். கடல் நீரைக் குடிநீராக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். சென்னை நகரத்து மக்களுக்கு நீங்கள் கொடுத்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். அதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதேநேரத்திலே விவசாயிகள் ஒரு பக்கத்திலே கடலூர் மாவட்டத்திலேயும், தஞ்சை மாவட்டத்திலேயும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினைக்கு உள்ளே நான் போக விரும்பவில்லை.

அடுத்து, தொழிற் கல்வி, மருத்துவம் போன்ற இந்தத் துறைகளிலே மாணவர்கள் படிப்பதற்கு அண்ணா பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு செய்த குழப்பத்தைப்போல இதுவரையிலும், சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து அத்தகைய குழப்பத்தை நான் பார்த்ததே இல்லை. வினாத் தாள்களிலேயே தவறான வினாத் தாள்கள். அதிலே மாணவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். மாறி மாறி தீர்ப்புகள் வந்தன. நான் இந்த அரசுக்குத்

தெரிவித்துக்கொள்ள விரும்புவது, காமராஜர் முதலமைச்சராக இருந்தார், பக்தவத்சலம் இருந்தார், எம்.ஜி.ஆர். இருந்தார், கலைஞர் இருந்தார், அண்ணா இருந்தார். ஆனால், வழக்குகள் எங்கேயோ ஒன்றிரண்டு வரும். நுழைவுத் தேர்வுகள் என்பது இப்போது எப்படியாகிவிட்டது என்றால், மத்திய அரசு ஒரு நுழைவுத் தேர்வு நடத்தும், மாநில அரசு ஒரு நுழைவுத் தேர்வு நடத்தும். இப்போது அப்படியல்ல, மத்திய அரசு ஒன்று நடத்துகிறது. மாநில அரசு ஒன்று நடத்துகிறது. நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் ஒன்று நடத்துகிறது. சுப்பிரமணியம் குழு என்ற ஒன்று நியமித்து அவர் ஒரு நுழைவுத் தேர்வை நடத்துகிறார். இத்தனை நுழைவுத் தேர்வுகளுக்கும் மாணவர்கள் படிக்க வேண்டுமென்று சொன்னால் அதில் எத்தனை பேர் பைத்தியக்காரர்களாக மாறுவார்களோ எனக்குத் தெரியாது. ஆகவே, அதைக் கட்டுப்படுத்த ஒரு நல்ல வழிமுறையை மேற்கொள்ளும் வகையில் கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பொறியியல் கல்லூரிகளுக்கும், மருத்துவக் கல்லூரிகளுக்கும் பல்வேறு தேர்வுகள் நடைபெறுகின்றன என்று கூறியிருக்கிறார். அரசாங்கம் பல்வேறு தேர்வுகளை நடத்த வேண்டுமென்று எண்ணவில்லை. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படிதான் அந்த சுப்பிரமணியம் குழு - ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் கூறியதன் அடிப்படையில்தான் அந்த சுப்பிரமணியம் குழு அமைக்கப்பட்டு அவரின் பரிந்துரைப்படிதான் அந்தத் தேர்வு நடத்தப்படுகிறதே தவிர, ஏதோ தமிழக அரசாங்கம் பல்வேறு தேர்வுகளை நடத்துகின்றது என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறார். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படிதான் இந்தத் தேர்வுகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரரைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார். எத்தனையோ தீர்ப்புகளை எதிர்த்து நம்முடைய அரசாங்கம் உச்ச நீதிமன்றத்திலே appeal செய்கிறது. அதைப்போலவே இதற்கும் ஒரு அப்பீல் செய்து ஏற்கெனவே இத்தனை நுழைவுத் தேர்வுகள் இருக்கின்றன. எனவே, புதிதாக ஒரு நுழைவுத் தேர்வு எழுதுவதற்கு நீங்கள் ஓர் உத்தரவு பிறப்பித்தது சரியல்ல என்று appeal-க்குப் போனால் நிச்சயமாக உச்ச நீதிமன்றம் அதையும் கேட்கும். எனவே, நான் மாணவர்களுடைய



எதிர்காலத்திற்காக இதைச் சொல்கிறேனே தவிர, யாரையும் குற்றங்குறை சொல்வதற்காக அல்ல.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் மருத்துவமனைகள் இருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்களும் நிதி ஒதுக்குகிறார்கள். நான் நேற்றையதினம் Internet-ல் Tamil Nadu Medical Services Corporation-னிலே இருக்கக்கூடிய மருந்துகள் எவ்வளவு என்று கணக்குப் பார்த்தேன். உள்ளபடியே சொல்கிறேன். தி.மு.க. ஆட்சியிலே, மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தாலுகா மருத்துவமனையாக இருந்தாலும் சரி அல்லது மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக இருந்தாலும் சரி, ஆண்டுக்கு 100 கோடி ரூபாய்க்கு 268 வகையான மருந்துகள் வாங்கப்பட்டு, மருந்தே யாருக்கும் இல்லையென்று டாக்டர்கள் சொல்லக்கூடிய ஒரு நிலை வராத அளவுக்குப் பார்த்துக்கொண்டோம். ஆனால் இன்றையதினம், அந்த Internet-லே பார்த்தால் பல மருந்துகள் மாவட்டத் தலைநகரங்களிலே இல்லை.

இன்னும் சொல்லப்போனால், கிராமங்களில் உங்களுக்குத் தெரியும். நாய் கடிக்கிறது. நாய்க்கடிக்கு மருந்து வாங்க..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலையிலே கேள்வி நேரத்திலே அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கண்டிப்பாக இதைச் சொல்லித் தீர வேண்டும். Tamil Nadu Medical Services Corporation - தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் என்ற ஒரு நிறுவனத்தை இந்தியாவிலே, இந்திய வரலாற்றிலேயே முதன் முதலாகத் தொடங்கியது எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 1-7-1994 அன்று இந்திய நாட்டிலே உள்ள மற்ற மாநிலங்களிலேயிருந்து எல்லாம் இங்கே வந்து அந்த நிறுவனத்திலே ஆய்வு செய்து, இதுபோல் மற்ற மாநிலங்களிலும் மருந்துகள் வாங்க வேண்டும் என்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகின்றார்கள். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய, ஒட்டுமொத்தமாக அத்தனை மருத்துவமனைகளிலும் தாராளமாக மருந்து கிடைக்கிறது. கிட்டத்தட்ட இன்றையதினம் 29 மாவட்ட மருத்துவமனைகள் இருக்கின்றன. 158 தாலுகா மருத்துவமனைகள் இருக்கின்றன. அதேபோல் 80 non-taluk மருத்துவமனைகள் இருக்கின்றன. 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இந்த மருத்துவமனைகளில் நீங்கள்

கூறியதுபோல, குறிப்பாக வெறிநாய்க்கடிக்கு உரிய மருந்துகள் கிடைக்கவில்லை என்று கூறினீர்கள். இதற்கு மத்திய அரசு இடையிலே ஒரு சட்டம் போட்டது. அந்த அடிப்படையிலே இப்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அத்தனை மருத்துவமனைகளுக்கும் அந்த மருந்து கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-45*

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஏதோ மத்திய அரசாங்கத்தின்மேல் சொல்கிறார். அந்த நாய்க்கடி மருந்து மட்டுமல்ல, உயிர் காக்கும் மருந்துகள்கூட, சில மருந்துகள் இல்லை. நான் இதை மாண்புமிகு முதலமைச்சருடைய பார்வைக்குத் தருகிறேன். Internet-லே நேற்றையதினம் எடுத்தது. இதைப் பார்த்தால் Tamil Nadu Medical Services Corporation-லே எந்தெந்த மாவட்டத்திலே எவ்வளவு மருந்துகள் இருக்கின்றன என்பதை நன்றாக, அவர்களே புரிந்துகொள்வார்கள். இதைத் தங்கள் மூலமாக அளிக்கின்றேன். அவர் பார்த்துக்கொள்ளட்டும்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் ஒரு குறிப்பினை அளித்தார்.)

அதைப்போல இன்றையதினம் கல்லூரி மாணவர்களுக்கு, அது மருத்துவக் கல்லூரியிலே படிப்பதாக இருந்தாலும் சரி அல்லது பொறியியல் கல்லூரியிலே படிப்பதாக இருந்தாலும் சரி, கட்டணங்கள் பல மடங்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்கிறேன். தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, மருத்துவக் கல்லூரிக் கட்டணம் 6,500 ரூபாய். தனியார் கல்லூரிகளாக இருந்தால் 10,000 ரூபாய். ஆனால், இன்றையதினம் தனியார் கல்லூரிகளிலே எம்.பி.பி.எஸ்., படிக்க merit list-லே வரக்கூடியவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய். அதுவே management quota-வாக இருந்தால் ரூ.2,50,000. இப்படி கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் ஏழைகள் எப்படி இந்தக் கல்வியைப் பெறமுடியும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கான விளக்கத்தைத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார். உச்ச நீதிமன்றத்தில் வரக்கூடிய தீர்ப்பின்



அடிப்படையில்தான் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆகவேதான், உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் இங்கே வரும்போது, அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் இங்கே இருக்கக்கூடிய மாணவர்களுடைய கல்விக் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து உச்ச நீதிமன்றம் நிர்ணயித்த கட்டணங்களைத்தான் கல்லூரிகள் வசூலிக்கின்றனவா என்பதை அதிகாரிகளை விட்டு விசாரித்துப் பார்த்தால், உண்மை என்ன என்று தெரியும். உச்ச நீதிமன்றம் அறிவித்த கட்டணத்திற்கும் தனியார் கல்லூரிகளிலே வசூலிக்கப்படுகின்ற கட்டணத்திற்கும் சம்பந்தமே இல்லை. அவர்கள் பஸ்ஸுக்குத் தனியாகக் கட்டணம், ஹாஸ்டலுக்குத் தனியாகக் கட்டணம் வசூலிப்பதைக்கூட நான் அதிகமாக, பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், கல்லூரிக் கட்டணங்களை உச்ச நீதிமன்றம் சொன்னதைவிட அதிகமாக வசூலிக்கிறார்கள் என்பதைத்தான் இந்த இடத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அடுத்து, நான் அரசு ஊழியர்களை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) Idea சரி. இன்றைக்கு நேரம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் சொல்லிவிடட்டும். அவர் பேசிவிடட்டும். வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால் வேறு நேரத்தில் பேசலாம்.

**திரு. ஜி.கே. மணி:** முக்கியமான பிரச்சினைதான். கட்டணப் பிரச்சினைதான்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திரு. மணி, (குறுக்கீடு) மணி, நாம் அப்புறம் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (மணியடிக்கப்பெற்றது)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அடுத்து, இந்த ஆளுநர் உரையில் அரசு ஊழியர்கள் பிரச்சினையைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை என்று பல கட்சித் தலைவர்களும் குறிப்பிட்டிருந்தார்கள். அரசு ஊழியர்களுடைய தலைவர்களும் குறிப்பிட்டிருந்தார்கள். நான் அந்தப் பிரச்சினைக்குள்ளே நுழைய விரும்பவில்லை. நான் ஒன்றை மட்டும் வேண்டுகோளாக வைக்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அரசு ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்பட்டனவோ அந்தச் சலுகைகளைத் தயவுசெய்து மீண்டும் வழங்குங்கள் என்ற ஒரு வேண்டுகோளைத்தான் வைக்க விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், இதற்கு முன்னாலே நிதிநிலைமை சரியில்லை என்று சொன்னார்கள். இங்கே ஓர் உறுப்பினர் கேட்டார். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடனே, அதிலே கிடைத்த பாடத்தின் காரணமாக நீங்கள் இப்போது அரசு ஊழியர்களுக்குச் சில உதவிகளைச் செய்திருக்கிறீர்களா என்று கேட்டார். அது இல்லை, இப்போது நிதிவசதி நன்றாக இருக்கிறது. ஆகவே கொடுத்தோம் என்றார்கள். எனவே முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே கழக ஆட்சியிலே அரசு ஊழியர்கள் பெற்றுக்கொண்டிருந்த அத்தனை சலுகைகளையும் நீங்கள் திரும்பத் தரவேண்டும் என்பதோடு, இப்போது புதிதாக மத்திய அரசு, அதனுடைய ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்திலே 50 சதவிகிதம் அகவிலைப் படியை சேர்த்திருக்கிறார்கள். அவர்கள் பெற்றுக்கொண்டிருந்த அகவிலைப்படியை அடிப்படைச் சம்பளத்திலே சேர்த்திருக்கிறார்கள். அதைப்போலவே, நம்முடைய மாநில அரசு ஊழியர்களுக்கும் இந்த அரசு செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதைப்போல ஓய்வு பெற்றவர்களுக்கு, 33 வருட காலம் பணியில் இருந்திருந்தால்தான் அவர்களுக்கு அந்த முழு ஓய்வூதியம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதையும் தளர்த்தி, 30 ஆண்டுகள் பணி செய்திருந்தாலே அவர்களுக்கும் அந்த ஓய்வூதியம் கிடைக்கும் என்ற அடிப்படையிலே ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



எல்லாவற்றையும்விட, அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நடந்துமுடிந்த தேர்தலிலே அரசு ஊழியர்கள்தான் எதிர்க்கட்சிகளுக்கு உதவினார்கள், அதனால்தான் எங்களுக்குத் தோல்வி ஏற்பட்டது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அதிலே மாறுபடுகிறேன். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் அத்தனைபேரும் எங்களுடைய கூட்டணிக்கு ஆதரவாக இருந்திருந்தால், அ.தி.மு.க.-விற்கு இவ்வளவு வாக்குகள் வந்திருக்காது. பொதுமக்கள் சூழ்நிலைகளைப் பார்த்து வாக்களிக்கிறார்கள்.

இன்றையதினம்கூட ஒரு பத்திரிகையிலே பார்த்தேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பத்திரிகைகளிலே விருப்பம்போல ஒவ்வொன்றையும் எழுதுகிறார்கள். (குறுக்கீடு) தயவுசெய்து (குறுக்கீடு) இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ** ஆனால் இப்படித் தகவல்கள் பத்திரிகைகள் மூலமாகக் கிடைக்கிறது. இருந்தாலும், (குறுக்கீடு) நான் அதை ஒன்றுமே வலியுறுத்தவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நீங்கள் எது வேண்டுமோ அதை வைத்துக்கொள்ளுங்கள். எது வேண்டாம் என்று நினைக்கிறீர்களோ, தாராளமாக அதை நீக்கிக்கொள்ளுங்கள். ஆனால், ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். புதியதாக நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததற்குப் பிறகு, சில சலுகைகளை, சில அறிவிப்புகளை மத்திய அரசு செய்தது. அதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலே வருமானம் வாங்கக் கூடியவர்களுக்கு வரி கிடையாது என்று அறிவித்திருக்கிறார். நான் இந்த அரசுக்கு ஒரு யோசனையாகத் தெரிவிக்க விரும்புவது, அரசு ஊழியர்கள் ஏற்கெனவே Professional Tax அதாவது தொழில் வரி என்ற ஒன்றைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வரியை இரத்து செய்ய முடியுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

தமிழைச் செம்மொழியாக்க வேண்டுமென்று 150 ஆண்டு காலமாக நம்முடைய அறிஞர் பெருமக்கள் எல்லாம் கேட்டு வந்தார்கள். சூர்ய நாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற் கலைஞர் கேட்டார். அதைத் தொடர்ந்து பலர் கேட்டார்கள். இப்போது கலைஞர் அவர்கள் இந்த அணிக்கு தமிழகத்திலே தலைமை தாங்கி, பிரதமரிடத்திலேயும், சோனியா காந்தி அம்மையாரிடத்திலேயும் வலியுறுத்திய காரணத்தினால், இன்றைக்குத் தமிழ் செம்மொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தமிழ் செம்மொழியாகிய காரணத்தினால், எதிர்காலத்திலே உலகம் முழுவதிலும் இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களிலே தமிழுக்கு ஒரு புதிய அந்தஸ்து வரும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைப் பற்றி நம்முடைய ஆளுநர் உரையில் 2001, 2002, 2003 ஆகிய மூன்று ஆண்டுகளிலே தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலேகூட, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ, இந்த ஆண்டு ஆளுநர் உரையில் அது இடம் பெறவில்லை. ஒருசமயம் மத்திய அரசு அறிவித்துவிட்டது என்று அதை விட்டுவிட்டிருக்கலாம். நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கு இப்போது மத்திய அரசு அனுமதி கொடுத்து, அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் மாண்புமிகு டி.ஆர். பாலு அவர்கள், 2000 கோடி ரூபாயிலே இந்தத் திட்டத்தினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயெல்லாம் பொதுமக்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லி, அவர்களும் அந்த அறிக்கையை இங்கே இருக்கக்கூடிய மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். மாசுக் கட்டுப்பாடு வாரியக் கூட்டம் 9 ஆம் தேதி நடைபெறவிருக்கிறது. அந்தக் கூட்டத்திலே அதற்கான ஒப்புதல் தந்து அரசுக்கு அனுப்புவார்களேயானால், நிச்சயம் இந்த அரசு உடனடியாக N.O.C.-ஐ மத்திய அரசுக்கு அனுப்பலாம். அப்படி அனுப்பினால், இந்தத் திட்டத்தை நிச்சயம் இந்த ஆண்டே தொடங்குவதற்கான வாய்ப்பிருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேறினால் பல நன்மைகள் தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் என்பதாலே குறிப்பாக நான் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். கிழக்குக் கடறகரையிலிருந்து மேற்குக் கடற்கரைக்குச் செல்வதற்கு-(மணியடிக்கப்பெற்றது)



பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணியோடு முடித்துக் கொள்ளுங்கள். முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நீங்கள் ஒரு மணி நேரம் தருகிறேன் என்று சொன்னீர்கள். ஆனால்-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தருகிறேன். ஏற்கெனவே முக்கால் மணி நேரம் வேறு பிரச்சினைகளில் போய்விட்டது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அது என்னுடைய குற்றம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணி அளவில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 15 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். பத்து நிமிடங்களிலாவது முடித்துவிடுகிறேன். கிழக்குக் கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரைக்குச் செல்வதற்கு சுமார் 700 கிலோ மீட்டர் சுற்றிச் செல்வதால் ஏற்படும் பொருள் விரயம் தவிர்க்கப்படும். ஒவ்வொரு கப்பலுக்கும் சுமார் 36 மணி நேரப் பயணம் மீதமாகும். தூத்துக்குடிக்கு பன்னாட்டுக் கப்பல்கள் வருவதால் அன்னியச் செலாவணி கிடைக்கும். தனுஷ்கோடியிலே சுமார் 200 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு, தனுஷ்கோடி மீண்டும் சிறப்புச் சுற்றுலாத் தலமாக அமைவதற்கு வசதி ஏற்படும் என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கு N.O.C. கொடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

தமிழ்நாட்டிலே சட்டம்-ஒழுங்கைப் பற்றி இங்கே பேசினார்கள். உடனே முதலமைச்சர் சொன்னார், சட்டம்-ஒழுங்கை சில நடவடிக்கைகளைப் பொறுத்து நாம் முடிவு செய்வதில்லை. மொத்தத்திலே ஒவ்வொரு மாநிலத்திலேயும் எவ்வளவு கொலைகள், எவ்வளவு கொள்ளைகள் போகின்றன என்பதைப் பற்றியெல்லாம் கணக்குப் பார்த்தால், தமிழ்நாடு காவல் துறை முதலிடத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், நேற்றையதினம் பார்த்தால்கூட, ஆறு இடங்களிலே கொள்ளை. அதிலே குறிப்பாக, தியாகராய நகரில் பட்டப் பகலில் 10 மணிக்கு ஒரு நகைக்

கடையிலே புகுந்து 300 சவரன் நகை கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. நேற்று ஒரு நாளிலே சென்னையைச் சுற்றிலும் ஆறு இடங்களிலே கொள்ளை அடித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொள்ளைக்காரர்களை சுட்டு வேண்டுமானாலும் பிடித்து அவர்களைத் தண்டிக்க வேண்டுமே தவிர, இப்படி கொள்ளைகள் நடப்பதற்கு சமுதாயத்திலே அனுமதிக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

காவல் துறையினர் நினைத்தால் இதைச் செய்யலாம். ஆனால், அவர்களாலே முடியாமல் போவதற்குக் காரணம், சில அரசியல் பிரச்சினைகள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதி இருக்கிறார். அவர் தேர்தலிலே போட்டியிட்டார். அந்த நேரத்திலே தேவையில்லாமல் அவரைக் கைது செய்து, சிறைச்சாலையிலே அடைத்தார்கள். அதைப்போல, ரங்கநாதனை அடைத்தார்கள். அதைப்போல கலைஞரை அடைத்தார்கள். அவர்களெல்லாம் அடைக்கப்பட்டார்கள், சிறைச்சாலையிலே இருந்தார்கள் என்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், காவல் துறையினருடைய கவனம் எதிர்க்கட்சியினரை ஒடுக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற நேரத்தில், அவர்களுடைய கவனம் திருடர்கள்மீது, கொலைகாரர்கள்மீது போக முடியவில்லை. ஆகவேதான் இதைத் தவிர்த்து, அதிலே அவர்களுடைய கவனத்தைச் செலுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று மணித் துளிகளிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முக்கியமானதெல்லாம் இருக்குங்க.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் எத்தனையோ வாய்ப்புகள் வரும். பின்னாலே பேசிக்கொள்ளலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பத்து நிமிடத்திற்கு மேலே நான் எடுத்துக்கொள்ள மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்க ஆரம்பித்துவிடுவார்கள்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பத்து நிமிடங்களுக்கு மேலே உங்களிடம் ஒரே ஒரு நிமிடம் கூடக் கேட்கமாட்டேன். ஒரு மணி நேரம் என்று சொன்னீர்கள். அதிலே 40 நிமிடங்கள்கூட ஆகவில்லை. நான் 10 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த De-Limitation Report வந்தது குறித்து தமிழ்நாட்டிலே ஒரு செய்தி பரவலாகப் பேசப்படுகிறது. இதில் அரசாங்கத்திற்கும் இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை. ஆனால், இந்த De-Limitation-ஐப் பொறுத்தவரையிலே, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த தேர்தல் ஆணையம், அங்கேயிருக்கக்கூடிய De-Limitation Commission தான் ஒரு முடிவு எடுக்க வேண்டும். ஆனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு அதிகாரி இரகசியமாக எந்த எந்தத் தொகுதிகளை எப்படிப் பிரிக்க வேண்டும் என்று முடிவெடுத்து, அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்ற ஒரு தகவலை டாக்டர் கிருஷ்ணசாமி நேற்றையதினம் பத்திரிகைகளிலே சொல்லி, அவர் போராடப் போவதாகச் சொல்லியிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரையிலே, அதிலே எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஏனென்றால், அதற்கு ஒரு குழு இருக்கிறது. இங்கே இருக்கிற திரு. பொன்முடி போன்றவர்களெல்லாம் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். உறுப்பினர்களுக்குத் தெரியாமல் அப்படி ஓர் அறிக்கை போவதற்கான வாய்ப்பில்லை. இருந்தாலும், தமிழ்நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருக்குத் தெரிந்த தகவலைத் தெரிவிகக வேண்டும் என்று ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். De-Limitation Commission-க்கும் மாநில அரசுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இது மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் வராது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதைத் தெரிந்துதான் நான் முதலிலேயே சொன்னேன். எங்களுக்கும் அது தெரியும். இருந்தாலும் அப்படி ஒரு பிரச்சாரம் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது விளக்கம் அளித்திருக்கிறார்.

அடுத்து, மது விற்பனைக் கொள்கையிலே இந்த அரசு எப்படித் தடுமாறுகிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம். ஆட்சிக்கு வந்த உடனே ஏலம் போட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. (குறுக்கீடு) வேறு வாய்ப்பு வரும்போது பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை. நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதையாவது கேட்க வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வாக்கியத்தோடு முடித்துவிடுங்கள். அந்த வாக்கியத்தை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை. இரண்டே பிரச்சினைகள்தான் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வாக்கியத்தில் முடித்துவிடுங்கள். மற்ற பிரச்சினைகளைப் பிறகு வாய்ப்பு வரும்போது பேசிக்கொள்ளலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** வாக்கியம் இல்லை, வாக்கியம் இல்லை. இதிலே நஷ்டம் எவ்வளவு ஏற்பட்டிருக்கிறது என்றால்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கால் மணி நேரத்திற்கு மேலாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். முதலமைச்சருடைய பதிலுரை இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதை அவரே பேசி முடித்துவிடலாம். (குறுக்கீடுகள்) அவரே பேசி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** ஒரு பிரதான எதிர்க்கட்சிக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாஸ்மாக் மூலம் கடை நடத்துவது என்று இந்த அரசு கடந்த ஆண்டு முடிவெடுத்தது. அதற்கு முன்பெல்லாம் தனியார்கள் ஏலம் எடுத்தார்கள். இப்போது டாஸ்மாக் கடை நடத்துவதன்மூலம் இந்த அரசுக்கு லாபம் வந்திருக்க வேண்டும். ஆனால், உண்மையில் எனக்குக் கிடைத்த புள்ளிவிவரப்படி - இது அரசாங்கத்திலிருந்து கொடுத்த விவரங்கள் Finance Accounts *2003-2004*.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேச்சை நிறைவு செய்யுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) இல்லை, மற்ற பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பிறகு பேசலாம். (குறுக்கீடு) இல்லை, அவர்களுக்கு நேரம் அதிகம் தேவைப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், முன்பு அரசு எடுப்பதற்கு முன்பாக..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சொன்ன கருத்தில் உண்மை இல்லை. டாஸ்மாக்கிற்கு இந்தக் கடைகளை எடுத்துக்கொள்வதற்கு முன்பாக ஒரு மாதத்திற்கு 12 இலட்சம் கேஸ்கள் விற்பனையாகிக் கொண்டிருந்தன. அதிகபட்சம் 13 இலட்சம் கேஸ்கள்தான் விற்பனையானது. ஆனால், எல்லாக் கடைகளையும் டாஸ்மாக் எடுத்துக்கொண்ட பிறகு இன்றையதினம் 18 இலட்சம் கேஸ்கள் வரை விற்பனையாகின்றன. ஆகவே இலாபம் இருக்கிறதா, இல்லையா என்பதை இதிலிருந்தே புரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி, உரையை நிறைவு செய்யுங்கள்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** ஒரே செகண்ட். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 772 கோடியே 82 இலட்ச ரூபாய் டாஸ்மாக்கிற்கு, டாஸ்மாக் கடைகளை எடுத்தபிறகு இலாபம் வந்திருக்கிறது. இது ஆதாரபூர்வமானது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதையும் முதலமைச்சருக்குத் தருகிறேன். இது அரசாங்கம் கொடுத்த புள்ளிவிவரம்தான். (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் சொல்வது excise duty மூலம் இந்த ஆண்டு...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவாக சொல்லப்பட வேண்டுமென்றால் டிசம்பர் 2002 முதல் டிசம்பர் 2003 வரை 4151.02 கோடி ரூபாய் அரசுக்கு வருவாயாகக் கிடைத்தது. அதில் விற்பனை வரி 1966.65 கோடி ரூபாயும், ஆயத் தீர்வை மூலம் 1504.86 கோடி ரூபாயும், சிறப்பு உரிமக் கட்டணம் மற்றும் பார் உரிமக் கட்டணம் மூலம் 679.51 கோடி ரூபாயும் அரசுக்கு வருவாயாக 2002 டிசம்பரிலிருந்து 2003 டிசம்பர் வரை கிடைத்தது. ஆனால், டாஸ்மாக் கடைகள் மூலம் அரசு கடைகளை எடுத்துக்கொண்டதற்குப் பின்னால் டிசம்பர் 2003 முதல் டிசம்பர் 2004 முடிய 4,882.30 கோடி ரூபாய் அரசுக்கு வருவாயாகக் கிடைத்திருக்கிறது. அதில், விற்பனை வரியின் மூலமாக 2471.08 கோடி ரூபாயும், ஆயத் தீர்வை மூலமாக 2411.22 கோடி ரூபாயும் அரசுக்கு மொத்தம் 4882.30 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. அதில், 2002-லிருந்து 2003 வரை கிடைத்த அரசு வருவாயையும், 2003-லிருந்து 2004 வரை சில்லறை கடைகளை டாஸ்மாக் மூலம் அரசு எடுத்துக்கொண்டதற்குப் பின்னால் கிடைத்த அரசு வருவாயையும் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டால், கூடுதல் வருவாயாக அரசுக்கு 731.28 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தயவுசெய்து நான் சொல்லிவிடுகிறேன் கேளுங்கள், Finance Accounts, தமிழ்நாடு அரசு கொடுத்ததுதான் இது. இப்போது நான் முதலமைச்சரிடம் கொடுக்கிறேன். அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், excise duty மூலம் 2002-2003-லே 2113.6 கோடி ரூபாய் வரவு வந்தது. 2003-2004-லே டாஸ்மாக் எடுத்துக்கொண்டதற்குப் பின்னர் 1657 கோடி ரூபாய்தான் வருமானம் வந்திருக்கிறது. எனவே, 456 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று உங்களுடைய கணக்கு இருக்கிறது. இதைத் தருகிறேன். தாங்கள் இதை முதலமைச்சரிடத்திலே கொடுங்கள். உங்களுடைய...

பிற்பகல் 1-05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை



தந்துகொண்டிருக்கிறார். நான், இந்த அவையிலே படித்ததுதான் சரியான, உண்மையான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எது உண்மை என்பதை பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன், அதைப் பார்த்துக்கொள்ளுங்கள். இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். இன்னும் நிறைய பேச வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் சொல்கிற புள்ளிவிவரத்தைத்தான் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆட்சியிலே இருப்பவர்கள் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால், அப்பொழுது ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதையும் இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உங்களிடத்திலே கொடுத்திருப்பது ஆட்சியிலே இருக்கக்கூடியவர்கள் கொடுத்த அந்த விவரங்கள்தான். நான் தயாரித்ததா அது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அரசை நடத்திக்கொண்டிருப்பவர்கள் அவர்கள். துறையினுடைய அமைச்சர் அவர். அவர் ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் அதை மறுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நீங்கள் அடுத்த பிரச்சினை குறித்துப் பேசுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் அதை மறுக்கவில்லை. தங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் கொடுத்ததையும் நான் அவரிடம் கொடுத்துவிடுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதையும் கொடுங்கள். அதைப்போல, இறுதியாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைவிட்டு இறங்கியதற்குப் பிறகு, முதலமைச்சர் அவர்கள் கஜானா காலி என்று சொன்னார்கள். நான் களஞ்சியம் நிரம்பியிருக்கிறது என்று சொன்னேன். அப்போது

முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதுவும் புழுத்துப் போன அரிசி என்று சொன்னார்கள். உடனே, நம்முடைய பொன்முடி போன்றவர்கள், அந்த godown-லே போய்ப் பார்த்து, நல்ல அரிசி என்று காட்டினார்கள், கைது செய்யப்பட்டார்கள், வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்தப் பிரச்சினைக்குப் போகவில்லை. ஆனால் என்ன நடந்திருக்கிறது என்றால், 1,25,000 டன் அரிசி, உண்மையிலேயே நல்ல அரிசி, இன்றையதினம் ஏலம் விடப்பட்டு, இந்த அரசாங்கத்திற்கு 75 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கான வழக்கு நீதிமன்றத்திலே தொடுக்கப்பட்டது. நீதிபதி அவர்கள் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்த சம்பந்தப்பட்ட அதிகாரி 31-1-2005-ல் ஓய்வு பெறுகிறார் என்று சொன்னபோது, இப்போது ஓய்வு பெற்றிருந்தாலும், அவர் இந்த வழக்குக்கு உட்பட்டுத்தான் விடுவிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட முறைகேடுகளுக்கு, இந்த அரசு...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாக, திட்டவட்டமாக எதுவும் சொல்லாமல், 75 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது பொத்தாம் பொதுவாக என்று அல்லாமல், வேறு எவ்வாறு அர்த்தமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும். எவ்வகையான முறைகேடுகளும் நடைபெறாமல், நல்லமுறையிலே மக்களுக்கு நல்லாட்சி செய்துகொண்டிருக்கிற அரசின்மீது, தவறுதலான ஒரு குற்றச்சாட்டை உருவாக்க முயற்சிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்வது, 1,25,000 டன் அரிசி, 12 ரூபாய் என்று வாங்கி, ஆறு ரூபாய்க்கும் குறைவாக விற்கப்பட்டிருக்கிறது, டெண்டரில். அதில் முறைகேடு நடந்திருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. நீதிபதி அந்த அதிகாரியை ஓய்வுபெற அனுமதிக்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறார். அந்த ஆணையைக்கூட, காலையிலே,...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரி அவர்கள் ஏற்கெனவே 31-1-2005-ல் ஓய்வு பெற்றுவிட்டார் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, தவறு செய்துவிட்டு ஓய்வு பெற்றுவிட்டால் அரசாங்கம் அதைப் பார்த்துக்கொண்டிருக்கலாமா? அதனால்தான் நீதிமன்றமே சொல்லியிருக்கிறது..

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** நீங்கள் தவறே நடைபெறாத ஒன்றை நடந்துவிட்ட தவறாக, நீங்களாக அனுமானத்தில் சொல்லும்போது, ஓய்வு பெற்றுவிட்ட ஒரு அதிகாரி ஓய்வு பெறவில்லையென்று இந்த மாமன்றத்திலே தவறான தகவலைச் சொல்வது எவ்வகையிலே நியாயம் என்பதை பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) அந்த அதிகாரி ஓய்வு பெற்றுவிட்டார். ஓய்வு பெற்ற அதிகாரி, ஓய்வு பெறவில்லையென்பது எவ்வாறு நியாயம்? (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முடித்துவிடுங்கள். இத்தோடு முடித்துவிடுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரேயொரு வினாடி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேச்சை நிறைவுபடுத்தி விடட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முடித்துவிடுகிறேன். ஒரேயொரு வினாடி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஓய்வு பெற்ற தேதி என்ன என்பதை அமைச்சரவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நானே சொல்லிவிட்டேன். அவர் ஓய்வு பெற்றதாக நீதிமன்றத்திலே அறிவித்த தேதி 31-1-2005. ஆனால் நீதிமன்றம், 2 ஆம் தேதி கொடுத்த தீர்ப்பில் அவர் ஓய்வு பெற்றிருந்தாலும்கூட, ஓய்வு பெற்றதற்கான சலுகைகளைக் கொடுக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதைத்தான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இறுதியாக, நேரம் இல்லாத காரணத்தால் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏதோ வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடந்துவிட்டது. எனவேதான், எதிர்க்கட்சிகள் 40 இடங்களிலேயும் வெற்றி பெற்றார்கள் என்று சொன்னார்கள். நான் இந்த கவர்னர் உரையைப் படித்தேன். 5 ஆண்டு காலமாக தொடர்ந்து படித்து வருகிறேன். இறுதியாகச் சொல்கிறேன். இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே மட்டுமல்ல, வரவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலிலேயும் 234 இடங்களிலேயும் எங்கள் கூட்டணிதான் வெற்றிபெறும் என்பதைத் தெரிவித்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இந்த அளவில் எனது கருத்துகளை எடுத்துக்கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைப் படைக்கின்ற சாதனைகளைக் கடந்த ஆண்டில் தமிழக அரசு படைத்திருக்கிறது. குறுகிய காலத்தில் எத்தனை எத்தனை சாதனைகளைப் படைக்க முடியும் என்பதற்கு நாட்டிற்கு நாம் நல்லதொரு எடுத்துக்காட்டாய் விளங்குகிறோம். எந்தச் சாதனையும் எளிதாக நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறு நிறைவேற்ற மற்றவர்கள் விடவும் இல்லை. அளவிலாத பொறுமை, ஓய்வு இல்லாத உழைப்பு, முடிவு இல்லாத முயற்சி, இந்த மூன்றால், முடிக்க முடியாது என்று பிறர் முடிவு செய்தவற்றை நாம் முடித்துக் காட்டியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்ப்புகளே நமக்கு ஊக்கம் அளித்திருக்கின்றன. ஏளனங்களே நமக்கு உரமூட்டியிருக்கின்றன. ஏகடியங்களே நமக்கு வலிமை அளித்திருக்கின்றன. நாம் அயரவில்லை. அயர மாட்டோம். எதையும் தாங்கும் இதயம் என்று பேரறிஞர் அண்ணா சொன்னாரே, அந்த இதயம் நமக்கே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கை இடர்களையும், செயற்கைத் தடைகளையும் நாம் தாண்டினோம். 2004 ஆம் ஆண்டு ஒரு விசித்திரமான ஆண்டு. பல வெற்றிகளைத் தந்த இந்த ஆண்டு விடைபெறும் நேரத்தில் நம்மை சோகத்திலும் ஆழ்த்தியது. சுனாமி ஆழிப் பேரலைகளின் ஊழித் தாண்டவத்தால் ஏற்பட்ட இழப்புகள் எத்தனை, எத்தனை! எத்தனை இழப்புகளையும் ஈடுசெய்யலாம். எத்தனை அழிபாடுகளையும் மறு நிர்மாணம் செய்துகொள்ளலாம்.



ஆனால், அன்பிற்கினிய நமது மக்களை இழந்தோமே, அந்த இழப்பை எப்படி ஈடுசெய்வது? மறக்க முடியுமா அந்த மாபெரும் அழிவை? கடலோரத் தமிழகத்தை சுனாமி சின்னாபின்னம் ஆக்கியது ஒரு பக்கம். எந்தப் பக்கமும் நகர முடியாதபடி, ஆக்கப் பணிகளில் அக்கறையில்லாத அடாவடித்தனங்களின் தடை ஒரு பக்கம். இவற்றிற்கு நடுவே நாம் படைத்த சாதனைகள், இதயம் இருப்போரால் பாராட்டப்படுகின்றன. ஆனாலும்கூட, இன்னும் சில பேரால், இவற்றை ஒப்புக்கொள்ள முடியவில்லை. நல்லதை நடக்க விடாமல் தடுக்க முயன்றோர், நன்மையை தீமை என்று தலைகீழாகப் பார்த்து தர்க்கம் செய்தோர், நாளொரு பொய்யும், பொழுதொரு புளுகுமாக அவதூறு பரப்பியோர், இவர்களை எல்லாம் தாண்டித்தான் நாம் சாதனை படைத்தோம் என்பதை நாடு அறியும். நல்லவர்கள் அறிவார்கள்.

இந்தியாவின் அமைதிப் பூங்கா எது? தமிழகம்தானே, இது எல்லோரும் அறிந்தது. ஆனால் அமைதியை அராஜகம் என்று அர்த்தப்படுத்திக்கொள்கிற அரசியல் தலைவர்களும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். எதற்காகப் போராடுகிறோம் என்பதே தெரியாமல் போராட்டத்திற்காகவே போராட்டம் நடத்துகிற பொறுப்பற்ற மனிதர்களுக்கும் தமிழகத்தில் பஞ்சம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இயற்கை இடர்களையும், செயற்கைத் தடைகளையும் தாண்டிய வளர்ச்சி வரலாறே இந்த ஆட்சியின் வரலாறு என்பதை இந்தப் பேரவையில் கூறுவதில் பெருமிதம் அடைகிறேன். எனக்கும் எனது அரசுக்கும் ஒரே குறிக்கோள், அது தமிழக முன்னேற்றம். இந்தியாவில் முதல் மாநிலமாக தமிழகத்தை ஆக்குவோம் என்பது உணர்ச்சி முழக்கம் அன்று. கண் எதிரே உருவாகி வரும் சரித்திரம். இதைக் காண முடியாதவர்களுக்காக நான் இரக்கப்படுகிறேன். காண மாட்டேன் என்று அடம்பிடிப்போர்களுக்காக நான் அனுதாபப்படுகிறேன். கோடானுகோடி மக்களின் நம்பிக்கைக்குரியது இந்த அரசு. அந்த நம்பிக்கை தருகிற சக்திதான் எங்களது அசைக்க முடியாத வலிமை என்பதை உறுதிப்படத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

சுனாமி நிவாரணப் பணிகள் - 26-12-2004 அன்று தமிழகம் இதுவரை சந்தித்திராத சுனாமி பேரலைகள், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலுள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களைத் தாக்கியதில் ஏறத்தாழ 8 ஆயிரம் பேர் தங்களது இன்னுயிரை இழந்ததுடன், இலட்சக்கணக்கான குடும்பங்கள் தங்களது வீடுகளையும் உடைமைகளையும் மற்றும் தங்களது வாழ்வாதாரங்களையும் முற்றிலுமாக

இழந்துவிட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் இந்த இயற்கைச் சீற்றத்திலிருந்து மீண்டு தங்கள் இயல்பு வாழ்க்கையை மீண்டும் அடைய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மூன்று கட்டங்களாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது முதல் இரண்டு கட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டைப் போலவே, சுனாமியால் பாதிக்கப்பட்ட பிற நாடுகளிலும், பிற மாநிலங்களிலும் முதற்கட்டப் பணிகள் முடிக்கப்படாமல், அவை போராடிக்கொண்டிருந்த நேரத்தில், தமிழ்நாட்டில் இவை முடிக்கப்பட்டு, உடனடி நிவாரண உதவி வழங்கும் இரண்டாம் கட்டப் பணிகளை 30-12-2004 அன்றே நாம் தொடங்கிவிட்டோம்.

பிற்பகல் 1-15

சுனாமி பேரலைகளின் தாக்குதலுக்கு இலக்கான மக்கள் இயல்பு வாழ்க்கையை அடைவதற்குத் தேவையான பல்வேறு உதவித் தொகுப்புகளை நான் தொடர்ந்து வழங்கியுள்ளேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியாக பல்வேறு உதவித் தொகுப்புகளின்கீழ் இதுவரை மொத்தம் 398.37 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை மீண்டும் பெற்றிடும் வகையில், 461 கோடி ரூபாய் மதிப்பிலான உதவித் தொகுப்பை வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

தற்போது, நாம் மேற்கொள்ள வேண்டிய மிகப் பெரும் பணி, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களும் மற்றும் ஏனையோரும் அவர்களது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்யும் மூன்றாம்கட்டப் பணிகளாகும். இதன்படி, அவர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத் தரவேண்டும்; வாழ்வாதாரங்களை அவர்கள் திரும்பப் பெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரசுடன் அனைத்துத் தரப்பினரும், அரசுசாரா அமைப்புகளும் இணைந்து இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.

மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களைத் திரும்பப் பெற்றிட மானியம் மற்றும் கடனுடன் இணைந்த நிவாரண உதவி வழங்கப்படுவது, மீனவர்கள் மனதில் முழுத் திருப்தியை ஏற்படுத்தவில்லை. ஆகவே, மீனவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை 100 சதவீதம் முழு மானியத்துடன் வழங்க வேண்டும் என்று நான் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.



நான் 4-2-2005 அன்று இந்த அவையில் மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்தின் 31-1-2005 ஆம் தேதியிட்ட ஆணை 30-1-2005 அன்று நான் பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்கு ஒரு பதிலாக அமைந்துள்ளது என்றும், இந்த ஆணையில் மீனவர்கள் மறுவாழ்விற்காக வழங்கப்பட்டுள்ள மொத்த மானியத் தொகையும் மாநில அரசுக்கே வழங்கப்படும் என்று குறிப்பிட்டு இருந்ததையும் தெரிவித்தேன்.

30-1-2005 அன்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்கு பாரதப் பிரதமரின் 31-1-2005 தேதியிட்ட பதில் கடிதம் 4-2-2005 அன்று மாலைதான் அஞ்சல் தபால் மூலம் எனக்குக் கிடைக்கப்பெற்றது. அந்தக் கடிதத்தில், 31-1-2005 தேதியிட்ட உள் துறை அமைச்சகத்தின் ஆணைக்கு நேர்மாறான ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, கடன் மற்றும் மானியம் வழங்கப்படும் இனங்களில் அவை வங்கிகள் மூலமாகவே வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதத்திற்கு நான் 4-2-2005 அன்றே பதில் எழுதியுள்ளேன். இதில், நான் இந்த மாமன்றத்தில் 3-2-2005 மற்றும் 4-2-2005 அன்று தெரிவித்துள்ள அனைத்துக் கருத்துகளையும் எடுத்துக்கூறி, சுனாமி நிவாரணப் பணிகளை முழு வீச்சுடன் செயல்படுத்த வேண்டிய இத்தருணத்தில் தேவையில்லாமல் இப்பிரச்சினை சர்ச்சையாக ஏன் வளர்க்கப்படுகிறது என்பது புரியவில்லை என்றும், மத்திய உள் துறை அமைச்சகத்தின் 31-1-2005 தேதியிட்ட ஆணையின்படி மாநில அரசுக்குத்தான் மொத்த மானியத் தொகையும் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன். மேலும், இந்தக் கடிதத்தில் 4-2-2005 அன்று மத்திய அமைச்சரவைச் செயலாளர் விடுத்த அழைப்பின்பேரில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் இதர அலுவலர்கள் டெல்லியில் கலந்துகொண்ட கூட்டத்தில் மீனவர்களுக்கு வழங்கும் உதவித்தொகை முழு மானியமாக வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதோடு, மொத்த மானியத் தொகையும் மைய அரசின் ஆணைப்படி மாநில அரசுக்கே வழங்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினர்.

எங்கள் கோரிக்கை, மீனவர்களுக்கு வழங்கக்கூடிய உதவித்தொகை முழு மானியமாக இருக்க வேண்டும் என்பதும் வழங்கக்கூடிய மானியத் தொகை மாநில அரசின் மூலமாகத்தான் வழங்கப்பட வேண்டும் என்பதும் ஆகும். ஒரு வேளை, மானியத் தொகையுடன் வங்கிக் கடன் பெற வேண்டிய அவசியம் நேரிட்டால், அப்பொழுதும்கூட அந்த மானியத் தொகை மாநில அரசின் மூலமாகத்தான் வழங்கப்பட வேண்டும்

என்றும் நான் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். நான் மீண்டும் கூற விரும்புவது, தேவையில்லாமல் இதனை ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக மேலும் வளர்க்கக்கூடாது என்பதும், நான் 4-2-2005 அன்று விடுத்துள்ள கோரிக்கையை மாண்புமிகு பாரதப் பிரதமர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

தமிழகம் சந்தித்துள்ள இந்த இயற்கைச் சீற்றம் தமிழக மக்கள் இதுவரை கண்டும் கேட்டும் இராத ஒரு பேரிடர் ஆகும். இதில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு, அவர்களது இயல்பு வாழ்க்கையை மீண்டும் நிலைநிறுத்தித் தர எனது அரசு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசின் துறைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதல் இறுதி நிலையில் உள்ள துப்புரவுப் பணியாளர்கள் வரை உள்ள அனைத்து அலுவலர்களும், பணியாளர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி வருகிறார்கள்.

பிற்பகல் 1-20

சுனாமி பேரலைகளால் தாக்குண்டு இறந்தவர்களின் உடல்களை - மணலிலும், புதர்களிலும், இடிபாடுகளிலும் சிக்கிக் கிடந்த சடலங்களை மீட்டு அடக்கம் செய்யும் பணியில், மாநிலம் முழுவதும் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் சிறப்பு ஊராட்சிகளில் பணிபுரிந்துவரும் 4,799 துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் வழக்கமாகத் தாங்கள் ஆற்றும் கடமைக்கு அப்பாற்பட்டு மிகுந்த சேவை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி உள்ளனர். இதனைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில், அவர்கள் ஒவ்வொருவருக்கும் 2,500 ரூபாய் ஊக்கத்தொகை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் இந்த 4,799 துப்புரவுப் பணியாளர்களுக்கும் மொத்தம் 1.2 கோடி ரூபாய் வழங்கப்படும். நிவாரணப் பணிகளை மேற்கொள்வதிலும் நிவாரண உதவிகளை வழங்குவதிலும் அரசியல் என்பது கிஞ்சித்தும் இல்லாத வகையில் செயல்பட்டு வருகிறோம். எனவே, தேவையற்ற அரசியல் சாயம் பூசி அந்தப் பணிகளைக் கொச்சைப்படுத்திட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கட்சி மாச்சரியங்களை மறந்து, மன வேறுபாடுகளைத் துறந்து, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் மகத்தான பணியில் அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



## வீரப்பன் கொடுமைக்கு முடிவு

வீரத்திலும் தீரத்திலும் சிறந்தது தமிழ்நாடு. இந்த உண்மை, வரலாற்றில் காலந்தோறும் நிரூபிக்கப்படுகிறது. அவ்வாறு அண்மையில் நிரூபிக்கப்பட்ட நிகழ்ச்சிதான் வீரப்ப வதம். வன வளங்களைக் கபளீகரம் செய்த பயங்கரக் காட்டுக் கொள்ளைக்காரன் - மனித உயிர்களை மலிவாகக் கருதிய கொலைகாரன் - யானைகளை இரக்கமின்றிக் கொன்று குவித்த அசுரன் - ஈவு இரக்கம் அறியாத வழிப்பறிக் கொள்ளையன் - தமிழ்நாட்டை மட்டும் அல்லாமல் கர்நாடகாவையும் கடந்த 20 ஆண்டுகளாகப் பீடித்திருந்த இழிவான சாபக்கேடு - இத்தகைய இழிவுகளின் இருப்பிடமாய்த் திகழ்ந்த வீரப்பனின் கொடுமைகளுக்கெல்லாம் 18-10-2004 அன்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தமிழக அதிரடிப்படை மேற்கொண்ட துணிவான சாகச நடவடிக்கையால் அன்றையதினம் வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். 20 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட மனித வேட்டை இதன்மூலம் ஒரு முடிவுக்கு வந்தது.

அசாதாரண ஆற்றலோடு, அசாதாரணப் பொறுமையுடன், அசாதாரண விவேகத்தின் துணையோடு, அசாதாரண வீரத்தால், அசாதாரண வெற்றியைப் படைத்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் வீட்டுமனை, தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் ஆகியவற்றை நான் மகிழ்ச்சிப் பெருக்கோடு அளித்தேன். மேலும், சிறப்பு அதிரடிப் படையுடன் இணைந்து பணியாற்றிய வனத் துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு உரிய பரிசுகளை வழங்கியுள்ளேன். இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் வீரப்பனை வீழ்த்திய அதிரடிப் படை வீரர்களுக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர், மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர்களும் பாராட்டு தெரிவித்துள்ளனர் என்ற செய்தியை இம்மாமன்றத்தில் பகிர்ந்துகொள்வதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பு அதிரடிப்படை வீரர்களுக்குப் பாராட்டும், பரிசும் வழங்கக்கூடாது என்று உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட பொது நல வழக்கில் 2-2-2005 அன்று தீர்ப்பு வழங்கிய மாண்புமிகு நீதியரசர் திரு. எம். கற்பக விநாயகம் மற்றும் நீதியரசர் திரு. ஏ.ஆர். ராமலிங்கம் ஆகியோர்—

"We also applaud the action of the Government, in arranging the function to give away the awards, in appreciation of the services rendered by the Police personnel. In our view, the efforts made by the Tamil Nadu STF, which proved the success, has gained a good name not only for Tamil Nadu Police, but has secured fame and name for whole India, at the International level.." (Thumping of desks)

"..In our view, the Tamil Nadu STF deserves every appreciation not only by the Government of Tamil Nadu, but also the Government of India" என்று கூறியுள்ளனர்.

பிற்பகல் 1-25

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வீழ்த்திய சாதனை சாதாரண சாதனை அல்ல. அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய சாதனை. ஆனால், இந்தச் சாதனைக்கு மத்திய அரசிடமிருந்து உரிய பாராட்டு கிடைக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. வீரப்பன் தமிழ்நாட்டை மட்டுமே பீடித்திருந்த கேடு அல்ல; இரண்டு மாநிலங்களைப் பிடித்து இருந்த சாபக்கேடு அவன். ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே அவன் ஒரு களங்கமாக இருந்தான். அப்படிப்பட்ட ஒரு தீயவனை திட்டமிட்டு ஒழித்துக்கட்டிய தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு அரசின் காவல் துறையையும், காவல் துறை அதிகாரிகளையும் மத்திய அரசு பாராட்ட வேண்டாமா? ஆனால், அதற்கு நேர்மாறாக மத்திய அரசு செய்தது என்ன?

வீரப்பனை வீழ்த்திய இந்த அரிய சாதனையை நிகழ்த்திய தமிழக காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு ஒரு படி பதவி உயர்வை நான் வழங்கினேன். இந்தியக் காவல் பணி, அதாவது, I.P.S. அந்தஸ்தில் உள்ள அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் பதவி உயர்வை மத்திய அரசுதான் உறுதி செய்ய வேண்டும். எனவே, அதிரடிப் படைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்களுக்கு காவல் துறை தலைமை இயக்குநர் D.G.P. என்ற நிலைக்கும்; திரு. செந்தாமரைக்கண்ணன் மற்றும் திரு. சண்முகவேல் ஆகியோருக்கு காவல் துறை துணைத் தலைவர் D.I.G. என்ற நிலைக்கும் பதவி உயர்வு வழங்கி அதற்கான ஒப்புதல் வழங்க மத்திய அரசை கேட்டுக்கொண்டோம். ஆனால், மத்திய உள் துறைச் செயலர் தனது 4-1-2005 நாளிட்ட கடிதத்தின் மூலம் இந்தப் பதவி உயர்வுக்கான பரிந்துரைகளை நிராகரித்து தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலருக்கு கடிதம் எழுதி உள்ளார். அவர்களது பதவி உயர்வு ஆணைகளை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார். அதன்பின்னர் நான் மத்திய



உள் துறை அமைச்சருக்கு 27-1-2005 அன்று எழுதிய கடிதத்திற்கு இதுவரை எந்தப் பதிலும் பெறப்படவில்லை.

தங்களது உயிரைத் துச்சமாக மதித்து கருத்தூன்றி கடமை ஆற்றியவர்களுக்குத் தக்க மரியாதையும், கௌரவமும் அளிக்க வேண்டியது நமது கடமை ஆகும். அவ்வாறு செய்யவில்லை என்றால், அவர்களது உண்மை உழைப்பை அவமானப்படுத்துவதாக ஆகிவிடும். தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதிலும் உள்ள காவல் துறையினருக்கு மனச்சோர்வு அளிப்பதாக இது அமைந்துவிடும். மாநில அரசு பதவி உயர்வு அளித்து அவர்களுக்கு உரிய மரியாதையை வழங்கிய நிலையில் மத்திய அரசு அதனைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கூறுவது, உணவு பரிமாறப்பட்ட பந்தியில் உட்கார்ந்த ஒருவரை அவர் சாப்பிட எத்தனிக்கும் தருணத்தில் எழுப்பி வெளியேற்றுவதற்குச் சமம் ஆகும். இது மிகவும் வருந்தத்தக்கதும், துரதிருஷ்டவசமானதும் ஆகும். சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதியரசர்களே மத்திய அரசு, தமிழ்நாடு அதிரடிப் படை வீரர்களுக்கு சிறப்பு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டதை மத்திய அரசு கருத்தில்கொள்ள வேண்டும். இப்போதாவது மத்திய அரசு இந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு உரிய பதவி உயர்வு அளித்து தக்க ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை நிகழ்த்திய அதிரடிப் படை வீரர்கள் அனைவராலும் பாராட்டப்பட வேண்டும். ஆனால், மத்திய அரசோ இதுபற்றி சிந்தனை செய்ததாகவே தெரியவில்லை. மத்திய உள் துறை அமைச்சர் திரு. சிவராஜ் பாட்டீல் அவர்கள் ஒருவரைத் தவிர இந்தியாவின் மிக உயர்ந்த பதவிகளில் உள்ள வேறு எவரும் மத்திய அரசைச் சார்ந்த வேறு எவரும் பாராட்டுக் கடிதமும் அனுப்பவில்லை, குறைந்தபட்சம் தொலைபேசியில்கூட வாழ்த்தோ, பாராட்டோ தெரிவிக்கவில்லை.

வீரப்பனை ஒழித்துக் கட்டி சாதனை படைத்த அதிரடிப்படைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து இந்தச் சாதனையைப் படைக்கக் காரணமாக இருந்த காவல் துறை அதிகாரிகளுக்கும் இந்த ஆண்டு தேசிய விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பாக நான் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தேன். அதிரடிப் படைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்களுக்கு 'பத்மஸ்ரீ' விருதும், திரு. செந்தாமரைக்கண்ணன் அவர்களுக்கு 'அசோக சக்ரா' விருதும், அதிரடிப் படை வீரர்கள்

திரு. எஸ். வெள்ளதுரை, திரு. எம். சரவணன், திரு. வி. குமரேசன் ஆகியோருக்கு 'கீர்த்தி சக்ரா' விருதும் வழங்கிட வேண்டும் என்று பரிந்துரைத்து எனது அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது. ஆனால் மத்திய அரசு, குடியரசு தினத்தன்று அறிவித்த விருதுகள் பட்டியலில் அதிரடிப் படை வீரர்கள் எவரது பெயரும் இடம் பெறவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. குடியரசு தின விருதுகள் யார் யாருக்கோ வழங்கப்பட்ட நிலையில், அதிரடிப் படை வீரர்கள் விருதுகளுக்கு தகுதியற்றவர்களா என்பதை இந்த மாமன்றம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வீரப்பனை வீழ்த்திய சாதனை தமிழகக் காவல் துறை வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படும். இந்தச் சாதனையை நிகழ்த்த துணைபுரிந்த அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை இந்தப் பேரவையில் மறுபடியும் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** வீராணம் திட்டம். தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரின் தாகத்தைத் தணிக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்கும், அதனை நிறைவேற்ற மேற்கொண்ட தளராத முயற்சிக்கும் கிடைத்த தனிப்பெரும் பரிசுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி.

அயராத உழைப்பும், குலையாத உறுதியும் ஒன்று சேர்ந்தால் இயலாத செயல் என்ற ஒன்று எப்போதும் இல்லை என்ற தத்துவத்திற்குத் தக்கதொரு எடுத்துக்காட்டுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி. சென்னை மாநகரில் ஏற்படக்கூடிய பூதாகரமான தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டுமெனில் கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்பதை 1993 ஆம் ஆண்டிலேயே நான் உணர்ந்த காரணத்தால், அதற்கு ஒரு தீர்வுகாண நான் புதிய வீராணம் திட்டத்தை உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த முனைந்தேன். தமிழகத்தில் 1996-ல் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க. குறுகிய அரசியல் மாச்சரியங்களுக்காக இத்திட்டத்தைக் கைவிட்டது.



2003 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் புதிய வீராணம் திட்டப் பணிகளை நான் தொடங்கி வைத்தேன். அப்போது எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் 'வீராணம் திட்டம் வீணான திட்டம்' என்று வீம்பு பேசிக்கொண்டிருந்தார்கள். இவர்களது இடையூறுகளைத் தகர்த்து, இடர்ப்பாடுகளைத் தவிடுபொடியாக்கி புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால்தான் 2004 ஆம் ஆண்டின் கோடையில் சென்னை மாநகரிலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டது.

பண்ருட்டி-நெய்வேலி ஊற்றுப் படுகைகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம் 2004 ஜுன் மாதத்திலிருந்து தண்ணீரின் அளவைப் படிப்படியாக அதிகரித்து நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் அளவில் சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கப்பட்டது. இது சென்னை மாநகர மக்களின் துயரைப் பெருமளவுக்குத் தணித்தது.

13-10-2004 அன்று முதல் வீராணம் ஏரியில் இருந்து மட்டுமே நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுத்து சென்னைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கல்லணையில் இருந்து கூடுதலாக விடுவிக்கப்படும் தண்ணீர் சென்னை மாநகருக்கு இந்தத் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. ஆகையால் வீராணம் ஏரி ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை.

கோடைக் காலத்தில் வீராணம் ஏரியில் நீரின் அளவு குறையும்போது கொள்ளிடம் ஆற்றுப் படுகையில் அமைக்கப்பட இருக்கின்ற 6 நீர் சேகரிக்கும் கிணறுகளிலிருந்து புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 150 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்க வகை செய்யும் வகையில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீராணம் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தப் புதிய வீராண விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுவதால் விவசாயிகளுக்கோ, கொள்ளிடம் பகுதியில் உள்ள நிலத்தடி நீரின் அளவுக்கோ எந்தவித பாதிப்பும் நேராது என்பதைப் புள்ளி விவரங்களுடன் கடந்த 2, 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் இந்த அவையில் நடந்த விவாதத்தின்போது நான் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளேன்.

விவசாயிகள் நலனைக் காப்பதில் வேறு எவரைக் காட்டிலும் அதிக அக்கறை கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு, விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாத வகையில்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்துள்ளது என்று நான் உறுதியிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள காவிரிப் பாசன விவசாயிகளிடையே திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்தை ஒரு சிலர் மேற்கொண்டதால் ஏற்பட்ட அச்சத்தைப் போக்கிட, தற்போது கல்லணைக்குக் கீழே மூன்று இடங்களில் மொத்தம் 75 கோடி ரூபாய் செலவில் மூன்று தடுப்பணைகள் கட்டவும், டி. பழூர் மற்றும் திருமானூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்கவும் மற்றும் கொள்ளிடம் ஆற்றில் கல்லணை முதல் கீழணை வரை மணல் எடுக்கப்படுவதை நிறுத்தவும் நான் ஆணையிட்டுள்ளேன். எனவே, அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வகையான தவறான வழிகாட்டுதலுக்கும் ஆட்பட்டுவிடாமல் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்திட முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இந்த அவையின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் நலன். கடந்த மூன்று ஆண்டுகளில் நிலவிய கடும் வறட்சி காரணமாகவும், காவிரி நீரில் நமக்குரிய பங்கை கர்நாடக அரசு விடுவிக்க மறுத்த காரணத்தாலும், தமிழகத்தில் வேளாண்மை உற்பத்தி பெரும் அளவில் பாதிக்கப்பட்டது. 1-6-2004 முதல் 3-2-2005 வரை கர்நாடக அரசு விடுவித்திருக்க வேண்டிய 196.331 டி.எம்.சி. அடி தண்ணீருக்குப் பதிலாக 158.271 டி.எம்.சி. அடி தண்ணீரே மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த நீரும் காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெருமழை பெய்து கபினி அணை நிரம்பிய காரணத்தால்தான் நமக்குக் கிடைத்துள்ளது. உரிய நேரத்தில் கர்நாடக அரசு காவிரி நீரை விடுவிக்காத காரணத்தால் குறுவைச் சாகுபடியை நாம் இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். காவிரி நதிநீர் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநிறுத்தவும் தமிழக விவசாயிகளின் நலனைக் காப்பாற்றுவதிலும் எனது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்துவரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-35

விவசாயிகள் துன்பத்திற்கு உள்ளாகும்போதெல்லாம் அவர்களைப் பாதுகாக்கும் கேடயமாக எனது அரசு விளங்கி வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டபோது பல்வேறு நிவாரண உதவிகள் எனது அரசால் வழங்கப்பட்டதை நினைவுகூற விரும்புகிறேன்.

நடப்பாண்டில் வடகிழக்குப் பருவமழை நன்றாகப் பெய்துள்ள காரணத்தால் உணவு தானிய உற்பத்தி 90 இலட்சம் டன்னாக உயரும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகள் வாழ்வில் வளம் சேர்க்கும் நடவடிக்கையாக விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும் அதேநேரத்தில், காட்டாமணக்கு, இனிப்புச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு ஆகிய மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். இதற்காகத் தொழில் முனைவோர் விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு தக்க தொழில்நுட்பங்களையும், இடுபொருட்களையும் வழங்குவதோடு விளைபொருட்களை வாங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமப்புற மேம்பாட்டு வளர்ச்சிக்காக பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஊரக வளர்ச்சித் திட்டங்களின் மூலம் கிராமப்புற வேலைவாய்ப்பு வசதிகள் பெருகி உள்ளன. கிராமப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனை மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கு என 15 மாவட்டங்களில் தனித்த வர்த்தகப் பெயர்கள் மாவட்ட வாரியாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுடன் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் உடல் நலனிலும், சுற்றுப்புறச் சூழலிலும் இவ்வரசு மிகுந்த அக்கறையும் ஆர்வமும் செலுத்தி வருகிறது. முழுமையான சுகாதார இயக்கம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் முழுமையான சுகாதாரத் திட்டத்தை

ஒரு இயக்கமாகச் செயல்படுத்த ஊக்கமளிக்கும் நோக்கத்தோடு, சுத்தமான கிராம இயக்க விருது - Clean Village Campaign Award என்ற பெயரில் நான் ஒரு விருதை ஏற்கெனவே ஏற்படுத்தி சிறந்த ஊராட்சிகளுக்கு இவ்விருதினை வழங்கி வருகிறேன். தற்போது மத்திய அரசு தேசிய அளவில் முழுமையான சுகாதாரத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திய 38 கிராம ஊராட்சிகளையும் 1 ஊராட்சி ஒன்றியத்தையும் 'Nirmal Gram Puraskar Award' விருதுக்காக தெரிவு செய்துள்ளது. இவற்றுள் தமிழ்நாட்டிலிருந்து மட்டும் 13 ஊராட்சி அமைப்புகள் - 12 கிராம ஊராட்சிகள் மற்றும் 1 ஊராட்சி ஒன்றியம் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 24-2-2005 அன்று புதுதில்லியில் நடைபெற உள்ள விழாவில் இவ்விருதுகள் வழங்கப்பட்டு விருது பெற்ற ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர்கள்/தலைவிகள் ஆகியோர் கௌரவிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**உள்துறை**

சட்டம்-ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்படும் மாநிலம்; தொடர்ந்து அமைதி காக்கப்படும் மாநிலம்; மக்களிடையே நல்லிணக்கத்தைப் பேணிக் காக்கும் மாநிலம்; இந்தியாவிலேயே அமைதிப் பூங்காவாகத் திகழும் மாநிலம்; அதுவே நம் தமிழகம். (மேசையைத் தட்டும் ஒலி)

"கள்வர் இலாமைப் பொருள் காவலும் இல்லை"

என்ற இலக்கணம் கம்பர் பெருமான் காட்டுகின்ற அன்றைய அயோத்திக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு நாடு உலகத்தின் எந்த மூலையிலும் இருக்க வாய்ப்பில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

குற்றங்கள் நடக்கலாம்; அந்தக் குற்றங்களைக் கண்டுபிடித்துக் குற்றம் புரிந்தோருக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும் ஆற்றல் உள்ளதாகக் காவல் துறை இருக்க வேண்டும். குற்றங்கள் குறைய நடவடிக்கை எடுக்கும் ஆற்றல் உள்ளதாக இருக்க வேண்டும். அத்தகையதொரு காவல் துறைதான் தமிழ்நாடு அரசின் காவல் துறை.

குற்ற நிகழ்வுகளில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் விருப்பு வெறுப்பு எதுவுமின்றி, வேண்டியவர் வேண்டாதவர் என்று வேறுபடுத்திப்



பார்க்காமல் சட்டத்தின்முன் நிறுத்தி உரிய தண்டனையை விரைந்து பெற்றுத் தந்தால்தான் காவல் துறை தன் கடமையைச் சிறப்புற ஆற்றியதாகக் கருத முடியும். தமிழகக் காவல் துறை அவ்வாறு சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை நான் பெருமையுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை மட்டும் கூற விழைகிறேன். 2-11-2004 அன்று வட பழனி அருகே கொலை முயற்சி நடத்தப்பட்டதில் தாக்கப்பட்டவர் 3-11-2004 அன்று இறந்து விட்டார். இந்தக் கொலை வழக்கை விசாரித்த காவல் துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 44 நாட்களில், அதாவது 16-12-2004 அன்று, விரைவு நீதிமன்றம் இக்குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட 4 குற்றவாளிகளுக்கும் தண்டனை வழங்கியுள்ளது. இவ்வாறு ஒரு கொலைக் குற்றத்தில் 44 நாட்களிலேயே தண்டனை பெற்றுத் தந்தது இந்தியாவிலேயே இது முதல் முறை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்கள் 2-2-2005 அன்று பேசியபோது, காவல் துறையில் ஒரு புதிய போக்கைப் பார்ப்பதாகவும் குற்றப் பத்திரிகையை Court-க்கு எடுத்துச் சென்று தாக்கல் செய்வதற்கு முன்னால் கோயிலுக்கு எடுத்துச் சென்று பூஜை செய்கின்ற ஒரு புதிய முறையைப் பார்ப்பதாகவும், இது யாருடைய உத்தரவின் பேரில் நடைபெறுகிறது என்றும் கேட்டார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்கள் நாத்திகவாதி அல்ல, அவர் ஒரு கடவுள் பக்தர் என்றே நான் நம்புகிறேன். அதனால்தான் இதனை அவர் தெரிந்துதான் பேசினாரா என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. முக்கியமான எதையும் செய்வதற்கு முன்னால் ஆண்டவனின் அருள் வேண்டி வணங்குவது நமது நாட்டின் பாரம்பரியம் என்பதை அவர் மறந்து விட்டாரா? (மேசையைத் தட்டும் ஒலி) மாணவ, மாணவிகள் தாங்கள் தேர்வு எழுதப் போவதற்கு முன் தாங்கள் சார்ந்துள்ள சமயத்தின்படி கோவில்களுக்கோ தேவாலயங்களுக்கோ மசூதிகள் அல்லது தர்காக்களுக்கோ சென்று வணங்கி வழிபடுகின்றார்கள். அதேபோல, வணிகர்கள் புதிய வியாபாரங்களைத் தொடங்கும்போதும், தொழிலதிபர்கள் புதிய தொழில்கள் தொடங்கும்போதும், தாங்கள் நம்பிப் பின்பற்றும் மதங்களைச் சார்ந்த கடவுள்களை வணங்கித்தான்

தொடங்குவது வழக்கம். எடுத்த காரியம் யாவினும் வெற்றி அருள்க என்று ஆதி சக்தியாம் மஹா காளியின் பாதம் பணிந்து மகாகவி பாரதியே பாடல் இயற்றியுள்ளார். ஆக, தாங்கள் மேற்கொள்கின்ற செயல் வெற்றிகரமாக அமைந்திட வேண்டும் என்று ஒவ்வொருவரும் எண்ணுவதும், அதன் அடிப்படையில் ஆண்டவனின் அருள் வேண்டுவதும் இயற்கை இல்லையா? இந்த வகையில் பார்த்தால் ஒரு காவல் துறை அதிகாரி தான் மேற்கொண்ட புலனாய்வில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும்முன் தான் நம்புகின்ற கடவுளை வணங்கி அந்தப் பணியைத் தொடர்வதில் என்ன தவறு இருக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

இது அரசின் உத்தரவா என்று சட்டமன்ற உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி கேட்டார். காவல் துறை வழக்குகளில் சட்டம் தன் கடமையைச் செய்யுமே தவிர, யாரும், யாருக்கும் எந்த உத்தரவும் பிறப்பிப்பதில்லை. மக்கள் தங்களது கடவுள் நம்பிக்கைக்குரிய திருத்தலத்திற்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் எந்தச் சட்டமும் இல்லை. மசூதிக்கோ, தர்காவுக்கோ ஒரு முஸ்லீம் செல்வதையோ, குருதுவாராவுக்கு ஒரு சீக்கியர் செல்வதையோ, மாதா கோவிலுக்கு ஒரு கிருத்துவர் செல்வதையோ, தவறு என்று எவரும் சொல்வது கிடையாது. அதேபோல, ஒரு இந்துவும் தான் விரும்புகின்றபடி கோவிலுக்குச் செல்வது அவரது தனிப்பட்ட உரிமையாகும்.

மதச்சார்பின்மை என்ற கொள்கையை கொலை செய்ததற்கு ஒப்பான செய்கை இது என்று சட்டமன்ற உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் கூறினார். மதச்சார்பின்மை என்பதற்கு என்னதான் பொருள்? மதச்சார்பின்மை என்பது மதங்களை மறுப்பதோ அல்லது கடவுளை மறுப்பதோ அல்ல. மதச்சார்பற்றவர் என்றால் அவர் நாத்திகவாதி என்று பொருள் ஆகாது. மதச்சார்பின்மை என்றால் இப்படித்தான் என்று பலர் தவறான கண்ணோட்டத்தில் இருக்கிறார்கள். மதச்சார்பின்மை என்பது அனைத்து மதங்களும் ஒன்றே என்று எண்ணுவது தானே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) மதங்களை மறுப்பதோ, கடவுள்களை மறுப்பதோ அல்ல. தான் வணங்குகின்ற தெய்வத் திருத்தலத்திற்கு ஒருவர் செல்வதை விவாதத்திற்கு உரிய ஒன்றாக ஆக்கக் கூடாது.

காவல் துறை அதிகாரிகளோ, காவலர்களோ தங்களது தெய்வத் திருத்தலத்திற்குச் செல்லக் கூடாது என்று தடுத்திட சட்டம் எதுவும் கிடையாது. காவலர்களும் நாட்டின் மற்ற குடிமக்களைப்



போன்றவர்கள்தான். தாங்கள் நம்புகின்ற தெய்வத் திருத்தலத்திற்குச் செல்ல அவர்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

4-2-2005 அன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசும்போது, தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகள் அதிகரித்துள்ளன என்று ஆதாரமற்ற ஒரு குற்றச்சாட்டைக் கூறினார். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன என்பதுதான் உண்மை. கொலைக் குற்றங்கள் 4.6 சதவீதமும், கூட்டுக் கொள்ளை 17 சதவீதமும், கன்னக் களவு மற்றும் திருட்டு 10 சதவீதத்திற்கு மேலும் குறைந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், 2004 ஆம் ஆண்டில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் 2.7 சதவீதம் அதிகரித்துள்ளது என்று ஒரு செய்தி வெளிவந்துள்ளதாகக் கூறியுள்ளார். கற்பழிப்பு, மானபங்கம், ஆட்கடத்தல், வரதட்சணைக் கொலை, கணவராலும், உறவினராலும் துன்புறுத்தப்படுதல், பெண்களைக் கடத்துவது, வரதட்சணைக் கொடுமை சட்டத்தின்கீழ் வரும் குற்றங்கள் ஆகியவை பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்று வரையறுக்கப்படும். இவை இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் குற்றங்கள் ஆகும். உண்மையில் 2004 ஆம் ஆண்டில் இக்குற்றங்களின் எண்ணிக்கை 0.68 சதவீதம் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பாலியல் துன்புறுத்துதல், அதாவது, sexual harassment என்பது, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்னும் வகைப்பாட்டின்கீழ் வராமல் தனிப் பிரிவாக வைக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு இழைக்கப்படும் இந்தத் தீங்கு, எனது அரசால் இயற்றப்பட்ட '2002 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற திருத்தச் சட்டத்தின்' கீழ் வகைப்படுத்தப்பட்ட தண்டனைக்குரிய குற்றம் ஆகும். அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் காவல் நிலையங்களில் பெண் காவலர் பணி அமர்த்துதல் போன்ற பெண்களின் பாதுகாப்பு உணர்வை வலுப்படுத்தும் பல நடவடிக்கைகள் என்னுடைய அரசால் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, பாலியல் துன்புறுத்துதல் நடைபெறும்போது அது காவல் நிலையத்தில் புகார் செய்யப்படுவது

ஊக்குவிக்கப்படுகிறது. பெண்கள் தைரியமாகச் சென்று புகார் செய்கிறார்கள். மேலும், காவல் துறையினர், பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் நோக்கத்தில், பேருந்து நிறுத்தங்கள், பெண்கள் கல்லூரிகள் மற்றும் திரை அரங்குகள் அருகில் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டு இக்குற்றங்களில் ஈடுபடுவோர்கள்மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கின்றனர். இதன் அடிப்படையில்தான் இந்தப் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட புகார்கள் 2003 ஆம் ஆண்டில் 881 ஆக இருந்தது, 2004 ஆம் ஆண்டில் 1,081 ஆக உயர்ந்துள்ளது. எனவே, இந்தப் பிரிவில் புகார்கள் பதிவு செய்யப்படுவது அதிகரித்திருப்பதை ஒரு குறைபாடாகக் கருத இயலாது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் கூறியதுபோல் மகளிருக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கையுடன் இதனையும் சேர்த்து கணக்கிட்டு ஒப்பிடுதல் சரியான அணுகுமுறையாக இருக்காது. எனது தலைமையின்கீழ் இயங்கும் இந்த அரசு, பெண்களைப் பாதுகாப்பதிலும், பெண்களின் உரிமையை நிலைநாட்டுவதிலும் கண்ணும்கருத்துமாக இருக்கும்போது சரியான முறையில் ஒப்பீடு செய்யாமல் குற்றம் சுமத்துவது அழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஆதிதிராவிடர் நலன்**

அடித்தளத்து மக்களின் வாழ்வு மேம்பாடு அடைய மகத்தான முயற்சிகளை நான் மேற்கொண்டு வருகிறேன். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையும் வண்ணம் அவர்களுக்கான பல்வேறு புதிய திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார நிலையையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் நோக்குடன் 2 இலட்சம் ரூபாய் மதிப்பில், 50 சதவீதம் மானியமும், 50 சதவீதம் கடனாவும் வழங்கி, ஆதிதிராவிட மகளிர் நிலம் வாங்கும் ஒரு புரட்சிகரமான திட்டத்தை 2004 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நான் அறிமுகப்படுத்தினேன்.

2004 ஜனவரித் திங்களில் தொடங்கப்பட்ட திட்டத்தின்கீழ் பயன்பெற இதுவரை 11,077 மகளிர் விண்ணப்பித்துள்ளனர். இதுவரை வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள 6,970 விண்ணப்பங்களில் 818 விண்ணப்பங்களுக்கு மட்டுமே வங்கிகள் இதுவரை ஒப்புதல் அளித்துள்ளன. இதுபோன்ற



பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வங்கிகள் உடனடியாக கடன் வழங்க முன்வர வேண்டும். வங்கிகளது ஒத்துழைப்புடன் நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் 7,000 பேருக்கு இந்த உதவிகள் வழங்கப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் கல்வியைத் தீவிரமாக ஊக்குவிக்கும் அடிப்படை நோக்கத்துடன் தமிழ்நாட்டில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் பள்ளிக்கு வருவதைப் பாதியிலே நிறுத்துகின்ற நிலையைத் தவிர்த்து தாங்கள் தொடர்ந்து கல்வி பயில வேண்டும் என்ற ஊக்கத்தை அவர்களுக்கு அளிக்கும் வகையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக, மேல்நிலைக் கல்வி, அதாவது 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்கும் சிறப்பான திட்டத்தை 2001 ஆம் ஆண்டில் நான் கொண்டு வந்தேன். கடந்த 2001 முதல் 2004 வரையிலான மூன்று ஆண்டுகளில் மொத்தம் 1,54,410 மாணவிகளுக்கு 22.52 கோடி ரூபாய் செலவில் இலவச சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் 88 கோடி ரூபாய் செலவில் 49,104 சைக்கிள்கள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

பிற்பகல் 1-50

சிறந்த கல்வி அறிவை அளிப்பதன் மூலம் ஆதிதிராவிட, பழங்குடி மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையில் நிரந்தர மாறுதலை ஏற்படுத்த இயலும் என்பதால் கல்வி வளர்ச்சிக்கு எனது அரசு முன்னுரிமை அளிக்கிறது. எனவே, மாணவ மாணவியர் தங்கிப் படிக்கும் விடுதிகள், அவர்கள் கல்வி கற்க ஊக்கமளிக்கும் வகையில் சிறப்புற அமைய வேண்டும் என்பதில் நான் தனிக் கவனம் செலுத்தி வருகிறேன்.

ஆதிதிராவிட மாணவ மாணவியருக்கான தங்கும் விடுதிகளின் மொத்த எண்ணிக்கை 1,076 ஆகும். 2001 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் இதில் தனிக் கவனம் செலுத்தி, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த 574 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் அமைய வேண்டுமென முடிவெடுத்து கடந்த நான்கு ஆண்டுகளில் 155.30 கோடி ரூபாய் செலவில் 493 விடுதிக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொண்டேன். இதில் 264 விடுதிகளுக்குப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் முடிவில் சொந்தக் கட்டடங்களற்ற ஆதிதிராவிட மாணவ, மாணவிகள் விடுதிகளே இல்லை

என்ற நிலை உருவாக்கப்படும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்தவர்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகள் தங்களது பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி கற்க ஊக்கமளித்து, அவர்கள் சமுதாயத்தில் சுதந்திரமாகவும் தன்னம்பிக்கையுடனும், துணிவோடும் செயல்பட அடித்தளம் அமைத்துத் தரும் வகையில், மேல்நிலைக் கல்வி பயிலுகின்ற, அதாவது 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகள் அனைவருக்கும் இலவச சைக்கிள்களை வழங்கும் திட்டத்தை நான் சமீபத்தில் தொடங்கி வைத்தேன். 2004-2005 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் 2,254 மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலுகின்ற 2,49,750 மாணவிகளுக்கு 44.76 கோடி ரூபாய் செலவில் இலவச சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவ மாணவிகள் தங்கும் வசதிக்காக மொத்தம் 972 விடுதிகள் இயங்குகின்றன. கடந்த 2001 ஆம் ஆண்டு நான் தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றபோது இவற்றில் 202 விடுதிகள் மட்டுமே சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வந்தன. மீதமுள்ள 770 விடுதிகளும் வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கி வந்தன. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அத்தனை விடுதிகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்ட நான் ஆணையிட்டேன். இதன்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 99.99 கோடி ரூபாய் செலவில் 314 விடுதிகள் கட்ட ஆணையிட்டு, 190 விடுதிகளின் கட்டடப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 124 விடுதிகளின் கட்டுமானப் பணிகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் கட்டடங்களில் வாடகைக்கு இயங்கும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட நான் தற்போது



ஆணையிட்டுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடும், உள்ள நிறைவோடும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 100 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் இந்தப் பணி 2005-2006 ஆம் நிதியாண்டின் இறுதிக்குள் முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன். ஒரு மாநிலம் மனித வளத்தில் மேம்பட்டு இருக்க வேண்டுமெனில் அங்குள்ள மக்கள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். 'அனைவருக்கும் நல்வாழ்வு' என்ற எங்கள் இலட்சியத்தை இன்னும் முனைப்புடன் நிறைவேற்ற வேண்டும் என்றால், அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் மருத்துவர் பணியிடங்கள் முழுவதும் நிரப்பப்பட்டு இருக்க வேண்டும். எனவேதான், இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது காலியாக உள்ள 2,322 மருத்துவர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இப்பணியிடங்கள் இன்னும் மூன்று மாத காலத்திற்குள் நிரப்பப்பட்டுவிடும் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், ஏதோ சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்த தி.மு.க.மட்டும்தான் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது போன்ற , தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தார். நான் ஏற்கெனவே இத்திட்டம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்று விரிவாகக் கூறியுள்ளேன். இத்திட்டத்திற்கு வித்திட்டவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

நானும் இராஜ்ய சபாவில் உறுப்பினராக இருக்கும்போது, இதனைச் செயல்படுத்த வலியுறுத்தி இருக்கிறேன். தற்போது இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றால், அதற்கு வேண்டிய சுற்றுச்சூழல் அனுமதி பெறவேண்டும். இது சம்பந்தமான பொதுமக்களின் கருத்துகளை நேரடியாகக் கேட்டறியும் கூட்டங்கள் முழுவதுமாக நடைபெற்று முடிந்துவிட்டன. தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வரக்கூடிய அறிக்கையின் அடிப்படையில், மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதனைப்

பரிசீலிக்க வேண்டும். இதுதான் தற்போதைய நிலை. (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் எங்களது பணி தொடர்கிறது. மக்களின் கனவுகள் எங்களால் திட்டங்களாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன. திட்டங்கள் உடனடியாகச் செயல்வடிவம் பெற்று வருவதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். அதைவிட முக்கியமாக செயலாக்கம் பெற்ற திட்டங்களின் பயன்கள் உரியவர்களைச் சென்று சேர வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இலக்குகளை நிர்மாணிக்கிறோம்! அந்த இலக்குகளை அடைவதற்கு கணக்கியல் நுட்பத்தோடு, அதாவது, mathematical precision-னோடு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

எதையும் திறம்படச் செய்வதே எங்களது இலட்சியம்! அதை விரைவில் செய்ய வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்!

மனம் கலங்காது, ஆராய்ந்து ஏற்ற தொழிலை சோர்வு கொள்ளாமல், காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும் - இது தெய்வத் திருமறை வழங்கிய திருவள்ளுவப் பெருமானின் வாசகம்.

'கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்'

இந்தக் குறளின் பொருளே எனது செயல்பாட்டின் கோட்பாடு.

'தூக்கங் கடிந்து செயல்' என்பதற்கு 'காலம் தாழ்த்தாமல்' என்பது பொருள். அந்த வரியின் வார்த்தைப் பொருளில் in the literal sense of the term என்று எடுத்துக்கொண்டால், தூக்கத்தை நீத்துச் செயல்பட வேண்டும் என்று சொல்லப்படுவதாக எடுத்துக்கொள்ளலாம். அப்படித்தான் நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம், நான் கண்விழித்துச் செயல்படுகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதிலே மகிழ்ச்சியும் அடைகிறேன். காரணம் ஒவ்வொரு நாளும் தமிழகம் முன்னேற வேண்டும், ஒவ்வொரு தமிழர்க்கும் மேன்மை கிடைக்க வேண்டும் என்பதே எனது இதயத் துடிப்பாக என்றும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டம் ஏதோ திமுகவுக்கு மட்டும் சொந்தம் என்று நான் குறிப்பிட்டதைப்போல முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், 3 ஆண்டுகாலமாக தொடர்ந்து ஆளுநர் உரையிலும் குறிப்பிட்டு இருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டேன். இது 150 ஆண்டுகாலமாக தமிழகத்திலே இருக்கின்ற பிரச்சினை. அண்ணா அவர்கள் காலத்திலே இருந்து, தி.மு.க. மாநாடுகளிலே வற்புறுத்தி வருகிற பிரச்சினை. எனவேதான் கலைஞருடைய இந்த வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசு இப்போது அனுமதி தந்து இருக்கிறது. அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்பதற்காகத்தான் இங்கே சுட்டிக்காட்டினேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரைக்குப் பதில் அளிக்கும் முதலமைச்சர் அவர்கள் எல்லாத் திட்டங்களையும் சொன்னார்கள். நான் நேற்றுகூட அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். நேற்று இரண்டுநாள் ஊரில் இருந்தேன். குடிதண்ணீர்ப் பிரச்சினை மிக மிகக் கடுமையாக இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அமைச்சர் சொல்லிவிட்டார்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் நான் சொல்கிறேன். வேலூர் மாவட்டத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினை கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் ஒரு வார்த்தை சொன்னால் மக்கள் மகிழ்ச்சியடைவார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அமைச்சர் சொல்லிவிட்டார்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திற்கும் நான்தான் முதலமைச்சர். நிச்சயமாக அந்த மாவட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சினை கவனிக்கப்படும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு பணியிடங்கள்...... (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். ஒரு clarification-தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. புது விவாதத்திற்கு எல்லாம் இடமில்லை. விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை. திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.



**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"2005 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஏ. ஹக்கீம் அவர்களால் 2-2-2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## 5. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம். அனைவருக்கும் நன்றி.

பின்னர், பேரவை பிற்பகல் 2-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

13. (i) 19-5-2004 ஆம் நாளிட்ட தமிழக அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1)/ வணிக வரி/43 (b-2) /2004 ஆம் எண்ணுள்ள வணிக வரிகள் துறையின் அறிவிக்கையினை ரத்து செய்தும்; (ii) திருவாளர்கள் அசோசியேட்டட் சர்ஜிகல்ஸ் (இந்தியா) என்ற நிறுவனம், சென்னை-3 இல் உள்ள அரசு பொது மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இதய நோய் மருத்துவ நிறுவனத்திற்கு 23-12-2000 ஆம் நாளிட்ட 1612/2000 ஆம் எண் பொருள்விவரப்பட்டி மூலம், எத்திலின் ஆக்ஸைடு ஸ்டெரிலைசர் என்கிற மருத்துவக் கருவி ஒன்றின் விற்பனை மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்கு அளித்தும், வணிக வரிகள் துறையின் 18-8-2004 ஆம் நாளிட்ட 139 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

14. ஒன்றாம் விவர அட்டவணையின் D பகுதியின் 8 ஆம் பதிவின் கீழ் வரும் திரைப்படம் தொடர்பான உபகரணங்கள் மற்றும் திரைப் படப்பிடிப்பு நிலையங்கள், ஆய்வுக்கூடங்கள், ஒளி-ஒலிப்பதிவுக் கூடங்கள் ஆகியவற்றில் உள்ள திரைப்பட உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் ஒளி-ஒலிக்காட்சி மற்றும் செயற்கைக்கோள் உரிமைகளுக்கான குத்தகை ஆகியவற்றின் மீது 3-A ஆம் பிரிவின்கீழ், வணிகர்கள் செலுத்தத்தக்க விற்பனை வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் 29-9-2004 ஆம் நாளிட்ட 150 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

15. கோயம்புத்தூர், ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா தொழிற்பிரிவு மற்றும் பொறியியல் பள்ளி, மாணவர் குறிப்பேடுகளை தயாரித்து ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா நடத்தி வரும் கல்வி நிறுவனங்களுக்கு செய்யும் விற்பனை மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரிகள் துறையின் 29-10-2004 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

[2005 பிப்ரவரி 7

16. (i) 2-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள II/(1)/CT/55/2002 என்ற எண் கொண்ட அறிவிக்கையினை ரத்து செய்தும், (ii) சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்திலுள்ள சுங்கத் தீர்வையற்ற விற்பனைக் கடையில், தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் கடிகாரங்களின் விற்பனைக்காக திருவாளர்கள் கனிமங்கள் மற்றும் உலோகங்கள் வர்த்தக நிறுவனம் செலுத்தத்தக்க வரி, கூடுதல் வரி மற்றும் மேல் வரி ஆகியவைகளைப் பொறுத்தமட்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் தொடர்புடைய விதிகள் மற்றும் வழிகாட்டிக் குறிப்புகளுக்கிணங்க, விற்பனைத் தொகையை வெளிநாட்டு கரன்சியில் அல்லது அந்நியச் செலாவணியில் செலுத்த வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு வரி விதிப்பிலிருந்து விலக்களித்தும் வணிக வரிகள் துறையின் 19-10-2004 ஆம் நாளிட்ட 162 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழும் மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவின்கீழும் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

17. தமிழ்நாட்டு மீனவர்களுக்கு வழங்குவதற்காக, தமிழக அரசின் மீன்வளத் துறை இயக்குநருக்கு, பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் மேற்கொள்ளும் உயர்வேக டீசல் எண்ணெய் விற்பனைக்கு, செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து, வணிகவரித் துறையின் 29-10-2004 ஆம் நாளிட்ட 170 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

18. 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவி (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் 29-10-2004 ஆம் நாளிட்ட 338 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

19. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)



2005 பிப்ரவரி 7]

20. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

21. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

22. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

23. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

24. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

25. 2003-2004 ஆம் ஆண்டுக்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

26. 2003-2004 ஆம் ஆண்டுக்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் இருபதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

27. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் கணக்குகள் மற்றும் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

[2005 பிப்ரவரி 7

*28. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*29. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. (1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*30. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*31. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தி ஆறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*32. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு உப்பு நிறுவன்த்தின் முப்பதாவ்து ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*27. 29-5-2003 ஆம் நாளிட்ட தமிழக அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரித் துறையின் II (1)/வணிக வரிகள்/30/(a-3)/2003 ஆம் எண் அறிக்கையில் திருத்தம் செய்து வணிக வரிகள் துறையின் 9-8-2004 ஆம் நாளிட்ட 125 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.*

*28. 28-7-2004 ஆம் நாளன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற 2002-2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கையில் உள்ள பிழை திருத்தம்*



2005 பிப்ரவரி 7]

*29. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை (2003-2005)*

*30. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை (2003-2005)*

*31. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)*

*32. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)*

*****

226629

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.